# முண்டகோபநிஷத்.

## அத² முண்ட³கோபநிஷத்³பா⁴ஷ்யாரம்ப⁴:.

க. ப்³ரஹ்மா தே³வாநாம் ப்ரத²மஸ்ஸம்ப³பூ⁴வ விஶ்வஸ்ய கர்தா பு⁴வநஸ்ய கோ³ப்தா । ஸ ப்³ரஹ்மவித்³யாம் ஸர்வவித்³யாப்ரதிஷ்டா²மத²ர்வாய ஜ்யேஷ்ட²புத்ராய ப்ராஹ ॥

౧. బ్రహ్మాదేవానాం ప్రథమస్సంబభూవ విశ్వస్యకర్తాభువనస్యగోప్తా।
సబ్రహ్మవిద్యాం సర్వవిద్యాప్రతిష్ఠా మథర్వాయజ్యేష్ఠపుత్రాయప్రాహ॥

(ப-ம்.) விஶ்வஸ்ய கர்தா - எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கின்ற, பு⁴வநஸ்ய கோ³ப்தா - படைத்த உலகத்தைக்காக்கின்ற, தே³வாநாம் ப்ரத²ம: - இந்திரன்முதலிய தேவர்களுக்கு முதல்வனாகிய, ப்³ரஹ்மா - நான்முகன், ஸம்ப³பூ⁴வ - ப்ரம்மஜ்ஞானமுடையவனானான், ஸ: - அந்தப்ரம்மா - ஸர்வவித்³யாப்ரதிஷ்டா²ம் - எல்லாவித்யைக்கும் ப்ரதிஷ்டையான, ப்³ரஹ்மவித்³யாம் - ப்ரம்மவித்யையை, ஜ்யேஷ்ட²புத்ராய அத²ர்வாய ப்ராஹ - ஜ்யேஷ்டகுமாரனாகிய அதர்வனென்பவனுக்குச் சொன்னான்.

ஸம்-ஹா.—இவ்வுபநிஷத்து அதர்வண வேதத்துள்ளாயது. மேலேசொல்லுகிற ப்ரம்மவித்யையைஸ்துதிப்பதற்கு ஸம்ப்ரதாயபரம்பரை சொல்லப்படுகிறது பெரியோரிடத்தில் வருத்தப்பட்டுக்கேட்டறிந்த புருஷார்த்தஸாதநமாகிய வித்யை என்றுகொண்டாடிப் புகழ்ந்தாலன்றோ கேட்பாருக்கு உருசிபிறந்துவேண்டுவார்கள் இந்தவித்யையின் ப்ரயோஜநத்தை இவ்வுபநிஷத்திலேமேலே வெளியிடப்படுகிறது, "பித்யதே" என்பது முதலிய சுலோகங்களால் இந்த வித்யைப்பெற்றவர் ஸம்ஸாரபந்தம் நீங்கி மோக்ஷத்தைபெறுவார்களென்று சொல்லப்படுகிறது. அபரவித்யை ஸாக்ஷாத்மோக்ஷஸாதனமாகாமையால் பரவித்யைமுக்யமென்றும் இதுமுக்யமானதற்குக்காரணத்தையும் நற்குருவருளாலிவ்வித்யை யடையப்பட வேண்டுமென்பதையும் "பரீக்ஷ்யலோகாந்" என்பதுமுதலாயவாக்கியங்களிலேயோதும். ஜ்ஞாநமாத்திரத்தில் எல்லாஆச்ரமத்தாருக்கு மதிகாரமுண்டானாலும் இப்படியுத்தமமாயப்ரம்மவித்யையில் ஸந்யாஸிக்கே முக்யாதிகாரம். கர்மாநுஷ்டாநத்தோடுசேர்ந்தக்ருஹஸ்தாச்ரமாதிகள் இவ்வித்யைக்குச்சேர்ந்தவையல்ல. கர்தாவாகாதப்ரம்மமென்று தன்னை

http://acharya.org

யுணருகையாகிற வித்யைக்கும் நான்கர்த்தாவாகிறேனென்று கர்மங்களையநுஷ்டிப்பதற்கும் சேர்க்கைகூடாதன்றே "பைக்ஷாசர்யஞ்சரந்த:" "ஸந்யாஸயோகாத்" என்பவைமுதலானவிடங்களிலே இதுவிளங்கச்சொல்லப்பட்டது. க்ருஹஸ்தாச்ரமத்திலிருந்தவர் இந்தப்ரம்மவித்யையை உபதேசிக்கின்றமையால் அவர்க்கும் ப்ரம்மவித்யையிலதிகாரம் கூடுமென்றுசிலர்சொல்லுவர் அதுபொருந்தாது கீழேசொல்லியபடி கர்மமும்வித்யையும் விரோதப்பட்டவையானதால் இக்தலிங்கம் ஸாதியாது இப்படிப்பட்ட வித்யையையோதுகிற இவ்வுபநிஷத்திற்கு சுருங்கவ்யாக்யாநம் பண்ணுகிறேம் இந்த உபநிஷத்தென்கிற பேராலேயே இவ்வித்யையின் பெருமைவிளங்கும் தருமம் ஜ்ஞாநம் வைராக்கியம் ஐசுவரியம்முதலியவற்றால் மற்றோரை மிக்கானுகின்றமையால் இந்திரனுள்ளிட்ட தேவக்குழாங்களில் சிறந்தவனாய பிரமன்பலவகைப்பட்ட ஸ்ருஷ்டிகளில் ஒருஸ்ருஷ்டியில் முதல்வனாய அதர்வனென்பவனுக்கு எல்லாவித்யைகளுக்கும் நிலையிடமாய ப்ரம்மவித்யையுபதேசித்தான். இங்குபிரமனையும்வித்யையும்கொண்டாடியது வித்யையைஸ்துதிசெய்வதற்கு.

ரா-ஹா.—ஸ்ருஷ்டிகர்த்வான ப்ரம்மா தன்முதல்குமாரனாகிய அதர்வனென்பவனுக்கு ப்ரம்மவித்யையையுபதேசித்தான். ப்ரம்மத்தையறிந்தபோது அறியவேண்டுமதொன்றுமில்லை யானதால் எல்லாவித்யைக்கும் ப்ரம்மவித்யையை ப்ரதிஷ்டையென்றது வித்யையில் ப்ரவ்ருத்திபிறப்பிப்பதற்கு கதைசொல்லப்படுகிறது.

௨. 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑍇 𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑍇𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌽𑌥𑌰𑍍𑌵𑌾 𑌤𑌾𑌂 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚𑌾𑌙𑍍𑌗𑌿𑌰𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌮𑍍 । 𑌸 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌾𑌯 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌹𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑍋𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑌾𑌮𑍍 ॥

௨. అథర్వణేయాం ప్రవదేత బ్రహ్మాఽథర్వా తాం పురోవాచాంగిరే బ్రహ్మవిద్యామ్।
సభారద్వాజాయ సత్యవాహాయ ప్రాహ భారద్వాజోఽంగిరసే పరావరామ్॥

(ப-ம்.) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑍇 𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌦𑍇𑌤 - பிரமனதர்வா என்பவனுக்கு எந்தவித்யையையுபதேசித்தானோ, 𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌅𑌥𑌰𑍍𑌵𑌾 𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑍇 𑌪𑍁𑌰𑌾 𑌉𑌵𑌾𑌚 - அந்தப்ரம்மவித்யையை அதர்வாஎன்பவர் தன்னுடைய சிஷ்யராகிய ஆங்கீஎன்பவருக்குச்சொன்னார், 𑌸𑌃 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌾𑌯 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌹𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹- அந்த ஆங்கீஎன்பவர் பாரத்வாஜகோத்ரியாகிய ஸத்யவாஹரென்பவருக்குச்சொன்னார், 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃-𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑌾𑌮𑍍- அறியாதாரிடத்தினின்றும் அறிந்தோரிடத்தி லறியவேண்டுகையால் பராவரையென்கிற அந்தபரம்மவித்யை அங்கிராஎன்பவருக்குஅந்தபாரத்வாஜராகியஸத்யவாஹர் சொன்னார்.

பதார்த்தயார்த்தபேதங்கள்.

பதஉரையாலே விளங்கும் கருத்து சங்கரராமாநுஜ பாஷ்யங்களிரண்டுக்குமொக்கும் சிறிதும் பேதமில்லை.

௩. 𑌶𑍌𑌨𑌕𑍋 𑌹 𑌵𑍈 𑌮𑌹𑌾𑌶𑌾𑌲𑍋𑌽𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍁𑌪𑌸𑌨𑍍𑌨𑌃 𑌪𑌪𑍍𑌰𑌚𑍍𑌛 । 𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍁 𑌭𑌗𑌵𑍋 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌿𑌦𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌂 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 ॥

௩. శౌనకో హ వై మహాశాలోఽంగిరసం విధివదుపసన్నః పప్రచ్ఛ । కస్మిన్ను భగవో విజ్ఞాతే సర్వమిదం విజ్ఞాతం భవతీతి॥

http://acharya.org

(ப்-ம்.) महाशालः शौनकः - க்ருஹஸ்தாச்ரமிகளில் சிறந்தவராய சுநகரென்பவரின்குமாரர், अङ्गिरसं विधिवदुपसन्नः पप्रच्छ - அங்கிராஎன்பவரை சாஸ்திரப்படியடைந்து வினவினார், कस्मिन्नु भगवो विज्ञाते सर्वमिदं विज्ञातं भवतीति - எல்லாமறிந்தமுநிவரே எப்பொருளையறிந்தாலிஃதெல்லா மறியப்பட்டதாமென்று வினவினார்.

ஸம்-ஹா.—இங்கு ஆசாரியரிடத்தில் விதிப்படி யடைந்தது சொல்லப்பட்டாலும் மேலோர்க்கும் நமக்குமிந்த விதி முக்யமேயாம். ஆனதால் நடுவில் கூறப்பட்டது.

ரா-ஹா.—சுநகரின் குமாரராகிய மகாகிருகஸ்தர், ஸமித்பாணி: என்கிற விடத்தில் சொல்லப்பட்ட விதிப்படியடைந்து ஆசாரியராகிய அங்கிரஸரை எப்பொருளையறிந்தா லிவ்வுலகமெல்லாமறியப்படும். முக்காலத்தையுமறிந்தமுநிவரே மண்ணையறிந்தபோது அதின்காரியமாகிய குடமுதலியவை யெல்லாமறியப்படுவதுபோலொரு காரணப்பொருளையறியவே எல்லாப்பொருளுமறியப்படுமெல்லவோ; அக்காரணப்பொருள்யாது என்று வினவினாரென்று இந்த சுருதிக்குப்பொருள். இங்கு எல்லாமென்பதற்கு ஸ்தூலமானசித்து அசித்து இவைகளுடன் சேர்ந்த பரப்ரம்மமோ; அல்லது சித்து மசித்துமேயோ; பொருளென்று கொள்வது. இந்த சௌநகர் ப்ரம்மஸ்வரூபத்தை யறியாதே ப்ரச்நம்பண்ணுகிறாராகையால் இவர் சொல்லிய வாக்கியத்தில் சேர்ந்த எல்லாமென்கிற பதத்திற்கு ப்ரம்மத்தையறிந்தவர் வாயில் பிறந்த சொல்லுக்குப்போல் பரப்ரம்மம் வரையில் பொருள்கொள்ளக்கூடாமையால் முந்திய கல்பம் தள்ளுண்டது. மேலும், அந்தபுருஷனால் இவ்வுலகெல்லாம் நிறைந்திருக்கின்றது எனமேல் விடையளிக்கும் வாக்கியத்தில் எல்லாமென்கிற பதத்திற்கு புருஷனைத்தனித்துச்சொல்லி விடுகையால் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களேபொருளானதால் அங்குபோலிங்கும் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே பொருளாகலாமன்றி இவைகளோடு சேர்ந்த ப்ரம்மம் பொருளாகக்கூடாது. ஆகில் விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே பொருளென்று இரண்டாவது கல்பத்தைக்கொள்ளுவோமென்றால் அந்த கல்பத்தில் மேலேசொல்லப்படும் அக்ஷரபரப்ரம்மம் ஸ்தூல சிதசித்துக்களில் வேறாயதானதால் அவைகளுக்கு இந்த அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமாவது சேராது. ஆகையால் இங்குப்பொருளமையும் வழியாதெனில், கூறுகின்றோம். விசேஷணமாகிய ஸ்தூல சிதசித்துக்களே இங்கு, எல்லாமென்கிற பதத்திற்குப்பொருள். மேலே சொல்லப்படுகிறபடி அக்ஷரபரப்ரம்மம், தன்னில் வேறாய ஸ்தூல சிதசித்துக்களுக்கு உபாதாநகாரணமாவதும் பொருந்தும். பிந்நமானாலும் உபாதாநகாரணமாகலாம். அபின்னமே உபாதாநகாரணமென்கிற நிர்பந்தமில்லை. முன்னுள்ள ஸூக்ஷ்மாவஸ்தையோடு கூடிய பொருள் பின்னுள்ள ஸ்தூலாவஸ்தையோடு கூடிய பொருளுக் குபாதாநகாரணமாம். அவஸ்தையை யுடைத்தாயிருக்கை சித்து அசித்து ஈச்வரன் என்கிற விம்மூன்றுக்குமுண்டு. ஸாக்ஷாத்தாக சித்துக்கும் சரீரம் தர்மபூதஜ்ஞாநம் இவைகளின் வழியே சித்துக்கும் இவ்விரண்டின் வழியாக ஈச்வரனுக்கும் அவஸ்தையுண்டாகும். என்றிவ்வளவே பேதம். ஆக மகத்தத்வாவஸ்தை அஹங்காரதத்வாவஸ்தை முதலியவருகிற ஸ்தூலாவஸ்தையையுடைத்தாயிருக்கை அசித்து சித்து பரமாத்மா இவை எல்லாவற்றிற்கும்பொதுவாயிருக்கையால் பரமாத்மாவுக்குப்போலே சேதநம் அசேதநம் இவற்றுக்கும் வருகிற அவஸ்தையுண்டாகையால் பரமாத்மா இவற்றுக்கு பாதாநகாரணமாகையில் தடையில்லை. ஆக இவை எல்லாமென்பதற்கு ஸ்தூல சிதசித்துக்களாகிய விசேஷ

ண்ம்பொருளாலும் அதற்குமேல்சொல்லப்போகிற அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமாமென்று, எதையறிந்தாலெல்லாமறியலாமென்று விசேஷணத்துக்கு உபாதாநகாரணம்யாதென்று, வினவத்தகும். மகாஸித்தாந்தத்திலும் எல்லாஉலகமும் ப்ரம்மகார்யமாகையாலும் ஒன்றாகையால் அதற்குவிரோதியானபேதம் நிஷேதிக்கப்படுகிறது.என்கிறபாஷ்யவ்யாக்யாந ப்ரகரணத்தில் ச்ருதப்ரகாசிகையில் ஸ்ரீவ்யாஸாசாரியரால் விசிஷ்டங்களுக்கே உபாதாநகாரணகாரியபாவமுள்ளது; ஸ்தூலசிதசித்துக்களாகிய விசேஷணங்களுக்கு ப்ரம்மம் உபாதாநகாரணமாவதில்லை. உயிருமுடலுமாகையாகிற சரீராத்மபாவமானது அறிவால் பிரித்த விசேஷணங்களுக்கும் விசேஷ்யமாகிய ப்ரம்மத்திற்குமாம். சிதசித்விசிஷ்டப்ரம்மத்தை சிதசித்விசிஷ்ட ப்ரம்மம்நியமியதாகையால் சுத்தப்ரபஞ்சத்திற்கு சுத்த ப்ரம்மமேயந்தர்யாமியாமன்றோ; “ஸத்தைக்காரணமாகஉடையது ஸத்தையாத்மாவாக உடையது இவ்வுலகம்” என்கிற சாந்தோக்யவாக்கியத்தில், ‘காரணமாகவுடையது’ என்கிறவிடத்திற்கு ‘ஸத்’ என்கிற பதம் விசிஷ்டப்ரம்மத்தைச் சொல்லுகிறதென்றும், ‘ஆத்மாவாக உடையது’என்கிற விடத்திற்கு ‘ஸத்’ என்கிறபதம் சுத்தப்ரம்மத்தைச்சொல்லுகிறது.ப்ரம்மத்திற்குப்ரம்மம் அந்தர்யாமியாகாதாகையாலும், ப்ரபஞ்சமும் விசிஷ்ட ப்ரம்மத்தை உபாதாநமாகஉடைய தன்றாகையாலுமிப்படியே பொருள்கொள்ளவேண்டுமெனச் சொல்லி இந்த பக்ஷத்தில் ‘ஸத்’ என்கிற பதங்களுக்கு பொருள்வேறுபடுகையாலும் ‘உலகம்’ என்கிற ஒருபதத்திற்கே ப்ரம்மம் அந்தர்யாமி என்னும்போது கேவல உலகத்தையும் ப்ரம்மம் காரணமென்னும்போது விசிஷ்ட ப்ரம்மத்தையும் பொருளாகக்கூறவேண்டிவருகின்றமையாலும், இப்பக்ஷமழகல்லவென்றெண்ணி, ‘உலகம்’ என்கிறபதம் கேவல உலகத்தையே சொல்லும்; ‘ஸத்’ என்கிறபதமும் சுத்தப்ரம்மத்தையே சொல்லுமென்கிறபக்ஷத்தைப்பற்றி, இப்பக்ஷத்தில் கேவலப்ரபஞ்சத்துக்கு ப்ரம்மமுபாதாநகாரணமாவதெப்படி என்றால் இவ்வுலகத்தில்வருகிற அவஸ்தையுண்டாகையாலுமிதற்குமுன் அவஸ்தையுடைய ப்ரம்மம் விசிஷ்டத்துக்கு விசிஷ்டம்காரணமாவதுபோலவே கூடுமென்று தமக்குத்திருவுள்ளமான இந்தபக்ஷம் உபந்யஸிக்கப்பட்டது பகவத்பாஷ்யகாரராலும் ‘ஆத்மேதிதூபகச்சந்தி, என்கிறவிடத்தில் சித்து அசித்து என்கிற எல்லாவஸ்துவும் தன்னிடத்திலிருந்து பிறக்கையாலும் தன்னிடத்திலேலயிக்கின்றமையாலும், தன்னால்காக்கப்படுகின்றமையாலும் தன்னால்நியமிக்கப்படுகையாலும், தனக்கு சரீரமாகையாலும் தானே எல்லாவற்றுக்கு மாத்மாவாகின்றது ப்ரம்மமேயாம். என்று சரீரமாகும்பொருளே, உபாதாநகாரணமாகிய ப்ரம்மத்தின் காரியமாகின்றதெனப்பல க்ரந்தங்களிலும் அருளிச்செய்யப்பட்டது. இதை வேறாக்குவது நம்மால்கூடாதன்றோ. “𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 𑌸𑌂𑌪𑌰𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌤𑌃” என்கிறவிடத்தில் பரமாத்மாவில் வேறான ஜீவனுக்கு லயம் சொல்லப்பட்டதன்றோ. இங்குபரிஷ்வங்கம் சொல்லப்பட்டதேயன்றி லயமன்று ; பரிஷ்வங்கசப்தத்திற்கு லயம்பொருளல்லாமையால் என்று சொல்லவமையாது. “ஸ்வாப்யயாத்” என்கிற ஸூத்திரத்தையும் அவ்விடத்திற்குபாஷ்யத்தையும் பர்யாலோசிக்கும்போது பரிஷ்வங்கம்லயமேயென விளங்குமன்றோ; “𑌸𑌤𑌾 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌤𑌦𑌾 𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿” என்கிற வாக்கியத்திற்கு ஜாக்ரதசையில் ராகத்வேஷமுதலியவற்றோடுகூடிய ஜீவனோடுசேர்ந்த பரமாத்மா ஸுஷுப்தியில் ராகமுதலியவை நீங்கிய ஜீவனோடு சேர்ந்திருக்கின்றான் என்றுபொருளாகையாலே அவ்வாறே 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍇𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌾” என்கிற வாக்கியத்திற்கும் பொருள்கொள்ளலாகாது; அப்படியாமாயின் இவ்வாக்யம் ஜீவாத்மா பரமாத்மா இவர்களுக்குபேதத்தைபோதியாமையால் “𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌭𑍇𑌦𑍇𑌨” என்கிற ஸூத்திரத்தில் ஜீவாத்மா பரமாத்மா இவர்களுக்கு பேதத்தை

http://acharya.org

யுணர்த்துமென்று கொள்ளப்பட்டிருக்கின்றமையாலத்தோடுவிரோதம்வரும். இனி வேறுனாலும் முந்திய அவஸ்தையை யுடைத்தானவை எல்லா முபாதாநகாரணம், பிந்திய அவஸ்தையையுடையவை எல்லாங்காரியம் என்றால்வருகிற மகாந் அஹங்காரம் முதலிய அவஸ்தையையுடைய பரமாத்மாவுக்கு முந்திய அவ்யக்தாவஸ்தையை யுடைத்தான அசேதந முபாதாநகாரணமாகவேண்டுகின்றமையால் வருகிற அவஸ்தையையுடைத்தானவைக்கு முந்திய அவஸ்தையையுடைய அபிந்நவஸ்துவே உபாதாநகாரணமென்று சொல்லவேண்டும். ஆகப்ரம்மத்தில் வேறான சேதநாசேதநங்களுக்கு ப்ரம்மமுபாதாநகாரணமாகாதெனில் இதற்குவிடையளிக்கின்றோம். வருகிற அவஸ்தையையுடைத்தான பொருளுக்கு முந்திய அவஸ்தையையுடைய காரணப் பொருள் உபாதாநகாரணமெனில் இவ்வினாவுக்கிடமில்லை. வருகிற அவஸ்தையை யுடைய ப்ரம்மத்திற்கு அசேதநம்காரணமென்பதில் ப்ரமாணமில்லாமையால் அசேதநம் ப்ரம்மத்திற்குபாதாநகாரணமாகாதாயினும் ப்ரம்மம் எல்லாவற்றிற்கும் காரணமானதால் வருகிற அவஸ்தையையுடைய அசேதநத்திற்கு ப்ரம்மம் உபாதாநகாரணமாகலாம். இனி தந்மாத்திராவஸ்தை பூதாவஸ்தை முதலிய அவஸ்தைகளை யுடைத்தாந ப்ரக்ருதிக்கு அவ்யக்தாவஸ்தை மகத்வாவஸ்தை முதலிய அவஸ்தைகளையுடைய ப்ரம்மம் உபாதாநகாரணமென்று இதனால் சொல்லப்பட்டதாயிற்று; இவ்வாறு கூடுமென்றிசைந்தாலும் அவ்யக்தாவஸ்தை முதலிய அவஸ்தைகள் ப்ரக்ருதியின் கண்ணேயுளவானதால் ப்ரம்மம் இவ்வவஸ்தைகளையுடையதாகாது ; ஆக ப்ரம்மம் ப்ரக்ருதிக்குபாதாநகாரணமாவது கூடாதெனில், இவ்வினாவுக்கு ப்ரக்ருத்யதிகரணத்தில் சுருதப்ரகாசிகையில் ஸ்ரீவ்யாஸாசார்யர் இவ்வாறு விடைதந்திருக்கிறார். அதாவது ப்ரம்மம் சித்து அசித்து இவைகளை சரீரமாகஉடையதானதால் ப்ரக்ருதி ப்ரம்மஸ்வரூபத்திலடங்கியதென்று ப்ரக்ருதியினவஸ்தைகளெல்லாம் ப்ரம்மத்தினவஸ்தைகளேயாம். விசிஷ்டவஸ்துவினதுஸ்வரூபம் விசேஷ்யமாத்திரமானதல்ல. விசிஷ்டவஸ்துவுக்கு விசிஷ்டமே ஸ்வரூபம். மண்குடத்திற்கு மண்மாத்திரம் ஸ்வரூபமல்லவன்றோ. குடவடிவு என்கிற கடத்வஜாதியுடன் சேர்ந்தமண்ணேயன்றோ ஸ்வரூபமாம். இங்கு விசேஷணமும் ஸ்வரூபத்தில் சேருமாகில் தடியுடைய ஒருமனிதனுக்கு விசேஷணமாகியதடியும் தடியின் ஸம்பந்தமும் ஸ்வரூபமாகவேணுமென்று வருகின்றமையால் விசேஷணம் ஸ்வரூபத்தில் சேராதெனச்சிலர்மறுப்பர்; அப்படி சொல்லப்போகாது. தடியும்தடி ஸம்பந்தமும் மனிதனைவிட்டுப்பிரியும் தன்மையனவாகையால் அவைஸ்வரூபத்தில் சேராவாயினும் தனித்துப்பிரியாது அப்பொருளுள்ளவரையி லப்பொருளோடு சேர்ந்திருக்குமவை ஸ்வரூபமாவதில் குற்றமில்லையன்றோ. மேலும் குடமுதலியவற்றுக்கு தண்ணீர் கொண்டுவருகை முதலிய அக்காரியங்களுக்குத் தக்கதாகையாகிற யோக்யதையே ஸ்வரூபமாம். மண்மாத்திரமல்ல. அப்படியாயின் பிண்டமாயிருக்கும்போதும் குடமென்று பெயர் வரவேண்டும். அந்த யோக்யதையாவது ஓட்டையில்லாத குடமாகையாகிற அச்சித்ரகடத்துவமேயாம். எந்தவஸ்துவுக்கு எந்தகாரியத்தைஸாதிக்கும்போது எந்த ஆகாரமின்றியமையாததாம்; அவ்வஸ்துவுக்கு அக்காரியத்தையுண்டுபண்ணும்போது அவ்வாகாரம் யோக்யதையாகின்றது. நெருப்பு உடம்பை எரிக்கும்போது உஷ்ணமின்றியமையாததாதலால் நெருப்புக்கு எரிப்பதில் உஷ்ணம் யோக்யதையாகின்றது. வாளுக்குக்கூர்மையும் யோக்யதையாகும். இப்படியே மண்ணுக்கும் குடமாம்போது யோக்யதையாவது மண்ணாயிருக்கை ம்ருதுவாயிருக்கை நீர் கலந்திருக்கை முதலியவையாம். இவ்வஸ்துக்களுக்கு இவை யோக்யதையாவதுபோல ப்ரம்மத்திற்கு ஜகத்ரூபத்தாலே பலவாகப்பரிணமிக்கும்போது, ப்ரக்ருதி ஜீவன்காலம், இவைகள் விட்டிப்பிரியாத விசேஷணங்களாகையால் யோக்யதையாகின்றன. இக்கார

http://acharya.org

ணத்தாலே சில ப்ரமாணங்களில் ப்ரக்ருதி முதலியவை பரப்ரம்மசக்தி என்று இவை சக்திசப்தத்தாலே சொல்லப்படுகின்றன. காரியத்திற்கு வேண்டிய விட்டுப்பிரியாத விசேஷணங்களேயன்றோ சக்தியெனப்படும். யோக்யதை யோக்ய ஸ்வரூபத்தில் சேர்ந்ததாகையால் ப்ரம்மத்திற்கு யோக்யதையாகிய ப்ரக்ருதி ப்ரம்மஸ்வரூபத்திலடங்கியதென்று அவ்யக்தாவஸ்தைமுதலிய அவஸ்தைகள் ப்ரம்மஸ்வரூபத்திலிருப்பனவாகின்றமையால் ப்ரம்மம் ப்ரக்ருதிக்குபாதாநகாரணமாகலாம், இவ்வாறு சித்து அசித்து இவைகளுடன்சேர்ந்த விசிஷ்டமே ப்ரம்மஸ்வரூபமாகையால் ச்ருதியிலும் "தத்யதா ரதஸ்யாரேஷு நேமிரர்பிதா நாபாவரா அர்பிதா ஏவமேவைதா பூதமாத்ரா: ப்ரஜ்ஞாமாத்ராஸ்வர்பிதா: ப்ரஜ்ஞாமாத்ரா: ப்ராணேர்பிதா:" என்று சக்ராந்தமென்கிற சக்கிரத்தில் சுற்றும் கோர்க்கப்பட்டமரம் அரங்களென்கிற கொம்புகளில் கோர்க்கப்பட்டாப்போலே பஞ்சபூதமுதலியவை எல்லாம் ஜீவாத்மாக்களிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன; அரங்கள் குடமென்கிறநாபியில்கோர்க்கப்பட்டிருப்பதுபோல் ஜீவாத்மாக்கள் பரமாத்மாவினிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றனவென்று அரநாபித்ருஷ்டாந்தம் சொல்லப்பட்டது. சக்கிரமாவது நாபிமாத்திரமல்ல; அரங்களும் சக்ராந்தமென்கிறநேமியும் சக்ரஸ்வரூபத்திலடங்கியவையன்றோ; இந்த த்ருஷ்டாந்தத்தால் அரநேமிகள் சக்ரஸ்வரூபத்தில் சேர்ந்தவையாறுப்போல ஜீவாத்மாப்ரக்ருதி இவைகளும் ப்ரம்மஸ்வரூபத்தில் சேந்தவை என்று நன்கு விளங்கும். இலை பட்டை இவைகளோடுசேர்ந்த வாழையை சித்து அசித்து இவைகளோடுசேர்ந்த ப்ரம்மத்திற்குத்ருஷ்டாந்தமாக ச்ருதிசொல்லுகிறது. இதனாலும்சேதநா சேதநங்கள் ப்ரம்மஸ்வரூபத்தில் சேர்ந்தவைஎன்று விளங்கும். இலைபட்டை இவைகளைவிட்டு தண்டுமாத்திரமே வாழையல்லவன்றோ. இலைப்பட்டைகளோடு சேர்ந்ததண்டேயன்றோவாழையாகும். இப்படி சிதசித்துக்கள்சேர்ந்து ப்ரம்மஸ்வரூபமாகின்றது. பலத்ருஷ்டாந்தங்களிப்படியே ச்ருதியில் காட்டப்படுகின்றன. த்ருஷ்டாந்த ஸ்தலங்களில் எல்லாமசேதநமாகையால் நியாம்ய நியாமகபாவமில்லாமையால் சரீராத்மபாவமில்லை. ஆகையால் விசேஷணவாசகசப்தங்கள் விசேஷ்யத்தைச்சொல்லா. இங்கு விசேஷ்யவிசேஷணங்கள் சேதநாசேதநரூபங்களாகையாலே நியாம்ய நியாமகபாவம் கூடுமாகையால் சரீராத்மபாவமுண்டு ஆகையாலே சேதநாசேதநவாசிசப்தங்கள் ப்ரம்மத்துக்கு வாசகங்களாகின்றன என்கிற இவ்வளவுபேதமொழிய மற்றவிஷயங்களில் பேதமில்லை. ஆகமகத்வமுதலிய அவஸ்தைகள் விசிஷ்டப்ரம்மஸ்வரூபத்தில் பிறந்தவையாகையாலே ஜகத்திற்குப்ரம்மமுபாதாநகாரணமாவது முக்யமேயாம். மேலும் ப்ரக்ருதிஜீவன் இவைகள் ஸ்வரூபத்தில்சேராதவையானாலும், ப்ரம்மம் ஜகத்துக்கு பாதாநகாரணமாவது முக்யமேயாம். சரீரத்தின்வழியாலே உபாதாநகாரணமானால் முக்யமென்பதற்குக்குறையில்லை. காரணமாவதற்குவேண்டியவற்றால் வ்யவஹிதமாகையாலே. ஜ்வாலையினால் வ்யவஹிதமானாலும் கட்டைசமயலுக்குக் காரணமாகின்றதன்றோ. இனி, மண்ணால் வ்யவதாநமுண்டானாலும் குலாலன் உபாதாநகாரணமாகலாம்; காரணமாவதற்குவேண்டியதேயன்றோ மண்ணாமெனில்மண்ணில்வேறாய்ப்பிரிந்த குலாலனுபாதாநமாகான். ப்ரக்ரு



http://acharya.org

தியைப்பிரியாதப்ரம்மம் உபாதாநமேயாம். இனி, இவ்வழியாலே ப்ரம்மமுபாதாநகாரணமாமாயினும் கார்யாவஸ்தை உபாதாநகாரணத்திலிருக்கவேணுமாகையால்கார்யாவஸ்தைப்ரக்ருதியிலிருக்கின்றமையால்ப்ரம்மத்திலவஸ்தையில்லையேயெனில்; இதற்கும் விடைதருகிறோம். குடத்திலெடுத்ததண்ணீரைப் புருஷன்சுமக்கும்போது குடம்நடுப்பட்டிருந்தாலும் தண்ணீரைப்புருஷனே தாங்குவதுபோல மகத்வமுதலிய அவஸ்தைகளைப்பரமாத்மா தாங்குகின்றமையால்அவஸ்தைகளுக்குமுக்கியாச்ரயம் பரமாத்மாவேயாகையால் பரமாத்மாஜகத்துக்கு பாதாநகாரணமென்பது முக்யமேயாம். புருஷன்தண்ணீரைத்தாங்குகிறகுடத்தைத் தாங்குகிறானன்றி தண்ணீரைத்தாங்குவதில்லை என்னப்போகாது; அப்படியாயின் தண்ணீரில்லாதபோதிலக்குடத்தைத்தாங்கியதால் வருகிற சிரமத்தைக்காட்டில் அதிகமான ச்ரமம் தண்ணீரோடுகூடியபோதும் பிறக்கக்கூடாதன்றோ. வஸ்திரம் தர்ப்பம் முதலியவைகளைக்கீழேசேர்த்து அவற்றின்மேலே குந்தினாலும் புருஷனுக்கு முக்யாதாரம் பூமியேயாம்; வஸ்திரம் தர்ப்ப முதலியவையல்ல. அவைகளுக்குப் புருஷனைத்தாங்குகிறசக்தியில்லையன்றோ; அவை புருஷன்நேராக பூமியில்படாமல் மறைக்கின்றன. ஆகையால் அவ்யவஹிதமே முக்யாதாரமென்கிற நியதியில்லை. ஆகதிருட்டாந்த விடங்களிலேபோல ப்ரம்மமே அவஸ்தைகளுக்குமுக்யாதாரமாகையால் ப்ரம்மமேஜகத்துக்குமுக்யோபாதாநமாம். இனி, ஜகத்துக்குபாதாநகாரணமாகிய அவ்யக்தத்தை சரீரமாக உடையதானதால் ப்ரம்மம் ஜகத்துக்குபாதாநகாரணமாகில்தார்க்கிகர்மதத்திற்கு முங்கள்மதத்திற்கும்பேதமென்ன? நியமிக்கப்படுவதுசரீரமென்கையாலும் சிதசித்துக்கள் ஈச்வரநியாம்யங்களென்றவர்களும் சொல்லுகையாலும் உபாதாநகாரணமீச்வரனென்று அவர்களுக்கு ஸித்திக்கின்றதேயெனில், இதுநல்ல பூர்வபக்ஷமாயிருக்கின்றது. தார்க்கிகரானால்அப்ராமாணிகமாயேசொல்லுவரென்றும், அவர்கள்சொன்னாலதை ஒப்பக்கூடாதென்றும் நாங்கள் ப்ரதிஜ்ஞைசெய்யவில்லை. நாம்சொன்னபடியவர்களும் சொன்னாலெங்களுக்கதனால் நஷ்டமில்லை. மேலும் ஸாம்யமும் சொல்லப்போகாது, ஆகாசம் காலம் திக்குமுதலியவற்றைஈச்வரநியாம்யமென்றவர்களங்கீகரியாரன்றோ; என்றருளிச்செய்தார். ஆகப்ரம்மம்ஜகதுபாதாநமாம்போது ஒரநுபபத்தியுமில்லை. இனித்தானிப்படியுபாதாநமென்று ஸாதித்தாலும் ப்ரம்மத்தை யறிந்தபோது ப்ரபஞ்சமுமறியப்படுமென்பது பொருந்தாது. ப்ரபஞ்சம் ப்ரம்மத்தில் வேறாயதன்றோ; ஸூக்ஷ்மசிதசித்துடன்சேர்ந்தவிசிஷ்டப்ரம்மஸ்வரூப மறியப்பட்டால் எல்லாமதிலடங்கிய தாகையாலே யறியப்படும்; வநமுழுது மறிந்தபோதுவநத்திலடங்கிய மாமரம் பலாமரம்முதலியவையறியப்படுவதுபோல சிதசித்துக்களுமறியப்படுகின்றமையால் எல்லாமறியப்படுமென்பதுபொருந்துமெனில், "ஸத்யம்ஜ்ஞாநமநந்தம்ப்ரம்ம" என்கிற லக்ஷணமுடைய ப்ரம்மத்தில் அந்த லக்ஷணமில்லாத சேதநாசேதநங்கள் சேரவழியில்லாமையால், அது சேராது. இனி ஸத்ய ஜ்ஞாநாநந்தலக்ஷணம் விசேஷ்யமாத்திரத்திற்கு லக்ஷணமாம்; எதையறிந்தா லெல்லாவற்றையுமறியலாகு மப்படிப்பட்ட ப்ரம்மம் விசிஷ்ட ப்ரம்மமே; அதற்கு லக்ஷணம் ஜந்மாதி காரணத்வமே என்று ஸூத்ரகாரர்கருத்தென்று ஜந்மாதி ஸூத்திரச்ருதப்ரகாசிகையில் வ்யாஸாசார்யரருளிச்செய்தாரே யெனில்; காரணவாக்கியத்திற்கும் சோதகவாக்யத்திற்கும் பொருள் மாறுபாடு கூடாமையாலதுவும் சேராது. மேலும் "ஆத்மாவிலிருந்து ஆகாயம்பிறந்தது" என்கிற தைத்திரீய

http://acharya.org

வாக்கியத்தால் ஆத்மாவே உபாதாநமென்றேதப்படுகிறதன்றோ. இனி, உங்களிஷ்டப்படி விசிஷ்டமே ப்ரம்மமானாலும் “வாசாரம்பணம் விகாரோ நாமதேயம் ம்ருத்திகேத்யேவ ஸத்யம்” என்கிற ச்ருதியில் உபாதாநகாரணத்திற்கும் காரியத்திற்கும் பேதமில்லையானதால் காரணத்தையறிந்தபோதே காரியமெல்லாமறியப்படுமென்று சொல்லுகின்றமையால் இவை எல்லாமென்று காட்டப்படுகிற விசேஷணமாகிய ப்ரபஞ்சத்திற்கும் விசிஷ்டப்ரம்மத்திற்கும் அபேதம் ஸம்பவியாமையால் விசிஷ்டப்ரம்மத்தை யறிந்தபோதிவை எல்லாமறியப்படுமென்று சொல்லப்போகாது சரீரத்திலுள்ளவிகாரங்களெல்லாம் சரீரியினிடத்திலிருக்குமென்பது, எல்லா லௌகிகசாஸ்திரதர்க்கங்களுக்கும்விருத்தமாம். “நதுத்ருஷ்டாந்தபாவாத்” என்கிறஸூத்திரபாஷ்யங்களுக்கும் விருத்தம். முந்திய அவஸ்தையையுடைய பொருளை நியமிப்பது உபாதாநகாரணமென்பது கட்டுவார்த்தை.மேலும பிறக்கும்பொருளுக்கன்றோ உபாதாநகாரணம் தேடவேண்டும்; உங்கள் மதத்தில் த்ரவ்யம் நித்யமாகையால் பிறவாததன்றோ; சப்தம் ஸ்பர்சம் முதலிய அத்ரவ்யரூபமாகிய விகாரமே பிறக்குமாகையாலிவைகளுக்கும் ப்ரம்மத்திற்கும் பேதமேயாகையால் ப்ரம்மத்தையறிந்தபோது இவை எப்படி யறியப்படும். இனி, கடமென்கிறபொருளுக்குத்பத்தியாவது கடத்வாஸ்தையேயாம். மேலே மேலே வருகிற அவஸ்தை முன்னிருந்த அவஸ்தையோடுகூடிய பொருளின் நாசமாகும். அவ்வவஸ்தையையுடைய பொருளுக்குத்பத்தியாம். அவஸ்தைநித்யமல்லாமையாலே அதற்குப்பிறப்புவேணுமென்பது உத்பத்தி நித்யமல்லாமையாலே உத்பத்திக்குத்பத்தி வேணுமென்பது போலதிவாதம். தனித்துப்பிரிந்திருக்கிறவற்றுக்கே தனிப்பிறப்பு முதலியவை வேண்டுமென்றி தனித்திராதவற்றுக்குத்தனியே பிறப்புமுதலியவை வேண்டா இக்காரணங்கொண்டே உத்பத்திக்கு உத்பத்தி வேண்டாமென்றதும், ஆகையால்பொருளைவிட்டுப் பிரியாத அவஸ்தைகள் பொருளுக்குத்பத்திமுதலியவையாகின்றன. ஆகையால் அவஸ்தையேபொருளுக்குத்பத்தியாம். அவஸ்தைக்குத்பத்திவேண்டுவதில்லை. என்று ஆரம்பணாதிகரணத்தில் பாஷ்யத்திலும் ச்ருதப்ரகாசிகையிலும் உபபாதிக்கப்பட்டதே என்றால்; அது நல்லதன்று கடத்துக்குத்பத்தியாவது கடத்வாவஸ்தையேயாகில் கடத்வாஸ்தையுள்ளவரையில் கடம்பிறக்கிறது என்று வ்யவஹாரம்வரவேணுமேயல்லது கடம்பிறந்தது என்று வரக்கூடாது. ம்ருத்பிண்டத்தின் அழிவானது கடத்வாவஸ்தையேயாகிலிப்படியே கடத்வாவஸ்தையுள்ளவரையில் ம்ருத்பிண்டமழிகிறதென்று வ்யவகாரம் வரவேணும் ம்ருத்பிண்டம் அழிந்தது என்று சொல்லக்கூடாது. கடத்வாவஸ்தையிலுண்டாகிற முதல்க்ஷணத்தின் ஸம்பந்தமேகடத்திற்குத்பத்தி என்றால் எது, அநித்தியமும் முதல் க்ஷணஸம்பந்தமுடையதும் முன்னில்லாதேவந்ததுமாம்; அதற்குப்பிறப்பில்லை. இவையொன்றுமில்லாத பொருளுக்குப்பிறப்பென்பது கட்டுவார்த்தையாம். மேலும் கடத்தில் ரூபம் ரஸம்முதலியவை ஸம்யோகம் இவை உண்டாம்போது கடம் பிறந்ததென்று வ்யவஹாரம் வரக்கண்டோமில்லையே. ரூபம் பிறந்தது இரஸம் பிறந்ததென்றும் சொல்லக்குடாது. தனித்துப்பிரியாதவைக்குப் பிறப்பில்லையன்றோ; ஸம்யோகத்தில் வருகிற க்ரியையால் பிறந்தது ஸம்யோகத்தால் பிறந்ததென்கிற வ்பவகாரமெல்லாம் நிர்மூலமாகவேணும். “ஹந்தாஹமியஜா:

ஞ

http://acharya.org

க்ரதவோவ்ரதாநி" "ருச:ஸாமாநிஜஜ்ஞிரே தஸ்மாத்" என்கிற ச்ருதிகளிலோத
ப்படுகிற வேதம் முதலியவை பிறந்தனவென்பதெல்லாமப்ரமாணமாகவேணும். சப்
தம் பிறந்ததென்று வ்யவஹாரம்கூடாது. சப்தம்பிறந்தபோதெல்லாம் ஆகாயம் பிற
ந்ததென்று வ்யவஹாரம்வரவேணும். தனித்திராதவைக்கு உத்பத்திவிநாசங்களில்லை
யன்றோ; சரீரம் ஆத்மாவைப்பிரிந்திராதானதால் சரீரத்திற்குஉத்பத்திநாசங்களில்லை.
ஆத்மாவுக்கே உத்பத்திவிநாசங்களென்றுசொல்லவேணும். பலசொல்லுவானேன்?
உலகத்திலுள்ள எல்லாம் ஈச்வரனைவிட்டுப்பிரியாதவை யாகையாலே இவைகளுக்
குத் பத்திவிநாசங்களில்லை; ஈச்வரனுக்கே உத்பத்திவிநாசங்களென்று விபரீதமாய்
விடும். விட்டுப்பிரியாத அத்ரவ்யங்களுக்கே உத்பத்திவிநாசங்களில்லை; விட்டுப்
பிரியாதவையானாலும் த்ரவ்யங்களுக்குத் பத்திவிநாசங்களுண்டென்றாலது நில்லாது
யுக்தியில்லாமையாலே. த்ரவ்யங்களுக்கே உத்பத்திவிநாசங்களில்லை. அத்ரவ்யங்க
ளுக்கே யவையென்றுமாற்றிச்சொன்னாலதையார்மறுப்பார்? மேலும், விகாரத்துக்கு
முதலானது பாதாநகாரணமென்றும் விகாரம் காரியமென்றும் எல்லோருமொப்புக்
கொண்டவிஷயம்; "வாசாரம்பணம்விகாரோநாமதேயம்" என்கிற விடத்தி
ல் கடத்வாவஸ்தையே விகாரசப்தத்தால்சொல்லப்படுகின்றமையால், "யதாஸோ
ம்யைகேநம்ருத்பிண்டேநஸர்வம்ம்ருண்மயம்விஜ்ஞாதம்ஸ்யாத்' என்கிற முந்திய
வாக்கியத்திலும் விகாரப்பொருளையுணர்த்தும்மயட்ப்ரத்யயத்தாலவ்விகாரமேயுணர்
த்தப்படுதல் தக்கதாதலால் அவ்விகாரமே மண்ணையுபாதாநகாரணமாகவுடைய கா
ரியமென்பது உலகநீதியாலே யறியப்பட்டதென்று நினைத்து த்ருஷ்டாந்தமாக்கி கார
ணத்தை யறிந்தபோதே விகாரமறியப்படுமென்று சொல்லுகையால் உங்கள் மதத்
திலவஸ்தை என்கிறவிகார மறியப்படாமையா லந்த ச்ருதியில் சொல்லப்பட்ட கா
ரணகாரிய விஞ்ஞாநமுங்களுக்குப்பொருந்தாது. அந்த ச்ருதியில் பூர்வவர்க்கியத்
தில் ம்ருண்மயமென்கிற பதமானது விகாரத்தையுடையபொருளைச்குறிக்கின்றது.
"விகாரோநாமதேயம்" என்கிறவிடத்திலவஸ்தையாகிய விகாரமேவிகார சப்தத்
தால் சொல்லப்படுமென்பது பொருத்தமற்ற வார்த்தையானதா லிவ்விரண்டிடங்க
ளிலு மொருபொருளையே கொள்ளவேண்டும். ஆகவிகாரரூபமான அவஸ்தை யுங்
கள் மதத்திலேயறியப்படாதாகையால் மண்ணையறிவதினாலதனில்வேறாகாத விகார
மெல்லாமறியப்படுமென்பது உங்கள் மதநிலைக்குச்சேராததேயாமென்பீரேலதற்கு
விடைதருகிறோம்.—ப்ரக்ருதிக்கும் விக்ருதிக்கும் அதாவதுஉபாதாநகாரணத்திற்கும்
காரியத்திற்கும் பேதமில்லாதபோது மண், குடமாவதற்காகச்செய்யும்வேலைஎல்லாம்
வீணாமாகையால் பேதமுண்டாகிலும் தனித்திருத்தலும் தனித்தறியப்படுதலுமில்லா
மையாலே தனித்துஸத்தையில்லையென்பது ஸித்தமாம். ஆகவேறாகாத ஸத்தையுடை
ய காரணமுபாதாநகாரணமாம். ப்ரக்ருதி என்று மாத்மாவென்றுமிதற்குப்பெயர்.
இக்காரணத்தை தார்க்கிகர் நன்குபிரிந்து தோன்றாமையால் அயுதஸித்தம் ஸமவாயி
காரணமென்கிறார்கள். காரியத்தில் வேறாயதும் வேறாகாததுமாயகாரணமுபாதாந
காரணமென பேதாபேதவாதிகள் சொல்லுகின்றார்கள். வேறென்றும் வேறல்ல
வென்றும்பேசத்தகாதகாரணமெனச்சிலர் காரியத்தில் வேறாயதாய் காரியஸத்தையி
ல்வேறல்லாத ஸத்தையுடைய காரணமுபாதாநகாரணமெனமற்றோர். எமக்கு மீதே
உபாதாநகாரணவிசாரத்தில் ஸம்மதமானவபிப்ராயம். கலசமுதலிய அவஸ்தையே
விகாரம் பலரூபத்தையும் பலநாமத்தையுமடைகிற அவஸ்தைகளெல்லாம் மண்
ணினவஸ்தையேயாகையாலே மண்ணேயிப்படியாகின்றதென்று வேதார்த்த ஸங்
க்ரகத்தில் அவஸ்தையே விகாரமென்றருளிச்செய்தார். அவ்விதவிகாரங்களுக்
கும் மண்ணுக்கும், தடிக்கும் புருஷனுக்கும், போல பிரிந்திருக்குந்தன்மையில்லை

http://acharya.org

யானதால் பிரித்தறியப்படாதே குடமுதலிய விகாரங்களோடு மண்சேர்ந்திருக்கின்றமையால் கீழ்ச்சொல்லிய உபாதாநகாரணலக்ஷணம் மண்ணிலுண்டாகையால் குடமுதலியவற்றுக்கு மண்ணானது ப்ரக்ருதியு மாத்மாவுமாகின்றது. ஆகையாலிம்மண்ணையறிந்தபோது கடமுதலிய அம்மண்ணினவஸ்தையாகியவிகாரங்களெல்லாம் தனித்தநிலைக்கும் ஜ்ஞாநத்திற்கும் தகாதவையாகையாலே மண்ணின் ஸத்தையாலே ஸத்தையுண்டாகிருப்போலே மண்ணையறிந்தினு லறிந்தமையுண்டாகின்றமையால் இவை எல்லாமறியப்படுமென்று சொல்லலாகும். இப்படியே சேதநாசேதநப்ரபஞ்சமெல்லாவற்றிற்கும் ப்ரம்மம் தனித்துப்பிரியாத காரணமாகையாலே எல்லாவற்றிற்கும் ப்ரக்ருதியாய் ஆத்மாவாயிருக்கையால் ப்ரம்மத்தைவிட்டுப் பிரித்தறியத்தகாத எல்லாமறியப்பட்டதாமென்பது ஸித்திக்கும். ஆகையால் கீழ்ச்சொல்லியதோஷங்களிலொன்றுமிங்குதங்காதென்று ஸூக்ஷ்மபுத்தியாலே அறிந்துகொள்க. இனி, பாஷ்யத்தில் கேவலபேதவாதிமதத்தில் அத்யந்தம் பின்னங்களுக்கு ஒருவழியாலுமைக்யம் சொல்லப்போகாமையாலேப்ரம்மாத்மபாவம்கூடாமையால் எல்லாவேதாந்தங்களும் விடப்பட்டனவாமென்று கேவலபேதபக்ஷம் நிந்திக்கப்படுகின்றமையால், ‘‘ஏகத்வே ஸதி நாநாத்வம் நாநாத்வே ஸதி சைகதா | அசிந்த்யம் ப்ரஹ்மணோ ரூபம் கஸ்தத்வேதிதுமர்ஹதி’ என்று, ப்ரம்மம் ஒன்றாயிருக்கவும் பலவாய்த் தோற்றுகிறது பலவாயிருக்கவுமொன்றாய்த்தோற்றுகிறது; இன்னதென்றறியப்படாத ப்ரம்மஸ்ரூபத்தை எவனறியத்தக்கவன்; என்று ஸ்ம்ருதிசொல்லுகையாலும் பேதாபேதபக்ஷமே பகவத்பாஷ்யகாரருக்குத் திருவுள்ளமென்று தோற்றுகையால் காரியத்தில் வேறாகாதகாரணமுபாதாநகாரணமென்று கொள்ளவேணும்; இப்படியானால் எல்லாப்ரபஞ்சமும் ப்ரம்மமேயாகையாலே ப்ரமத்தையறிந்தபோதெல்லாமறியப்படுமென்று சுருதியில் சொன்னது நன்றாய்ச்சேரும். ‘‘ஹரேரந்யந் ந கிஞ்சிதஸ்தி’’ (ஹரியென்று ப்ரஸித்தமான ப்ரம்மத்தில் வேறாயதொன்றுமில்லை.) ‘‘ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம’’ (இவ்வுலகத்திலுள்ள ஸமஸ்தமும் அந்த ஒரு ப்ரம்மமே) ‘தஸ்மாத்தாந்யந் ந பர: கிஞ்சநாஸ’ (அந்த ப்ரம்மத்தில் வேறில்லை அந்த ப்ரம்ம மப்படிசொல்லப்படுகிறது.) ‘‘ஏகஸ்ஸதைகரூபஸ்ஸ வாஸுதேவ: பரமேச்வர:’’ (எக்காலத்திலும் மாறாத ஸ்வரூபத்தையுடைய ப்ரம்மமொன்றே பரவாஸுதேவனென்றும் பரமேச்வரென்றும் சொல்லப்படுகிறது. அந்த ப்ரம்மத்தில் வேறுபட்டபொருளில்லை.) என்கிற சாஸ்திரங்கள் கேவலபேதத்தை நிஷேதிக்கின்றனவாகையாலும் பேதாபேதபக்ஷத்தை யங்கீகரிப்பது யுக்தமமாம். சரீராத்மபாவத்தைச் சொன்னாலும் சரீரமாகிய ஜகத்து ப்ரம்மத்தில் வேறானதேயாகையால் ப்ரம்ம பிந்நமானவஸ்துவை நிஷேதிப்பது சேராது. ஆகையால் பேதாபேத பக்ஷத்தையே கொள்ளவேணுமெனில் இது தக்கதன்று—பேதாபேத பக்ஷத்தில் ப்ரம்மத்திற்கே உபாதி ஸம்பந்தத்தால் உபாதியினால் வருகிற ஸகலதோஷங்களும் வருகையாலே தோஷஸம்பந்தமில்லாதே கல்யாணகுணங்களுக்கு நிலமான ப்ரம்மத்தையுபதேசிக்கிற வேதாந்தங்களெல்லாம் விரோதிக்கும்; என்று பேதாபேதபக்ஷத்தை பாஷ்யத்திலே தூஷிக்கையாலும் ப்ரம்மாஜ்ஞாநபக்ஷத்திலும் பேதாபேதபக்ஷம்கெட்டதென்

http://acharya.org

று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் மிகவும் நிந்திக்கையாலும் பேதாபேதவாதம் பகவத்பாஷ்யகாரருக்குத் திருவுள்ளமன்று. ஆனால் கீழ்காட்டிய பாஷ்யத்துக்குப் பொருளென் சரீராத்மபாவமாவது பேதமேயன்றோ. ப்ரகார ப்ரகாரிபாவம் பேதரூபமேயன்றோ. எப்போதும் ப்ரகாரப்ரகாரி பாவமாகிய சரீராத்மபாவமாவது எப்போதும் பேதரூபமாகையால் சரீராத்மபாவத்தைச் சொல்வதினால் கேவலபேதமே வலியுறுத்தப்படுகிறது. ஆனதினாலன்றோ “உஹயெவஷி ஹிஹெ ஜெஒெ ந நஉயீய ஒெத்’ என்கிற ஸூத்திரத்தில் சரீராத்மபாவமே பேதமென்றுபந்யஸிக்கப்பட்டது. எனில் சொல்லுகிறோம் கீழ்காட்டிய பாஷ்யத்திற்குக் கருத்து இவ்வாறுகொள்ள வேணும்: ஒன்று என்கிற வ்யவஹாரத்தில், ஸ்வரூபைக்யம் அல்லது ப்ரகாரைக்யம் காரணமாகிறது. ஸாயங்காலத்தில் பசுக்களெல்லாமொன்றாய் விடுகின்றன, அரசர்களொன்றானார்கள், இவை எல்லாமொரேதாந்யம், என்கிற விடங்களில் தேசம் முதலிய ப்ரகாரமொன்றாகையால் ஒன்று என்கிற வ்யவஹாரமுண்டாயிருக்கிறது. இங்கு ஜகத்துக்கும் ப்ரம்மத்திற்கும் ஸ்வரூபம் பிந்நமாகையாலே ஒன்று என்கிற வ்யவஹாரத்திற்குக்காரணமொன்று சொல்லவேணும் அஃது யாதென்று விசாரித்துப் பலவிடங்களிலும் விட்டுப்பிரியாத விசேஷணமாயிருக்கை என்று நிர்ணயித்தருளிச்செய்தார். ஆகையாலப்ருதக் ஸித்தியே பகவத்பாஷ்யகாரருக்குத்திருவுள்ளம். ஸித்தியாவது - ஸ்திதியும், ஜ்ஞாநமும். ஸ்திதியாவது இருப்பு.ஜ்ஞாநமாவதுஅறிவு. இவ்விரண்டும் தனியேயில்லாத விசேஷணங்களுக்கு அப்ருதக்ஸித்த விசேஷணாங்களென்று பெயர். இக்கருத்து அவ்விடத்திலேயே பாஷ்யத்தில் விளங்கும். அவையாவன:—ஜாதிகுணமுதலியன. இனி, கந்தமுதலிய அப்ருதக்ஸித்த விசேஷணங்கள் தனித்துமறியப்படுகையாலிவ்விலக்கணம் பொருந்தாது. யாதொன்றுதானுள்ளவளவாயிலொன்றைப்பற்றியே நிற்கின்றது; அது அப்ருதக்ஸித்தமென்று தார்க்கிகர்சொல்லிய விலக்கணங்கூறில் இவ்விதமாகிய அப்ருதக்ஸித்திபேத வ்யவகாரத்திற்கேஹேதுவாமல்லது அபேதவ்யவகாரத்திற் கிடங்கொடாது. ஆனதால் ப்ரம்மமொன்றேயுள்ளதென்கிற வ்யவகாரமுங்கள் மதத்திற்குப் பொருந்ாதெனில்; பொருந்துமாறு கூறுகின்றோம்; தனித்திருக்கிறகாரியங்களுக்கே தனிப்பிறப்பு முதலியன வேணுமென்கின்ற சுருத ப்ரகாசிகையை யாலோசிக்கும்போது யாதொன்றின் பிறப்புநாசம் ஸத்தைமுதலியவைஎவ்வாதாரத்தைப்பற்றியிருக்கின்றதோ அது அவ்வாதாரத்திற்கு அப்ருதக்ஸித்தவிசேஷணமென்று கொள்ளப்பட்டதாகிறது. கந்தமுதலிய குணங்களின் ஸத்தைபொருளின்ஸத்தையைப்பற்றியிருப்பதால் குணங்கள் பொருளுக்கு அப்ருதச்ஸித்தவிசேஷணங்களாகின்றன. இப்படியே விக்ருதி என்கிற காரியத்திற்கு ப்ரக்ருதியென்கிற உபாதாநகாரணத்தின் ஸத்தையில் வேறான ஸத்தையில்லையாதலால் தன்னுடைய ஸத்தையில்வேறாகாத ஸத்தையுடைய காரணமுபாதாநகாரணமென்பதில் விரோதமொன்றுமில்லை. இஃதேயத்மாவாயிருக்கை. ப்ரம்மத்தினின்றும் பிறக்கின்றமையாலும், ப்ரம்மத்திலே லயிக்கின்றமையாலும் ப்ரம்மத்தால் காக்கப்படுகின்றமையாலும், ப்ரம்மத்தால் நியமிக்கப்படுகின்றமையாலும் ப்ரம்மத்திற்கு சரீரமாகின்றமையாலும் எல்லாம் ப்ரம்மத்தை யாத்மாகஉடையனவென்றருளிச் செய்யாநின்ற பகவத்பாஷ்யகாரரால் இவ்வர்த்தம் வெளியிடப்பட்டதன்றோ. உள்ளேபுகு

http://acharya.org

ந்து நியமிக்கையாகிற ஆத்மத்வமிங்குசொல்லப்பட்டதில்லை. அது உபாதாநகாரணமாவதினால் வருமதன்றே. உபாதாநமாவதினாலும் நியந்தாவாவதினாலும் நியந்தாவான ஆத்மாவாகிறானென்பது பொருந்தாதன்றோ. நாம் சொல்லியபடி ஆத்மாவாகையே இங்கு பொருத்தமுடையது. எப்படி என்றால் கூறுகிறோம், ப்ரம்மத்தினின்றும் பிறக்கையாலுமென்ற தாலசேதநங்களைப்பற்றி உபாதாநகாரணமாகையாகிற ஆத்மத்வமும், ப்ரம்மத்தால் நியமிக்கப்படுதலாலுமென்பதற்கு ஜீவரூபனாகி நியமிக்கிறானென்று கருத்தாகையாலே ஜீவனை விட்டுப்பிரியாதவனென்று பெறப்படுகின்றமையாலும் சேதநாசேதநங்களெல்லாவற்றிற்கு மப்ருதக்ஸித்தகாரணமென்கிறகாரியஸத்தையில் வேறல்லாதஸத்தையுடைய காரணமாகிய உபாதாநகாரணமென்று சொல்லப்பட்டதாயிற்று. ஆக, இவ்விதகாரணமாகையாகிற ப்ரக்ருதித்வமென்கிற ஆத்மத்வம் சேதநாசேதநங்களெல்லாவற்றையும் பற்றி ப்ரம்மத்திற்குண்டாகையால் இவ்வித ஆத்மாவாகிய ப்ரம்ம மறியப்பட்டபோதே மற்றெல்லா மறியப்பட்டதேயாம். மற்றொன்று தனித்தறியவேண்டிய தொன்றுமில்லையன்றோ; ப்ரம்மத்தின் ஸத்தையால் ஸத்தைபெற்றவஸ்துப்ரம்மமறியப்பட்டபோதறியப்படா தொழியுமோ. இனி, ப்ரபஞ்சத்திற்கு ப்ரம்மஸத்தையொழிந்த ஸத்தையில்லா தொழிந்தால் ப்ரபஞ்சம் பொய்யென்று சொல்லப்பட்ட தாகிறது. அப்போதுலகத்தைப் பொய்யென்கிற அத்வைதிகளுக்கு முங்களுக்கும் பேதமில்லையே என்றால் இச்சந்தேகம் வேண்டாம். குணங்களில் ஸத்தாஜாதியை யொப்பாதவர் மதத்தில் ரூபமுதலிய குணங்களுக்கு த்ரவ்யஸத்தையில் வேறான ஸத்தையில்லையானாலும் குணங்கள் பொய்யென்றார்களோ; ஸித்தாந்தத்திலும் தனித்து உத்பத்தி ஸ்திதி ஸத்தையில்லாத அவஸ்தைகளைப் பொய்யென்று சொன்னார்களோ; இப்படியே ப்ரம்மஸத்தையில் வேறான ஸத்தையில்லையானாலும் ப்ரபஞ்சம் பொய்யாகாது. ஆகையாலன்றோ “[illegible] வாத்” என்கிற ஸூத்திரத்தில் காலமென்பது தனியே தோறாதே எல்லாப்பொருளுக்கும்விசேஷணமாய் தோற்றுகையால் இதற்குத்தனியே ஸத்தையில்லை. ஆனாலுமில்லையென்று சொல்லப்போகாது. ஜாதிமுதலியவற்றிற்குத்தனியே ஸத்தையில்லையானாலும் மவை பொய்யாமோ; என்று பாஷ்யத்தில் தெளிவாகவருளிச்செய்தார். ஆனதால் ப்ரம்மஸத்தையால்ஸத்தைபெற்றிருப்பதால்ப்ரபஞ்சம் பொய்யாகாது. இனி, உபாதாநமாயிருக்கையாவது அப்ருதக்ஸித்தகாரணமாகை ஆத்மத்வமென்பதுமிதேயாமென்றால்; பகவானுடைய திருமேனி விமாந கோபுரமண்டப ப்ராகாரமாகியிருக்கும் நித்யவிபூதியைநித்யமென்றா லதைப்பற்றி பரமாத்மா ஆத்மாவாகமாட்டான். நித்யவிபூதி நியமமாகையால் அவ்விபூதிக்கு பரமாத்மா உபாதாநகாரண மாகானன்றோ; ஆகையால்நித்யவிபூதியும் உத்பத்தியுடையதேயாம். இவ்விபூதிக்குத்பத்தியில்லையானால்இவ்விபூதிப்ரம்மகார்யமாகாமையால் ப்ரம்மத்தை யறிந்தபோதறியப்படாது. அப்படியாகில் ப்ரமத்தையறிந்தபோதெல்லா மறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞை சேராதாம். இந்த ப்ரதிஜ்ஞைக்கு விருத்தமாகவும் நித்யவிபூதியை நித்யமென்றால் வியததிகரணவிரோதமும் வரும். அவ்வதிகரணத்தில் ஆகாயம் நித்யமோ உத்பத்தியுடையதோவென்று விசாரித்து நித்யமாகில் ப்ரம்மகார்யமாகாமையால் ப்ரம்மத்தை யறிந்தபோதெல்லா மறியப்படுமென்கிற ப்ரதிஜ்ஞைக்கு விரோதம் வருகின்றமையால்உத்பத்தி

http://acharya.org

யுடையதேயாமென்று ஸித்தாந்தம் செய்யப்பட்டதன்றோ. இந்த நியாயத்தால் நித்ய விபூதிக்கு முத்பத்தியுண்டென்று சொல்லவேணும். நித்யவிபூதியை உத்பத்தியுடைய தென்றால் நித்யமென்று சொல்லுகிற ப்ரமாணங்களோடு விரோதம் வருமாகையால் ப்ரம்மத்தையறிந்தபோதெல்லா மறியப்படுமென்கிறவிடத்தில் நித்யவிபூதி தவிரமற் றெல்லாமறியப்படுமென்று பொருள்கொள்ளவேணுமென்றால் இப்படியே ஆகாயத் தையும், "வாயுஶ்சாந்தரிக்ஷஞ்சைதத³ம்ருதம்" "ஆகாஶவத்ஸர்வக³தஶ்ச நித்ய:" இவை முதலிய ப்ரமாணங்கள் நித்யமென்று சொல்லுகையால் ஆகாயத்தை யும் நீக்கவேணுமென்று வரும். ஆனதால் நித்யவிபூதிமாத்திரம் நித்யமாவது கூடா தென்றால் "ஆகாஶஸ்ஸம்பூ⁴த:" இது முதலிய ப்ரமாணங்களில் மகதஹங்கார க்ரமத்திலே உத்பத்தி யுடையதென்று தெளிவாகச்சொல்லுகையாலும் நித்யவிபூதிக்கு உத்பத்தியை யொரு ப்ரமாணமும் சொல்லாமையாலும் நித்யவிபூதியை ஆகாயத்ரு ட்டாந்தத்தாலே உத்பத்தியுடையதென்று சொல்லத்தகாது. இனி, "யதா³த்மகோ ப⁴க³வாந் ததா³த்மிகா ப⁴க³வதோ வ்யக்தி:" (பகவானுடைய திருமேனியும் பகவதாத் மகம்) இது முதலான ப்ரமாணங்கள் திருமேனியும் நித்யவிபூதியும் பரமாத்ம ஸ்வ ரூபமேயென்று சொல்லுகையால் திருமேனிமுதலிய நித்யவிபூதியெல்லாம்பரமாத்ம ஸ்வரூபத்தில் வேறாயதன்றெனக்கொள்ளலாம் அந்தபக்ஷத்தில் எல்லாமறியப்படு மென்கிற ப்ரதிஜ்ஞைக்கும் விரோதமில்லை. நித்யவிபூதியில் விசித்திர உத்யாநவநங் களும் விசித்திரதடாகங்களு முண்டென்று சொல்லுகையால் இவற்றையெல்லாம் ப்ர ம்ம ஸ்வரூபமென்று கொள்ளுகை யுக்தமன்றோ வென்று ஸந்தேகம்வேண்டாம்; உத் யாநமுதலியவை யுண்டென்று சொல்லுகிறவாக்யங்களுக்கு உத்யாநவநமுதலியவற் றில் வருகிற ஆநந்தமெல்லாம் ப்ரம்மாநந்தத்தின் அளியென்னலாம்படி எல்லா ஆநந் தங்களையும் ப்ரம்மாநுபவம் தருமென்று கருத்தாகையால் தஹராதிகரணததில் பா ஷ்யம் சுருதப்ரகாசிகை இவ்விரண்டிலு மிவ்வாறே இங்குண்டான ஆநந்தங்களும் இல்லாத ஆநந்தங்களுமெல்லாம் ப்ரம்மாநந்தத்திலடங்கியதென்று அருளிச்செய்தார் கள். ஆனதால் ப்ரம்மஸ்வரூபமே நித்யவிபூதி என்றாலது சேராது. விரஜை யென் கிற திவ்யநதியைத்தாண்டிச் சேரவேண்டிய திவ்யலோகத்திலடங்கிய ஐரம்மதீய மென்கிற தடாகமுதலியவை ப்ரம்மஸ்வரூபமே யென்ற சொல்லுவது பொருந்தா தன்றோ. ஆகையால் நித்யவஸ்துக்களுக்கு ஆத்மாவாகையாவது அப்ருதக்ஸித்திமற்ற வைகளுக்கு ஆத்மாவாகையாவது உபாதாநகாரணமாகை ஆகையாலனுபபத்தியொன் றுமில்லை. ஆக உபாதாநகாரணமாகியப்ரம்மமறியப்பட்டபோது அப்ருதக்ஸித்த விசே ஷணங்களான மற்றெல்லாமறியப்படுமாகையால்ப்ரம்மத்தையறிந்த போதெல்லா மறி யப்படுமென்கிற ப்ரதிஜ்ஞை பொருத்தமுடையதாகின்றது. அல்லது, விசேஷணமா கிய ப்ரபஞ்சத்தையே யுத்தேசித்து ப்ரச்நம்பண்ணப்பட்டாலும், விஷ்ணுபுராணத் தில் ஆதிபரதசரிதத்தில் நீயாரென்றுகேட்ட ஸௌவீரராஜ ப்ரசுநத்திற்கு, ப்ரசுநம் கேவல சரீரஸம்பந்தமுடைய ஆத்மாவைப்பற்றியதானாலும் உண்மையில் நீயென்கி றபதத்திற்கு சுத்தாத்மஸ்வரூபமே பொருளெனவறிவித்தற்கு ஆதிபரதர் "யதா³ ஸமஸ்ததே³ஹேஷு புமாநேகோ வ்யவஸ்தி²த:" "யத்³யந்யோஸ்தி பர: கோபி" இவைமுதலியசுலோகங்களில் சுத்தாத்மஸ்வரூபத்தைப்பற்றி விடையளித்தாப்

http://acharya.org

போலும், அதர்வசிரஸ்ஸில் தேவர்கள் உருத்திரனை நீ யாரென்று கேட்டபோது தேவர்கள் கருத்துப்படி நீ யென்கிறபதத்திற்கு ருத்ரனே பொருளானாலும் எல்லாப் பதங்களும் பரமாத்மாவரையில் போதிக்கின்றனவென் றறிவித்தற்கு உருத்திரன் நீ யென்கிற பதத்திற்குப் பரமாத்மாவைப் பொருளாகக்கருதி "அஹமேக: ப்ரதமமாஸம்" என்று துடங்கி பரமாத்மஸ்வரூபத்தைப்பற்றி விடைதந்தாப்போலவும் இங்கும் ப்ரச்நத்தில் எல்லாமென்கிற பதத்திற்கு விசேஷணமே பொருளானாலும் விசேஷணத்தையுணர்த்துகிற சபதம் விசேஷ்யமாகிய ப்ரம்மத்தைபோதிக்குமென்றறிவித்தற்கு ஸ்தூலஸூக்ஷ்மப்ரம்மஸ்வரூபத்தைப்பற்றி உத்தரம் சொல்லப்பட்டாலும் குற்றமில்லையானதால் ஒருவிதஸந்தேகத்திற்கு மிடமில்லை. இவ்விசாரத்தை ப்ருஹதாரண்ய உபநிஷத்திற்கு வ்யாக்யாநம் செய்யும்போது விளங்க விவரித்து உபந்யஸிக்கப்போகிறோம். இங்கு இவ்வளவே போதுமென்று நிறுத்துகிறோம்.

௪. தஸ்மை ஸ ஹோவாச । த்வே வித்யே வேதிதவ்யே இதி ஹ ஸ்ம யத் ப்ரஹ்மவிதோ வதந்தி பரா சைவாபரா ச ॥

౪. తస్మై స హోవాచ ॥ ద్వే విద్యే వేదితవ్యే ఇతి హ స్మ యద్బ్రహ్మవిదో వదంతి పరా చైవాప రా చ॥

(ப்-ம்.) பரா ச அபரா ச வித்யே - பரவித்யைஅபரவித்யையென்கிற விரண்டுவித்யைகள், யத்-யாதொன்றை, (ப்ராப்தும்-அடைவதற்கு) வேதிதவ்யே-அறியத்தக்கவையென்று, ப்ரஹ்மவித: வதந்தி-ப்ரம்மஜ்ஞாநிகள் சொல்லுகிறார்களோ, (அதையறிந்தாலெல்லா மறியப்படும்.) இதி தஸ்மை ஸ: உவாச - இப்படி சௌநகருக்கு அங்கிரஸ்ஸு சொன்னார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பரவித்யை பரமாத்மாவைப்பற்றியது. அபரவித்யைதருமம் அதருமம் இவைகளுக்குஸாதநம் இவைகளின்பலம் இவைகளைப்பற்றியது. ப்ரசநத்திற்குத்தரம் நேரில்லையென்றால், பூர்வபக்ஷம் சொல்லிஸித்தாந்தம் சொல்வது போலபரவித்யையுணர்த்தி இத்தால் ப்ரம்மத்தையறிந்தபோதெல்லாமறியப்படுமென்று சொல்வதற்கு அபரவித்யைபரவித்யையென்று பிரித்துச் சொல்லப்படுகையால் குற்றமில்லை என்று சங்கரபாஷ்யாபிப்ராயம். ப்ரம்மத்தையடைவதற்கு இரண்டுவித்யைகளறியத்தக்கவை என்கிறவிடத்தில் அடைவதற்கு என்கிறபதம் வருவிக்கப்பட்டது. இது, பகவத்பாஷ்யகாரர் ப்ரம்மத்தையடைய விரும்பினவனுக்கென்று இந்தசுருதி வ்யாக்யாநத்திலருளிச்செய்கையாலவரது திருவுள்ளமேயாம். அப்படிப்பட்டப்ரம்மமறியப்பட்டபோது எல்லாமறியப்படுமென்பதும் சேர்க்கப்பட்டது. சேராதபோதுப்ரசநம்வேறு உத்தரம்வேறென்று அஸங்கதமாம். ஆகையால் பதஉரையால் விளங்கும் கருத்தே இந்தசுலோகத்தின் கருத்தென்று இராமாநுஜ பாஷ்யத்திலடங்கிய வபிப்ராயம்.


http://acharya.org

௫. 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌰𑌾 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑍋 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑍋𑌽𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑍋 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑍋 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌮𑌿𑌤𑌿 𑌅𑌥 𑌪𑌰𑌾 𑌯𑌯𑌾 𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 ||

5. తత్రాపరా ఋగ్వేదో యజుర్వేదస్సామవేదోఽథర్వవేదశ్శిక్షా కల్పో వ్యాకరణం నిరుక్తం ఛన్దో జ్యోతిషమితి అథ పరా యయా తదక్షరమధిగమ్యతే॥

(ப-ம்.) 𑌤𑌤𑍍𑌰-இவ்வித்யைகளுக்குள், 𑌅𑌪𑌰𑌾- அபரவித்யையானது, 𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌃-𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃 𑌅𑌥𑌰𑍍𑌵𑌵𑍇𑌦𑌃 𑌶𑌿𑌕𑍍𑌷𑌾 𑌕𑌲𑍍𑌪𑌃 𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂 𑌨𑌿𑌰𑍁𑌕𑍍𑌤𑌂 𑌛𑌨𑍍𑌦𑌃 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑌂 𑌇𑌤𑌿-ருக்யஜுஸ்ஸாமாதர்வணங்களென்கிற நான்குவேதங்களும் சிக்ஷைமுதலிய ஆறங்கங்களுமாகிய இவையேயாம். 𑌯𑌯𑌾 𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌅𑌧𑌿𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 - யாதொன்றாலே யந்தவக்ஷரபரப்ரம்ம மறியப்படுமோ, 𑌪𑌰𑌾 𑌅𑌥 - அந்த பரவித்யைமேலே சொல்லப்படுகிறது

ஸ0-ஹா.—அதிகம்யதே என்கிறபதத்திற்கு அடையப்படுமென்றுபொருள். அறியப்படுமென்று பொருளாகுலும் அடையப்படுமென்றே பொருள்சொல்லப்பட்டதாம் எவ்வழியாலேஎனில்; அவித்யைநீங்குதலேயன்றோ ப்ரம்மப்ராப்தி யாகின்றது; வேறல்லவன்றோ; அவித்யைநீங்குவது ப்ரம்மத்தையறிந்தாலன்றோ. ஆனதால் ப்ரம்மத்தை யறிந்தபோதே அவித்யைநீங்குவதால் ப்ரம்மத்தையடைவதும் ப்ரம்மத்தையறிவது மொன்றேயாம். இனி, இங்குபரவித்யையைவேதங்களில் சேராததாகச்சொல்லுகின்றமையால், "𑌯𑌾 𑌵𑍇𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃" என்கிற வசநத்தின்படி வேதபாஹ்யங்களானவை அப்ரமாணங்களாய் மோக்ஷவிரோதிகளாயிருக்குமாகையால் வேதபாஹ்யமான பரவித்யைமோக்ஷஸாதநமாயாவது எங்ஙநமெனில்; உபநிஷத்துக்களை வேதபாஹ்யங்களென்றிங்கு சொல்லவில்லை. ப்ரம்மஜ்ஞாநத்தை சப்தரூபமாகிய வேதத்தில் வேறென்றுசொல்லிற்று. அபரவித்யை சப்தரூபமாகிய வேத சாஸ்த்ரமாகையாலே பரவித்யையப்படி யானதல்ல வென்று சொல்லப்பட்டது. உபநிஷத்திஞல் சொல்லப்படுகிற அக்ஷரபரப்ரம்மம் ஆசார்யனைக்கிட்டி வைராக்யமடைந்தவனு லறியப்படுமென்று ப்ரம்மவித்யையைப் பிரித்து பரவித்யையென்றுபேரிட்டது.

ஏா-ஹா.—பரவித்யை அபரவித்யைஎன்றெடுத்த க்ரமத்தைவிட்டு முன்னபரவித்யையைச்சொல்வதுஸூசீகடாகந்யாயத்தாலே. ஆறங்கங்களும் உபப்ரும்மணங்களான ஸ்ம்ருதீதிஹாஸபுராணங்களும் நான்குவேதங்களும் வேதாந்தங்களுமாகிய சாஸ்திரத்தால்பிறக்கிற ப்ரத்யக்ஷரூபமாகாத சாப்தஜ்ஞாநமபரவித்யையெனப்படுகிறது. பரவித்யையாவது —விவேகம் விமோகம் அப்யாஸம் க்ரியைகல்யாணம் அநவஸாதம் அநுத்தர்ஷம் என்கிற ஸாதநஸப்தகஸஹாயத்தாலே பிறக்குமதாய் ச்ரவணத்தால் பிறந்தபரோக்ஷ ஜ்ஞாநத்திற்குப் பின்னுண்டாவதாய் ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாயிருக்கிற ஜ்ஞாநமேயாம். இத்தால், பகவத்பாஷ்யகாரரருளிச்செய்தபடி ச்ருதிதாத்பர்யமென்றுகாட்டப்பட்டது.

http://acharya.org

௬. யத்தத³த்³ரேஶ்யமக்³ராஹ்யமகோ³த்ரமவர்ணமசக்ஷு:ஶ்ரோத்ரம் தத³பாணிபாத³ம் | நித்யம் விபு⁴ம் ஸர்வக³தம் ஸுஸூக்ஷ்மம் தத³வ்யயம் யத்³பூ⁴தயோனிம் பரிபஶ்யந்தி தீ⁴ரா:||

౬. యత్తదద్రేశ్యమగ్రాహ్యమగోత్రమవర్ణమచక్షుశ్శ్రోత్రం తదపాణిపాదమ్। నిత్యం విభుం సర్వగతం సుసూక్ష్మం తదవ్యయం యద్భూతయోనిం పరిపశ్యంతి ధీరాః॥

(ப-ம்.) யத்தத்-யாதொன்று, அத்³ரேஶ்யம்-அறியப்படாததோ, அக்³ராஹ்யம்-கிரகிக்கப்படாததோ, அகோ³த்ரம்-குலமில்லாததோ, அவர்ணம்-ப்ரம்மக்ஷத்ரியாதி ஜாதியில்லாததோ, அசக்ஷு:ஶ்ரோத்ரம்-கண்காதுமுதலியஜ்ஞாநேந்திரியங்களில்லாததும், தத்-அப்படியேப்ரஸித்தமானதும், அபாணிபாத³ம்-கைகால்முதலிய கர்மேந்திரியங்களில்லாததும், நித்யம்-காலபரிச்சேதமில்லாததும், விபு⁴ம்-தேசபரிச்சேதமில்லாததும், ஸர்வக³தம்-வஸ்துபரிச்சேதமில்லாததும், ஸுஸூக்ஷ்மம்-மிகச்சூக்ஷ்மமானதும், யத்-யாதொன்றோ, தத்-அதானது, அவ்யயம்-அக்ஷரபரப்ரம்மமாம், யத்-யாதொருப்ரம்மத்தை, தீ⁴ரா:-அறிவுடையோர், பூ⁴தயோனிம் - ஸமஸ்தபூதங்களுக்குமுபாதாநகாரணமென்று, பரிபஶ்யந்தி-அறிகிறார்கள்.

ஸம்-ஸா.—யாகம் முதலியவற்றைவிதிக்கும்போது கர்த்தாகரணம்முதலியவனேகஸாமக்ரிகளைபோதிக்கிற வாக்கியார்த்தஜ்ஞாநம் வந்தபின்னநுஷ்டிக்கவேண்டியக்ரியையுண்டாயிருக்கிறாப்போல பரவித்யைஸ்தலத்தில் பின்னனுஷ்டிக்கவேண்டியக்ரியையொன்றில்லை. வாக்யார்த்தத்தை யறிந்தபோதே பரவித்யைமுற்றுப்பெறுகிறது; வாக்கியங்களில் சொல்லியபடி அர்த்தங்களில் நிஷ்டையொழிய மற்றொன்றுமில்லாமையாலே. ஆனதால் பரவித்யையை நிச்சயிப்பதற்கு விசேஷணங்களுடனக்ஷரபரப்ரம்மத்தை யோதி விசேஷப்படுத்துகிறது. இனி சொல்லப்போகிற ப்ரம்மத்தைபுத்தியில் தேக்கிக்கொண்டிருக்கையால் யாதொன்றெனப் பேசப்படுகிறது ஜ்ஞாநம்புறப்படும்வழியாகிய பஞ்சேந்திரியம்புத்தி முதலியவற்றுக்குத் தோற்றாததும் கர்மேந்திரியங்களுக்கு விஷயமல்லாததும் மூலகாரண ஸம்பந்தமில்லாததும் த்ரவ்ய தர்மங்களாகிய ஸ்தூலத்வமுதலிய தர்மங்களில்லாததும் நாமரூபங்களை க்ரஹியாநிற்கிற கண் செவிமுதலியவையில்லாததும் கர்மேந்திரியமில்லாததும் இவ்வாறு க்ரகிக்கப்படுதலும் க்ரஹித்தலுமில்லாமையாலே நித்யமானதும் நாநாரூபத்தையடைவதும் ஆகாயம்போலே வ்யாபகமானதும் சப்தாதிஸ்தூலகாரணங்களில்லாமையால் மிகச்சூக்ஷ்மமானதும் இப்படிப்பட்டதானதாலழியாததுமான ப்ரம்மத்தை எல்லாவற்றிற்கு மாத்மாகவும் ஸர்வபூதங்களுக்கு முபாதாநகாரணமாகவும் விவேகிகளறிகிறார்கள். ப்ரம்மமெல்லாவற்றையுமறிந்ததென்று சொல்லுகையால் உலகத்திலறிபவர்க்கு இந்திரியஸஹாயம் வேண்டியிருப்பதாலவ்வாறு ப்ரம்மத்திற்குவேண்டுவதில்லையென்று சொல்வதுமுக்யமாம். இப்படியே கண்ணில்லாமலே பார்க்கிறான் காதில்லாமலே கேழ்கிறானென்று வேறுச்ருதிகளும் சொல்லுகின்றன. சப்தாதிஸ்தூலகாரணமில்லாமையாலென்றது சப்தாதிகுணங்களையுடைய ஆகாசம் வாயு அக்நிமுதலிய

http://acharya.org

வையொன்றிலுமொன்று ஸ்தூலமாயிருப்பதுபற்றி. அழிவில்லாததென்பதற்கு சரீரமில்லாமையும் வேறுபாடில்லாமையும் குணமில்லாமையும் காரணமாகிறது. இவையுண்டாகிலன்றோ இவைகளின்வழியாலே குறைவரக்கூடும் இவையில்லையானதாலெவ்வழியாலும்குறையில்லை ஆகஇப்படிப்பட்டப்ரம்மத்தையறியச்செய்வது பரவித்யையென்றுமுடிவானகருத்து.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதவுரையின்படிவிளங்கும் கருத்தேஇராமாநுஜபாஷ்யத்தில் கொள்ளப்பட்டது. யோநிசப்தம் உபாதாநகாரணத்தைச் சொல்லுமென்பது மேல்வாக்யத்தால் விளங்குமென்று பகவத்பாஷ்யகாரரருளிச் செய்தாரென்று யோனிசப்தம் உபாதாநகாரணத்தை போதிப்பதற்குக்காரணமும் ப்ரமாணமாகப்ரக்ருத்யதிகரணபாஷ்யமும் காட்டப்பட்டது.

எ. யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோஸ்தி கஶ்சித் । வ்ருக்ஷ இவ ஸ்தப்தோ திவி திஷ்டத்யேகஸ்தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம் ॥

௭. యస్మాత్పరం నాపరమస్తి కించిద్యస్మాన్నాణీయో న జ్యాయోఽస్తి కశ్చిత్ । వృక్ష ఇవ స్తబ్ధో దివి తిష్ఠత్యేకస్తేనేదం పూర్ణం పురుషేణ సర్వమ్॥

(ப-ம்) யஸ்மாத்-யாதொருப்ரம்மத்தைக்காட்டில், பரம் அபரம் கிஞ்சித்நாஸ்தி-வேறொருசிறந்தவஸ்து கிடையாதோ, யஸ்மாத்அணீய: ந- எந்தப்ரம்மத்தில் சிறியதில்லையோ, யஸ்மாத்ஜ்யாய: கஶ்சித்ந - எந்தப்ரம்மத்தில்பெரியதில்லையோ, அப்படிப்பட்டப்ரம்மமாகிய பரமபுருஷன், ஏக:வ்ருக்ஷ:இவஸ்தப்த:திவி திஷ்டதி- ஒருவனாய் வ்ருக்ஷம்போலே யொருவருக்கும்வணங்காதவனாய் பரமபதத்திலிருக்கிறான், தேநபுருஷேண இதம்ஸர்வம்பூர்ணம் - அந்தபரமபுருஷனாலிவையெல்லாம் வ்யாபிக்கப்பட்டிருக்கிறது.

ரா-ஸா.—ப்ரம்மம் எல்லாவற்றிற்கு முபாதாநகாரணமென்பது சேரும்வழியாது? மண்முதலியவையே கடமுதலியவற்றிற்கு பாதாநகாரணமாகின்றனவன்றோ; எனில் சொல்லுகிறது. எல்லாவற்றிற்குமாத்மாவாயிருப்பதால் மண்முதலியவற்றைச் சரீரமாகஉடைய ப்ரம்மமேகாரணமாகின்றது; ஆனதால் விரோதமில்லை ஆக இப்படிஸர்வோபாதாநமாகையால் ப்ரம்மத்தில் சிறந்தவஸ்து மற்றொன்றில்லை அணுவுக்கணுமகத்துக்கு மகத்தாயிருக்கும் அந்தப்ரம்மமேபுருஷோத்தமன். இவனுக்கு ஸ்வாமிஒருவனுமில்லாமையாலே யாருக்குமிவன்வணங்கான். அவனுக்கிருப்பிடம் பரமபதம். இந்தமந்திரத்திற்குச் சிலர்வ்யாக்யாநம் செய்யவில்லையாயினும் ஸ்ரீவ்யாஸாசார்யர் வ்யாக்யாநம் செய்தார்.

http://acharya.org

பதாந்வயார்த்தபேதங்கள்.

இந்த மந்திரத்திற்கு சங்கரபாஷ்யமில்லை. இதுபற்றியே சிலரிம்மந்திரத்திற்கு வ்யாக்கியாநம் செய்யவில்லை என்று இராமாநுஜபாஷ்யத்தில் சொன்னது.

௮. யதோர்ணநாபிஸ்ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச யதா ப்ருதிவ்யாமோஷதயஸ்ஸம்பவந்தி । யதா ஸத: புருஷாத்கேஶலோமானி ததாக்ஷராத்ஸம்பவதீஹ விஶ்வம் ॥

౮. యథోర్ణనాభిః సృజతే గృహ్ణతే చ యథా పృథివ్యామోషధయః సంభవంతి । యథా సతః పురుషాత్కేశలోమాని తథాక్షరాత్సంభవతీహ విశ్వమ్॥

(ப-ம்.) ஊர்ணநாபி:-சிலந்திப்பூச்சியானது, யதா - எப்படி, ஸ்ருஜதே-ஸ்ருஷ்டிக்கின்றதோ, க்ருஹ்ணதே-கிரஹிக்கின்றதோ, ப்ருதிவ்யாம் யதா ஓஷதய: ஸம்பவந்தி - பூமியிலெப்படி பலஔஷதிகளுண்டாகின்றனவோ, யதா ஸத: புருஷாத் கேஶலோமானி - ஜீவித்திருக்கிறமனிதனிடத்தில் எப்படி தலைமயிர் உடம்புமயிர்பிறக்கின்றனவோ, ததா அக்ஷராத் இஹ விஶ்வம் ஸம்பவதி - அப்படியே அக்ஷரபரப்ரம்மத்திலிருந்து ஸமஸ்தமுமுண்டாகிறது.

ஸம்-ஸா.—அனேகதிருஷ்டாந்தங்களால் அக்ஷரபரப்ரம்மம் உபாதாநகாரணமென்பதை வலியுறுத்துகிறது.

ஶா-ஸா.—உபாதாநகாரணமும் அதின்காரியமும் ஏகஜாதியாயிருக்கவேண்டும்; அன்றியிலே உபாதாநகாரணத்தில் வேறான நிமித்தகாரணமொன்றுண்டாகையால அதுஉபாதாநஞ்ஞாநத்தாலறியப்படாமையாலு பாதாநகாரணமாகிய ப்ரம்மமொன்றையறிந்தபோதே எல்லாமறியப்படுமென்பதற்கு வழியில்லை. உபாதாநகாரணத்தின் ரூபம்மாறியே காரியமாகையாலு பாதாநகாரணமாகிய ப்ரம்மத்திற்கு ரூபம்மாறவேண்டும் ப்ரம்மத்திற்குரூபம்மாறாது ஆனதாலிதுசேரும்படியாதெனில் இந்த சங்கையை இந்தமந்திரம் தீர்க்கின்றது.எப்படி சிலந்திப்பூச்சிமுதலியவை சரீர த்வாரா வேறொருநிமித்தத்தை வேண்டாமல் தன்ஸ்வரூபமும் கெடாமலுபாதாநகாரணமாகின்றனவோ, இப்படியே ப்ரம்மமும் சேதநாசேதநமாகிய சரீரத்வார உபாதாந காரணமாகையாலொரு தோஷமுமில்லை ஆகையால் ப்ரம்மம் எல்லாவற்றிற்கு முபாதாநகாரணமாகிறது,

௯. தபஸா சீயதே ப்ரஹ்ம ததோऽந்நமபிஜாயதே । அந்நாத்ப்ராணோ மந: ஸத்யம் லோகா: கர்மஸு சாம்ருதம் ॥

౯. తపసా చీయతే బ్రహ్మ తతోఽన్నమభిజాయతే । అన్నాత్ప్రాణో మనః సత్యం లోకాః కర్మసు చామృతమ్॥

http://acharya.org

(ப்-ம்.) ப்ரஹ்ம-பரப்ரம்மமானது, தபஸா-ஸங்கல்பத்தால், சீயதே-ஸ்தூலாவஸ்தையயடைகிறது. தத:-அந்த ஸ்தூலாவஸ்தப்ரம்மத்திலிருந்து, அந்நம்-அபிஜாயதே- அவ்யாக்ருதமென்கிற ப்ரக்ருதியுண்டாகும், அந்நாத்-அந்தப்ரக்ருதியிலிருந்து, ப்ராண:-ப்ராணனும், மந:-மனஸ்ஸும், ஸத்யம்-ஜீவாத்மாக்களும், லோகா: - அவர்களுக்கு லோகங்களும், கர்மஸு அம்ருதம் - மொக்ஷோபாயமும் பிறக்கும்.

ஶம்-ஸா.—பிரம்மத்தினிடத்தில் பிறக்கும்போது கிரமம் விளங்க இம்மந்திரம் போதிக்கிறது. ப்ரம்மத்திலிருந்து ப்ரக்ருதியும் ப்ரக்ருதியிலிருந்து ஹிரண்யகர்பனும் ஹிரண்யகர்பனிடத்திலிருந்து மனஸ்ஸும் மநஸ்ஸிலிருந்து பூதபஞ்சகமும் பூதபஞ்சகத்திலிருந்து எல்லாஉலகமும்பிறக்கும் அந்தலோகங்களில் வர்ணாச்ரமங்களுக்குத்தக்ககர்மங்களும் கர்மபலங்களுமுண்டாகின்றன.

ரா-ஸா.—ப்ரம்மத்திலிருந்து உலகம்பிறக்கும்வழி யோதுகிறது. ப்ரம்மம் ஸங்கல்பத்தாலே சரீரத்வாரா ஜகத்தாகப் பரிணமித்து தன்னம்சமாகிய ஜீவாத்மாக்களுக்கு மோக்ஷஸாதநமாகிய கர்மங்களை யுண்டுபண்ணித்தந்து மோக்ஷபலத்தைத் தருகிறது. இதின்விரிவுபாஷ்யத்திலும் சுருதப்ரகாசிகையிலும் கண்டுகொள்வது.

௧௦. யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:|
தஸ்மாதேதத் ப்ரஹ்ம நாம ரூபமந்நம் ச ஜாயதே||

౧౦. యస్సర్వజ్ఞః సర్వవిద్యస్యజ్ఞానమయ న్తపః| తస్మాదేతద్బ్రహ్మనామ రూపమన్నఞ్చ జాయతే॥

(ப்-ம்.) ய:-எந்தஅக்ஷரபரப்ரம்மம், ஸர்வஜ்ஞ:-எல்லாவற்றையுமறிந்ததோ, ய:-எந்தப்ரம்மம், ஸர்வவித்-எல்லாவிசேஷங்களையுமறியுமோ, யஸ்ய-எந்தப்ரம்மத்திற்கு, தப:-ஸங்கல்பமானது, ஜ்ஞாநமயம்- ஜ்ஞாநமேயோ, தஸ்மாத்-அந்தப்ரம்மத்திலிருந்து, ஏதத் - ப்ரஹ்மநாமரூபமந்நம் ச ஜாயதே - முன்சொன்னபடி நாமரூபாத்மகமாகிய ப்ரபஞ்சமுண்டாகிறது.

ஶம்-ஸா.—கீழ்ச்சொல்லியபடியே பொருள்கொள்வதால் முன்சொல்லிய க்ரமத்திற்கு விரோதமில்லை.

ரா-ஸா.—இந்த மந்திரத்தில் ஸர்வஜ்ஞத்வம் விதிக்கப்படுகிறது என்று கொள்க. இப்படிகொள்வதே மீமாம்ஸாந்யாயத்திற்குச் சேரும் ப்ரம்மமே உபாதாநமும் நிமித்தமும் என்பது இம்மந்திரத்தால் விளங்கும். அந்த ப்ரம்மம் நாராயணன். வேறுதேவதையல்ல. விஸ்தாரம் வேறிடத்திலறியத்தக்கது.

முதல்முண்டகம்முதல்கண்டம்முற்றிற்று.

பரப்ரம்மணே நம:

http://acharya.org

# 𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍

## 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃,

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍.

---

க. 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌕𑌵𑌯𑍋 𑌯𑌾𑌨𑍍𑌯𑌪𑌶𑍍𑌯𑌂𑌸𑍍𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑌿। 𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑌥 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌾𑌃 𑌏𑌷 𑌵𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑍇॥

౧. మంత్రేషుకర్మాణికవయోయాన్యపశ్యంస్తాని త్రేతాయాంబహుధా సంతతాని।
తాన్యాచరథనియతంసత్యకామాఏషవః పంథాస్సుకృతస్యలోకే॥

(ப-ம்.) 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍍- அப்படிப்பட்டவிது ஸத்யம். 𑌕𑌵𑌯𑌃 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌯𑌾𑌨𑌿 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 - மகர்ஷிகள்வேதமந்திரங்களில் எந்த கர்மங்களைக்கண்டார்களோ, 𑌤𑌾𑌨𑌿 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌮𑍍 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌸𑌨𑍍𑌤𑌤𑌾𑌨𑌿- அந்த அக்கிஹோத்திராதி கர்மங்கள் த்ரேதாக்கியில் பலவாகவிதிக்கப்பட்டன, 𑌸𑌤𑍍𑌯𑌕𑌾𑌮𑌾𑌃-ஸத்யமான ப்ரம்மத்தைவிரும்புகின்ற வதிகாரிகளே, 𑌨𑌿𑌯𑌤𑌮𑍍 𑌤𑌾𑌨𑍍𑌯𑌾𑌚𑌰𑌤 - தப்பாமல் அந்தகர்மங்களை யநுஷ்டியுங்கோள், 𑌸𑍁𑌕𑍃𑌤𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑍇 𑌏𑌷𑌃 𑌵𑌃 𑌪𑌨𑍍𑌥𑌾𑌃 - மோக்ஷத்திற்காகச்செய்கிற உபாஸநத்திற்கு இந்தகர்மாநுஷ்டாநமங்க மாகையாலே பலமாகியமோக்ஷத்திற்கு வழியாம்.

ஸம்-ஸா.—"பரீக்ஷ்யலோகாந்கர்மசிதாந்" என்கிறபடி கர்மங்களைப் பரீக்ஷித்து அவைகளைவிட்டு ப்ரம்மவித்யையிலிழிவதற்கு கர்மாநுஷ்டாநவிதி சொல்லப்படுகிறது.

ரா-ஸா.—மோக்ஷஸாதநமாகிய உபாஸநாங்கமாக கர்மாநுஷ்டாநம் விதிக்கப்படுகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

மற்றக்கருத்து இரண்டுபாஷ்யங்களுக்கு மொன்றே.

உ. 𑌯𑌦𑌾 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍇 𑌹𑍍𑌯𑌰𑍍𑌚𑌿𑌃 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑍇। 𑌤𑌦𑌾𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌾𑌵𑌨𑍍𑌤𑌰𑍇𑌣𑌾𑌹𑍁𑌤𑍀𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑍇𑌚𑍍𑌛𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌹𑍁𑌤𑌮𑍍॥

౨. యదాలేలాయతేహ్యర్చి స్సమిద్ధేహవ్యవాహనే ।
తదాజ్యభాగావంతరేణాహుతీః ప్రతిపాదయేచ్ఛ్రద్ధయాహుతమ్॥

(ப-ம்.) 𑌸𑌮𑌿𑌦𑍍𑌧𑍇 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑍇 𑌅𑌰𑍍𑌚𑌿𑌃 𑌲𑍇𑌲𑌾𑌯𑌤𑍇 𑌯𑌦𑌾 𑌤𑌦𑌾 - அக்நி ஜ்வலிக்கும்போது, 𑌆𑌜𑍍𑌯𑌭𑌾𑌗𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑍇 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌆𑌹𑍁𑌤𑍀𑌃

http://acharya.org

ப்ரதிவாதயேச - ஜ்வாலையில், ஆஜ்யபாகமத்யத்தில் ஆகுதிஹோமம்பண்ணக்கடவன், ஹுதம் - அதுநல்லஹோமமாகிறது.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையாலே விளங்குங்கருத்து இரண்டுபாஷ்யங்களுக்கு மொன்றே.

ந. யஸ்யாக்நிஹோத்ரமதர்சமபௌர்ணமாஸமசாதுர்மாஸ்யமநாக்ரயணமதிதிவர்ஜிதஞ்ச| அஹுதமவைச்வதேவமவிதிநாஹுதமாஸப்தமாம்ஸ்தஸ்யலோகாந்ஹிநஸ்தி||

3. యస్యాగ్నిహోత్రమదర్శమపౌర్ణమాసమచాతుర్మాస్యమనాగ్రాయణమతిథివర్జితంచ।
అహుతమవైశ్వదేవమవిధినాహుతమాసప్తమాంస్తస్యలోకాన్హినస్తి॥

(ப-ம்.) யஸ்ய-யவனுடைய, அக்நிஹோத்ரம் - அக்நிஹோத்ரமானது, அதர்சம்-தர்சகர்மமில்லாததோ, அபௌர்ணமாஸம் - பௌர்ணமாஸ கர்மமில்லாததோ, அசாதுர்மாஸ்யம்-சாதுர்மாஸ்யகர்மமில்லாததோ, அநாக்ரயணம் - ஆக்ராயணகர்மமில்லாததோ, அதிதிவர்ஜிதம்-அதிதிபூஜையில்லாததோ, அவைச்வதேவம்-வைச்வதேவகர்மமில்லாததோ, அவிதிநாஹுதம்-விதிப்படி ஹோமம்பண்ணப்படாததோ, அப்படிப்பட்ட அக்நிஹோத்ரமானது, அஹுதம்-ஹோமம்பண்ணப்படாததாம். அதுவுமதவிற, தஸ்ய-அப்படிஹோமம்பண்ணவனுடைய, ஆஸப்தமாந்-ஏழுபுருஷன்வரையிலும் பலங்களையும், ஹிநஸ்தி-அழிக்கின்றது.

ஸம-ஹா.—ரா-ஹா.—எவனக்நிஹோத்ரகர்மத்தை விதிப்படி யநுஷ்டியாமலும் அக்நிஹோத்திராதி காரிக்கவச்யமான தர்சாதியாகங்களைச் செய்யாமலும் திரிகிறனோ அவன்செய்த அக்நிஹோத்ராதி கர்மங்கள் வீணாவதோடு இவனையும் இவனைச்சேர்ந்தாரையு மழித்துக்கெடுக்கும். ஆனதால் எல்லாக்ரமங்களையும் தவராம லநுஷ்டித்தாலது பயன்தருமல்லது தப்பினால்ஸங்கடங்களை யுண்டுபண்ணும் என்று பயத்துடன் தவராமல் அவைகளை யநுஷ்டிக்கக்கடவான்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

தர்சாதியாகங்கள் அக்நிஹோத்ரத்திற்கு அங்கமல்லவாயினும் நித்ய நைமித்திககர்மங்களைத் தவராம லநுஷ்டிக்கவேணுமென்று கருத்தினாலிப்படி கூறப்பட்டது. இக்கருத்து பகவத்பாஷ்யகாரராலும் வெளியிடப்பட்டது, என்று இராமாநுஜ பாஷ்யத்தில் விசேஷம்.

ச. காளீகராளீசமநோஜவாசஸுலோஹிதாயாசஸுதூம்ரவர்ணா| ஸ்புலிங்கிநீவிச்வருசீசதேவீலேலாயமாநாஇதிஸப்தஜிஹ்வா:||

४. కాళీకరాళీచమనోజవాచ సులోహితాయాచసుధూమ్రవర్ణా।
స్ఫులింగినీవిశ్వరూపీచ దేవీలేలాయమానాఇతిసప్తజిహ్వాః॥

http://acharya.org

(ப்-ம்.) காலீ-காளியென்றும், கராலீ ச - கராளியென்றும், மநோஜவா ச - மனோஜவையென்றும், ஸுலோஹிதா - சுலோகிதையென்றும், யா - யாதொன்று, ஸுதூம்ரவர்ணா - சுதூம்ரவர்ணையெனப்பட்டதோ, (அதுவும்) ஸ்புலிங்கிநீ - ஸ்புலிங்கிநியென்றும், தேவீ - பூசிக்கத்தக்கதான, விச்வரூபீ ச - விச்வரூபியென்றும், லேலாயமாநா: - அசைந்துகொண்டிருக்கிற, ஸப்த - ஏழு, ஜிஹ்வா: - நாக்குகள்.

ஶம்-ஹா-ஶா-ஹா.—பதாந்வயார்த்த பேதங்களில்லை. இதி, என்பது-என்றும், என்கிறபொருளைத்தருகின்றது; அதுஒன்றேயாயினும் பலவிடங்களிலும் சேர்த்துக்கொள்க.

ரு. ஏதேஷு யச்சரதே ப்ராஜமாநேஷு யதாகாலம் சாஹுத
யோ ஹ்யாததாயந் | தம் நயந்த்யேதா: ஸூர்யஸ்ய ரச்மயோ யத்ர தேவாநாம்
பதிரேகோऽதிவாஸ: ||

౫. ఏతేషుయశ్చరతేభ్రాజమానేషుయథాకాలంచాహుతయోహ్యాదదాయన్ ।
తంనయన్త్యేతాస్సూర్యస్యరశ్మయోయత్రదేవానాంపతిరేకోఽధివాసః॥

(ப்-ம்.) ப்ராஜமாநேஷு - விளங்குகிற, ஏதேஷு - இந்த நாக்குகளில், ய: - யாதொருவன், யதாகாலம் - விதித்தகாலங்களில், சரதே - ஹோமம்செய்கிறானோ, தம் - அவனை, ஆஹுதய: - ஹோமாஹுதிகள், ஆததாயந் - அழைத்துக்கொண்டு, ஏதா: - இந்த, ஸூர்யஸ்ய - சூரியனுடைய, ரச்மய: - கிரணங்களாக, (பூத்வா - ஆகி,) யத்ர - எந்தவிடத்தில், தேவாநாம் - தேவர்களுக்கு, பதி: - தலைவனானபிரமன், ஏக: - ஒப்பற்றவனாக, அதிவாஸ: - இருக்கிறானோ, தத்ர - அவ்விடத்தில், நயந்தி - கொண்டுவிடுகிறதுகள்.

ஶம்-ஹா-ஶா-ஹா.—மேற்கூறிய அக்நியின் நாக்குகளில் அவ்வோகாலங்களில் செய்யப்பட்ட வாகுதிகள் சூரியனுடைய கிரணங்களில் சேர்ந்துகொண்டு ஹோமஞ்செய்த புருஷனை எந்த விடத்தில் சகல தேவர்க்கு மதிபதியாகிய சதுர்முகன் வீற்றிருக்கிறானோ அவ்விடத்தில் கொண்டுசேர்க்கின்றன. இந்திரலோகத்தில் சேர்க்கின்றன என்பது சங்கரபாஷ்யத்தில் பேதம்.

சு. ஏஹ்யேஹீதி தமாஹுதய: ஸுவர்சஸ: ஸூர்யஸ்ய ரச்மிபிர்ய
ஜமாநம் வஹந்தி | ப்ரியாம் வாசமபிவதந்த்யோऽர்சயந்த்ய ஏஷ வ: புண்ய: ஸு
க்ருதோ ப்ரஹ்மலோக: ||

౬. ఏహ్యేహీతితమాహుతయస్సువర్చసస్సూర్యస్యరశ్మిభిర్యజమానంవహన్తి।
ప్రియాంవాచమభివదంత్యోఽర్చయన్త్యఏషవఃపుణ్యస్సుకృతోబ్రహ్మలోకః॥

(ப்-ம்.) தம் - அந்த, யஜமாநம் - யஜமானனை, ஸூர்யஸ்ய - சூரியனுடைய, ரச்மிபி: - கிரணங்களோடு, ஸம்ப்ருக்தா: - சேர்ந்த, ஸுவர்சஸ: - நல்லொளியோடுகூடிய, ஆஹுதய: - ஆகுதிகள், ஏஹி - ஏஹி - இதி - வாரும், வாரும், என்றும், ஏஷ: - இந்த, புண்ய: - சுத்தமான, ஸுக்ருத: - நல்ல



http://acharya.org

றத்தால் சாதிக்கப்பட்ட, ப்³ரஹ்மலோக: - சதுர்முகனுலகமானது, வ: - உம்முடையது, (ஏதி - என்றும்) ப்ரியாம் - பிரியமான, வாசம் - வார்த்தையை, அபி⁴வத³ந்த்ய: - சொல்லிக்கொண்டும், அர்சயந்த்ய: - பூசித்துக்கொண்டும்; வஹந்தி - அழைத்துக்கொண்டுபோகின்றன.

ஸம்-ஹா-பா-ஹா.—இந்த புருஷனை மேற்கூறிய வாகுதிகள் சூரியனுடைய கிரணங்களுடன் சேர்ந்துகொண்டு வாரும்வாரும் சுத்தமாயும் நல்லறங்களால் பெறப்பட்டதாயுமுள்ளசதுர்முகனுலகம் உம்முடையதே யென்று பிரியவார்த்தைகளைச் சொல்லி யழைத்துக்கொண்டு போகின்றன. சதுர்முகனுலக மென்னுமிடத்தில் இந்திரனுலகமென்பது சங்கரபாஷியத்தில் பேதம்.

எ. ப்லவா ஹ்யேதே அத்³ருடா⁴ யஜ்ஞரூபா அஷ்டாத³ஶோக்தமவரம் யேஷு கர்ம । ஏதச்ச்²ரேயோ யே(அ)பி⁴நந்த³ந்தி மூடா⁴ ஜராம்ருத்யும் தே புநரேவாபி யந்தி ॥

౭. ప్లవా హ్యేతే అదృఢా యజ్ఞరూపాః అష్టాదశోక్తమవరం యేషు కర్మ।
ఏతచ్ఛ్రేయో యేఽభినన్దన్తి మూఢా జరామృత్యుం తే పునరేవాపి యన్తి॥

(ப-ம்.) அஷ்டாத³ஶோக்தம் - பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டியதாக சொல்லப்பட்ட, அவரம் - தாழ்ந்த, கர்ம - யஜ்ஞமானது, யேஷு - எந்தபுருஷர்களிடத்தில் (வர்த்ததே - இருக்கிறதோ,) ஏதே - இந்த, யஜ்ஞரூபா: - யஜ்ஞஞ்செய்பவர்கள், அத்³ருடா⁴: - உறுதியற்ற, ப்லவா: - தோணிகள், ஏதத் - இந்தகர்மத்தை, ஶ்ரேய: - நற்கதிக்குக்காரணமாக, யே - எந்த, மூடா⁴: - அறிவிலிகள், அபி⁴நந்த³ந்தி - கொண்டாடுகிறார்களோ, தே - அவர்கள், ஜராம்ருத்யும் - கிழத்தனமரணங்களை, புநரேவ - மறுபடிதானே, அபியந்தி - அடைகிறார்கள்.

ஸம்-ஹா.—ஜ்ஞானமில்லாமல் செய்யப்பட்ட யஜ்ஞம் முதலிய கருமங்கள் அவித்தையால் செய்யப்பட்டதாதலால் துக்கத்தையே விளைக்கத்தக்கவைகள் என்று சொல்லப்படுகிறது. பதினாறு ருத்விக்குகளும் பத்நி-யஜமானன் ஆக பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டுவதாக சொல்லப்பட்ட கருமங்களை யெவர்கள் செய்கிறார்களோ; அவர்கள் உறுதியற்ற தோணிகள்போல் ஸம்ஸாரமாகிய சமுத்திரத்தை தாண்ட சக்தியற்றவர்கள். இவைகளை முக்திக்குக்காரணமாக எண்ணுகிறவர்கள் தங்கள் புண்ணியங்கள் கழிந்தபோதே மேலுலகமான சுவர்க்கத்தில் நின்றும் மீண்டும் ஸம்ஸாரத்தையடைகிறார்கள்.

பா-ஹா. பதினெட்டு பெயர்களால் செய்யவேண்டுவதாகச் சொல்லப்பட்ட கருமங்களை எவர்கள் தாழ்ந்தபயன்களை விரும்பிச் செய்கிறார்களோ அவர்கள் உறுதியற்ற தொப்பம்போல் ஸம்ஸாரமாகிற சமுத்திரத்தை தாண்ட சக்தியற்றவர்களாக விருக்கிறார்கள். அல்லது பதினெட்டு ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட கருமங்கள் எந்த கருமங்களுக்கு அங்கங்களாகவிருக்கின்றனவோ. அந்த யஜ்ஞம் முதலிய கருமங்கள் உறுதியற்ற தோணிகள். அவைகளை நற்கதிக்குக்காரணமாக யெண்ணுகிறவர்கள் திரும்பவும் சம்சாரத்தை யடைகிறார்கள். என்று பலத்தைவிரும்பிச் செய்கிற கருமங்கள் நிந்திக்கப்படுகின்றன.

http://acharya.org

௮. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌧𑍀𑌰𑌾𑌃 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃।
𑌜𑌙𑍍𑌘𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 𑌪𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 𑌮𑍂𑌢𑌾 𑌅𑌨𑍍𑌧𑍇𑌨𑍈𑌵 𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌾 𑌯𑌥𑌾𑌨𑍍𑌧𑌾𑌃॥

౮. అవిద్యాయామన్తరేవర్తమానాస్స్వయంధీరాః పండితంమన్యమానాః।
జంఘన్యమానాః పరియంతిమూఢా అంధేనైవనీయమానాయథాంధాః॥

(ப-ம்.) 𑌮𑍂𑌢𑌾𑌃 - அறிவில்லாதவர்கள், 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑍇 - அவித்யையின்னடுவில், 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃 - இரானின்றவர்களாய், 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 - நாமே, 𑌧𑍀𑌰𑌾𑌃 - புத்திமான்கள், 𑌪𑌣𑍍𑌡𑌿𑌤𑌮𑍍𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 - பண்டிதர்கள், என்று நினைவுடையவர்களாய், 𑌜𑌙𑍍𑌘𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 - கிழத்தனம்முதலிய ரோகங்களால் பீடிக்கப்பட்டவர்களாய், 𑌅𑌨𑍍𑌧𑍇𑌨𑍈𑌵 - குருடனாலேயே, 𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌃 - வழிகாட்டப்படுகிற, 𑌅𑌨𑍍𑌧𑌾𑌃 𑌯𑌥𑌾 - குருடர்கள்போல, 𑌪𑌰𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 - சுழலுகிறார்கள்.

௯. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂𑌬𑌹𑍁𑌧𑌾 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌵𑌯𑌂𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾 𑌇𑌤𑍍𑌯𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑌿𑌬𑌾𑌲𑌾𑌃 । 𑌯𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑍋 𑌨𑌪𑍍𑌰𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑌿𑌰𑌾𑌗𑌾𑌤𑍍𑌤𑍇𑌨𑌾𑌤𑍁𑌰𑌾𑌃𑌕𑍍𑌷𑍀𑌣𑌲𑍋𑌕𑌾𑌶𑍍𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇॥

౯. అవిద్యాయాంబహుధావర్తమానాఃవయంకృతార్థా ఇత్యభిమన్యంతిబాలాః।
యత్కర్మిణోనప్రవేదయంతిరాగాత్తేనాతురాఃక్షీణలోకాశ్చ్యవంతే॥

(ப-ம்.) 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑍍-𑌬𑌹𑍁𑌧𑌾𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌃 - தேவர்மநுஷ்யர் முதலிய அநேகபேதங்களை யடைந்து இப்ப்ராக்ருதிமண்டலத்தில் வஸிக்கிற, 𑌬𑌾𑌲𑌾𑌃 - அறிவிலாதவர், 𑌵𑌯𑌮𑍍 - நாம், 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 - எல்லாம்பெற்றவர்கள், 𑌇𑌤𑌿 - என்று, 𑌅𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - எண்ணுகிறார்கள், 𑌯𑌤𑍍 - எந்தகாரணத்தால், 𑌕𑌰𑍍𑌮𑌿𑌣𑌃 - கர்மம்செய்பவர், 𑌰𑌾𑌗𑌾𑌤𑍍 - ஆசையினால், 𑌨𑌪𑍍𑌰𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑌿 - தத்வத்தையறியார்களோ, 𑌤𑍇𑌨 - அந்தகாரணத்தால், 𑌆𑌤𑍁𑌰𑌾𑌃 - பீடிக்கப்பட்டவர்களாய், 𑌕𑍍𑌷𑍀𑌣𑌲𑍋𑌕𑌾𑌃 - புண்யங்கழிந்தவர்களாய், 𑌚𑍍𑌯𑌵𑌨𑍍𑌤𑍇 - புண்யலோகங்களினின்றும் நழுவுகிறார்கள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

அவித்யை என்பதற்கு சங்கரபாஷ்யத்தில் மாயை என்றும் இராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரக்ருதி என்றும் பொருள்கூறப்பட்டிருக்கிறது. மற்றவைபத உரையில்போலவே இரண்டு சுலோகங்களிலும் இரண்டு பாஷ்யங்களிலு முரைக்கப்பட்டிருக்கின்றன.

௧0. 𑌇𑌷𑍍𑌟𑌾𑌪𑍂𑌰𑍍𑌤𑌂𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌵𑌰𑌿𑌷𑍍𑌠𑌂𑌨𑌾𑌨𑍍𑌯𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌵𑍇𑌦𑌯𑌨𑍍𑌤𑍇𑌪𑍍𑌰𑌮𑍂𑌢𑌾𑌃 । 𑌨𑌾𑌕𑌸𑍍𑌯𑌪𑍃𑌷𑍍𑌠𑍇𑌤𑍇𑌸𑍁𑌕𑍃𑌤𑍇𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑍍𑌵𑍇𑌮𑌂𑌲𑍋𑌕𑌂𑌹𑍀𑌨𑌤𑌰𑌂𑌵𑌾𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿॥

౧౦. ఇష్టాపూర్తంమన్యమానావరిష్ఠంనాన్యచ్ఛ్రేయోవేదయంతేప్రమూఢాః।
నాకస్యపృష్ఠేతేసుకృతేనుభూత్వేమంలోకంహీనతరంచావిశంతి॥

http://acharya.org

(ப்-ம்.) ப்ரமூடா: - அறியாதவர்கள், இஷ்டாபூர்த்தம் - யாகம்செய்தல் தடாகமுதலியவையுண்டாக்குதல் இவைகளை, வரிஷ்டம் - சிறந்ததாக, மந்யமாநா: - நினைத்தவர்களாய், அந்யச்ச்ரேய: - வேறுபுருஷார்த்தத்தை, நவேதயந்தே - தெரிந்துக்கொள்ளுகிறதில்லை. தே - அவர்கள், ஸுக்ருதே - புண்யத்தாலாகிய, நாகஸ்ய ப்ருஷ்டே - ஸ்வர்க்கலோகத்தில், அநுபூத்வா - கர்மபலத்தையநுபவித்து, இமம் லோகம் - இந்தமநுஷ்யலோகத்தையும், ஹீநதரம் வா - நரகாதிலோகத்தையும் ஆவிசந்தி - அடைகிருர்கள்.

கக. தப:ச்ரத்தே யே ஹ்யுபவஸந்த்யரண்யே சாந்தா வித்வாம்ஸோ பைக்ஷசர்யாம் சரந்த: । ஸூர்யத்வாரேண தே விரஜா: ப்ரயாந்தி யத்ராம்ருத: ஸ புருஷோ ஹ்யவ்யயாத்மா ॥

౧౧. తపశ్శ్రద్ధేయేహ్యుపవసన్త్యరణ్యేశాన్తావిద్వాంసోభైక్షచర్యాంచరన్తః ।
సూర్యద్వారేణతేవిరజాఃప్రయాంతియత్రామృతస్సపురుషోహ్యవ్యయాత్మా ॥

(ப்-ம்.) யே ஹி - யவர்கள், அரண்யே - ஏகாந்தஸ்தலத்தில், சாந்தா: - சாந்தியுடையவர்களாய், பைக்ஷசர்யாம் சரந்த: - பிக்ஷைசெய்கிறவாகளாய், வித்வாம்ஸ: - உபாஸகர்களாய், தப:ச்ரத்தே - ப்ரம்மத்தைபக்தியோடு, உபவஸந்தி - உபாஸிக்கிருர்களோ, தே - அவர்கள், விரஜா: - தோஷமில்லாதவர்களாய், ஸூர்யத்வாரேண - ஸூரியமார்க்கத்தாலே, ப்ரயாந்தி - போகிருர்கள், யத்ர - யந்த பரமபதத்தில், அம்ருத: - அம்ருத ஸ்வரூபியாயும், அவ்யயாத்மா - அழிவில்லாதவராயுமிருக்கிற, ஸ: புருஷ: ஹி - அந்த பரமபுருஷன் வஸிக்கிருரோ; அந்தபரமபதத்தை யடைகிருர்கள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில் தபச்சப்தத்திற்கு வர்ணுச்சிரமங்களுக்குரிய கருமமென்றும் ச்ரத்தை, என்பதற்கு ஹிரண்யகர்ப்பவிஷயமான வித்யைஎன்றும் இந்த சுலோகத்தில் சொல்லிய அதிகாரியடைவது ஸத்யலோகமென்றும் இது மோக்ஷமல்லவென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இராமாநுஜபாஷ்யத்திலிதுவே மோக்ஷமென்று வ்யாக்யாநம் செய்யப்பட்டது. மற்றவைகளிவிரண்டு பாஷ்யங்களு மிவ்விரண்டு ச்லோகங்களிலும் பதஉரையயே யநுஸரிக்கின்றன.

கஉ. பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந । தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம் ॥

౧౨. పరీక్ష్యలోకాన్కర్మచితాన్బ్రాహ్మణోనిర్వేదమాయాన్నాస్త్యకృతఃకృతేన ।
తద్విజ్ఞానార్థంసగురుమేవాభిగచ్ఛేత్సమిత్పాణిశ్శ్రోత్రియంబ్రహ్మనిష్ఠమ్ ॥

(ப்-ம்.) ப்ராஹ்மண: - வேதாத்யயநம் செய்த எந்த ப்ராம்மணன், கர்மசிதாந் - கர்மங்களாலாகிய, லோகாந் - லோகங்களை, பரீக்ஷ்ய - பரீமா

ம்ஸைகளைக்கொண்டு நன்கறிந்து, அக்ருத꞉-நித்யனாகிய புருஷன், க்ருதேந-அநித்யமான கர்மத்தினால், நாஸ்தி-அடையப்படமாட்டான் என்று, நிர்வேதம்-ஆயாத் - சிந்தையடைவனே, ஸ꞉ - அந்தப்ராம்மணன், தத்விஜ்ஞாநார்த்தம்-அந்தபுருஷனை யறியும்பொருட்டு, ஶ்ரோத்ரியம் - வேதாந்தமறிந்தவனாயும் ப்ரஹ்மநிஷ்டம் - ப்ராம்மநிஷ்டை யுடையவனாயுமிருக்கிற, குருமேவ-ஆசாரியனையே, ஸமித்பாணி꞉ - ஸமித்தைக் கையிலேந்திக்கொண்டவனாய், அபிகச்சேத் - அடையக்கடவன்.

௧௩. தஸ்மை ஸ வித்வாநுபஸந்நாய ஸம்யக் ப்ரஶாந்தசித்தாய ஶமாந்விதாய | யேநாக்ஷரம் புருஷம் வேத ஸத்யம் ப்ரோவாச தாம் தத்த்வதோ ப்ரஹ்மவித்யாம் ||

౧౩. తస్మైస విద్వానుపసన్నాయ సమ్యక్ప్రశాన్తచిత్తాయ శమాన్వితాయ।
యేనాక్షరం పురుషం వేద సత్యం ప్రోవాచ తాం తత్త్వతో బ్రహ్మవిద్యామ్॥

(ப-ம்.) ஸ꞉ - அந்த, வித்வாந் - ஆசாரியன், ஸம்யக் - சாஸ்திரப்படி, உபஸந்நாய - தன்னை யடைந்திருக்கிறவனும், ப்ரஶாந்தசித்தாய - சாந்தமான நெஞ்சையுடையவனும், ஶமாந்விதாய - மற்ற இந்திரியங்களினுடையவுமடக்கத்தையுடையவனுமான, தஸ்மை - அந்த சிஷ்யனையும்பொருட்டு, யேந - எந்தவித்தையினால், அக்ஷரம் - ஸ்வரூபவிகார மில்லாதவனும், ஸத்யம் - குணவிகாரமில்லாதவனுமான, புருஷம் - புருஷனை, வேத - தானறிந்துகொண்டானோ; தாம்ப்ரஹ்மவித்யாம் - அந்தப்ரம்மவித்யையை, தத்த்வத꞉ - உள்ளபடி, ப்ரோவாச - சொல்லக்கடவன்.

ஸம்-ஹா.—காரணகாரிய ரூபமாகிய இந்த ஸம்ஸாரத்தில் பூர்ணவிரக்தி பிறந்தவனுக்கு ப்ரம்மவித்தையை யிலதிகாரமென்று காட்டுவதற்கு இந்த சுலோகம் சொல்லப்படுகிறது. ஒருவன், அவித்யை ஆசை கருமம் முதலிய தோஷங்களையுடைய புருஷனால் அநுஷ்டிக்கத்தக்கதாகிய ருக்வேத முதலிய வற்றில் சொன்ன அபரவித்தைகளின் ஸ்வரூபத்தையும், அவைகளின் பலங்களாய் விதிக்கப்பட்ட தக்ஷிணாயந மார்க்கத்தாலு முத்தராயண மார்க்கத்தாலு மடையக்கூடிய லோகங்களையும், விதிப்படி செய்யாமையாலும் விதியினால் தடுக்கப்பட்டவைகளைச் செய்வதினாலு முண்டாகிற நரகம் முதலிய லோகங்களையும், ப்ரத்யக்ஷம் அநுமாநம் உபமாநம் வேதாகமம் இவைகளால் முற்றிலு முள்ளபடியறிந்து, இவைஸம்ஸாரத்தில் செல்லுவதற்குக்காரணங்களென்றும், வித்தும் முளையும்போல ஒன்றுக் கொன்று காரணமாய் அநேகாநர்த்தங்களுக் கிடமென்றும் அஸாரங்களென்றும் மாயை, கானல்தண்ணி கந்தர்வநகரம், ஸ்வப்நம் நீர்க்குமிழி முதலிய வற்றைப்போல க்ஷணந்தோறும் ஆவதுமழிவதுமாகிய தன்மையுடையன வென்றும் நிச்சயித்து, வ்யாக்ருதம் அவ்யாக்ருதம் என்கிற அவ்யக்தம் முதல் ஸ்தாவரம் வரையிலுள்ள ஸமஸ்தத்தையும் விட்டு, ப்ராஹ்மணன் வைராக்கிய மடையக் கடவன். அவித்யா காமதோஷாதிகளால் வருகிற கர்மங்களினா லுண்டாகும் தருமா தருமங்களைச் சேர்ந்தவைகளில் வைராக்யம் செய்து ப்ரம்ம வித்யையைப் பற்றுவதில் ப்ராம்மணனுக்கே முக்யாதிகார மாகையால் ப்ராம்மணனென் றெடுத்தது. வைராக்கிய மடை

http://acharya.org

யும் ப்ரகாரமாவது. இந்த ஸம்ஸாரத்தில் நித்யமான பதார்த்த மொன்றுமில்லை. எல்லாம் கருமத்தினாலுண்டானவை ஆகையா லநித்யங்களே, நித்யமாகிய தொன்றுமில்லை. எல்லா கர்மமும் அநித்யத்திற்கே ஸாதநமாகின்றது. கர்ம்மத்தின் பயன் நால்வகைத்தேயன்றோ ; அதாவது கர்மத்தினால் பிறப்பிக்கப்படும் சில ; கருமத்தினாலடையப்படும் சில ; கர்ம்மத்தினால் ஸம்ஸ்கரிக்கப்படும் சில ; கர்மத்தினால் வேறுபாட்டை யடைவிக்கப்படும் சில, நமக்கு நிச்யமாய் அம்ருதமாய் அபயமாய் கூடஸ்த்தமாய் அசலமாய் த்ருவமாயிருக்கிற பொருளில் விருப்பமிருக்கின்றது; இப்படி யாகாததில் நமக்காசையில்லை. ஆகையால் நித்யஸாதநமாயும் இப்படிப்பட்ட பொருளுக்கு ஸாதநமாகாதது மான கருமத்தினால் நமக்கென்ன ப்ரயோஜநமுண்டு, அநித்யத்தைவிட கருமம் வேறொன்றையும் ஸாதியாது. ஆகையால் வீணையநேகா நர்த்தங்களுக்குக் காரணமாய் ஆயாஸத்திற்கிடமாகிய கருமம் வீணேயாம் ; அநித்யத்தினால் நித்யம் வராதன்றோ ; என்பதாம். இப்படி வைராக்யமடைந்தவன் அபயமானதும் மங்களஸ்வரூபமானதும் அம்ருதம்போன்றதும் நித்யமுமான ஸ்தாநத்தை யடைவதற்கு, சமம், தமம், தயை, இவைகளோடு கூடிய ஆசாரியனையே ஆச்ரயிக்கக் கடவன், இவன் சாஸ்திரபண்டிதனாயினும் ஆசாரியனை யடைந்தே ப்ரம்மஜ்ஞாநத்தைப் பெறவேணு மென்பதற்கு ஆசாரியனையே என்றது. வேதாந்தத்தை யறிந்தவனாயும் ப்ரம்மநிஷ்டனாயு மிருக்கிற ஆசாரியனை அரிக்த பாணியாய் ஸமித்து பலம் முதலிய உபஹாரங்களை யெடுத்துக்கொண்டு, ஆச்ரயிக்கக் கடவன். கேவலப்ரம்ம நிஷ்டனே ஆசாரியனாகிறான். கர்மநிஷ்டன் ப்ரம்மநிஷ்டனாகான். கர்மத்திற்கும் ப்ரம்மஜ்ஞாநத்திற்கும் விரோதமாகையா லென்றறிக. ஆகையால் கேவலப்ரம்ம நிஷ்டனை ஆசாரியனாக வரிக்கக் கடவன். ஆசாரியனருள்பெற்று அவனைத்தான் ப்ரம்மஸ்வரூபத்தை ப்ரச்நம் பண்ணக் கடவன். அப்படிப்பட்ட சிஷ்யனுக்கு ஆசார்யன் தானறிந்த ப்ரம்மவித்யையை உபதேசிக்கக் கடவன். ஆந்தரபாஹ்யேந்திரியங்களை நிக்ரஹித்து பரமவிரக்தனான சிஷ்யனுக்கு தானறிந்த வித்யையினால் அக்ஷரஸத்யபுருஷனை யறிந்தானோ அந்தப்ரம்ம வித்யையை உள்ளபடி யுபதேசிக்கக் கடவன். ரிக்தபாணியென்றால் வெறுங்கையனென்று பொருள். அப்படியாகாதவன், அரிக்தபாணியாகிறான்.

ரா-ஹா.—வைராக்ய முடையவனாய் பரப்ரம்மத்தை யடைவதற்கு வேண்டிய வித்யை என்கிற ஜ்ஞாநத்தைச் கோருகிறவனுக்கு ஆசாரியோபாஸநம் விதிக்கப்படுகிறது. இந்த வாக்யத்தில் ந்யாயத்தினால் லேர்ப்படுகிற அர்த்தத்தை யனுவதித்துக்கொண்டு ஆசாரியனை யாச்ரயிக்கும் க்ரமம் சொல்லப்படுகிறது. ஆசாரியன் வேதாந்த பண்டிதனாயினும் ப்ரம்மநிஷ்டை யில்லாதவனை யடையக் கூடாது. அசித்து சித்து இவ்விரண்டு தத்வங்களிலும் பேதப்பட்ட ப்ரம்மத்தை யடைவதற்கு குருபாஸநம் அவச்யமானது என்று நியமவிதியா லுணர்த்தப்படுகிறது.

பதார்த்வயார்த்தபேதங்கள்.

இரண்டு சுலோகங்களு மொன்றோடொன்று ஸம்பந்தமுடையதா யிருப்பதால் இரண்டுக்கும்சேர்த்து பாஷ்யமெழுதப்பட்டது.

இதி ப்ரதமமுண்டகே த்விதீய: கண்ட:.

இதி ப்ரதமமுண்டகம்॥

http://acharya.org

𑌶𑍍𑌰𑍀𑌃.

## 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃.

௧. 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌯𑌥𑌾𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍𑌪𑌾𑌵𑌕𑌾 𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌃𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇𑌸𑌰𑍂𑌪𑌾𑌃 । 𑌤𑌥𑌾𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌸𑍋𑌮𑍍𑌯𑌭𑌾𑌵𑌾𑌃𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 𑌤𑌤𑍍𑌰𑌚𑍈𑌵𑌾𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿॥

౧. తదేతత్సత్యంయథాసుదీప్తాత్పావకాద్విస్ఫులింగాస్సహస్రశఃప్రభవంతేసరూపాః।
తథాక్షరాద్వివిధాస్సోమ్య భావాఃప్రజాయంతేతత్రచైవాపియంతి॥

(ப-ம்.) 𑌸𑍋𑌮𑍍𑌯 - ஓஸோம்யனே, 𑌤𑌤𑍍-அப்படிப்பட்ட, 𑌏𑌤𑌤𑍍- இந்தப்ரம்மஸ்வரூபமானது, 𑌸𑌤𑍍𑌯𑌮𑍍 - ஸத்யமானது, 𑌯𑌥𑌾 - எப்படி, 𑌸𑍁𑌦𑍀𑌪𑍍𑌤𑌾𑌤𑍍 - ஜ்வலித்துக்கொண்டிருக்கிற, 𑌪𑌾𑌵𑌕𑌾𑌤𑍍 - அக்நியிலிருந்து, 𑌸𑌰𑍂𑌪𑌾𑌃 - ஸத்ருசங்களான, 𑌵𑌿𑌸𑍍𑌫𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌃 - பொறிகள், 𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑌃 - அநேகமாக, 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றனவோ; 𑌤𑌥𑌾 - அப்படியே, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 - அக்ஷரபரப்ரம்மத்திலிருந்து, 𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌃 - அநேகவிதங்களான; 𑌭𑌾𑌵𑌾𑌃 - பதார்த்தங்கள், 𑌪𑍍𑌰𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - உண்டாகின்றன. 𑌤𑌤𑍍𑌰𑌚𑍈𑌵 - அவ்விடத்திலேயே, 𑌅𑌪𑌿𑌯𑌨𑍍𑌤𑌿 - லயம் பெறுகின்றன.

𑌶𑌂-ஹா.—இதுவரையில் அபரவித்யையின் ப்ரகாரம் முற்றும் சொல்லப்பட்டது. இனி இந்த அபரவித்யையின் காரியமான ஸம்ஸாரம் எந்த அக்ஷரப்ரம்மத்தி னின்றும் பிறக்கிறதோ எந்த அக்ஷரபரப்ரம்மத்தி லழிந்து லயிக்கிறதோ யதையறிந்தா லெல்லா மறியப்படுமோ அப்படிப்பட்ட பரவித்யை என்கிற ப்ரம்மவித்யைக்கு விஷயமான ஸத்ய புருஷாக்ஷர ப்ரம்ம ஸ்வரூபத்தை ரூபித்துச் சொல்லுவதற்கு மேல் துடங்கப்படுகிறது. அபரவித்யைக்கு விஷயமான கருமத்தால் வருகிற பலம் ஸத்யமென்று உபசரிக்கப்பட்டாலும் அவித்யைக்கு விஷயமாகையாலே வாஸ்தவத்தில் ஸத்யமல்ல. இந்த அக்ஷரப்ரம்மம் ஸத்தாகையால் வித்யாவிஷயமாய் வாஸ்தவஸத்யமாகிறது. இப்படிப் பட்ட அக்ஷரபரப்ரம்மம் மிகவும் பரோக்ஷமாகையால் கண் முதலிய இந்திரியங்களுக்குத் தெரியாதாகையால் ப்ரத்யக்ஷ வஸ்துவைப்போ லறிவது கஷ்டமென்று இந்த ப்ரம்மத்திற்கு திருஷ்டாந்தம் கூறப்படுகிறது. அக்நியிலிருந்து அக்நி கணங்கள் புறப்படுவதுபோல அக்ஷரபரப்ரம்மத்தி லிருந்து அந்த ப்ரம்ம கணங்களாகிய ஜீவர்கள் புறப்படுகிறார்கள். நெருப்பிலிருந்து கிளம்புகிற பொறிகளும் நெருப்பேயாவதுபோல ப்ரம்மத்திலிருந்து பிறக்கிற ஜீவர்களும் ப்ரம்மமே யாவர்கள். ப்ரம்மம் ஒன்றே யாயினும் ஒரே ஆகாயத்தில் குட முதலிய உபாதிகளினால் அனேக பேதங்களுண்டாகிறாப்போல தேவர் மநுஷ்யர் முதலான தேஹங்களாகிற உபாதிகளினால் அனேக ஜீவர்கள் ஏற்படுகிறார்கள். அந்த ப்ரம்மத்திலேயே குட முதலியவை யுடைந்தபோது மஹாகாசத்துடன் கலந்து லயிக்கிறதுபோல ஜீவர்கள் சரீரமாகிய உபாதி கழிந்தபோது லயிக்கிறார்கள்.

ரா-ஹா.—ஸூக்ஷ்மமாகிய சித்தையும் அசித்தையும் சரீரமாக உடைய ப்ரம்மத்திலிருந்து ஸ்தூலங்களான சித்துக்களும் அசித்துக்களும் உண்டாவதில் திருஷ்டாந்தமாக அக்நியை யெடுத்துக் காட்டுகிறது. மற்றவை முன்போலவே.

௨. 𑌦𑌿𑌵𑍍𑌯𑍋 𑌹𑍍𑌯𑌮𑍂𑌰𑍍𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌸𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑌜𑌃।
𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑍍𑌯𑌮𑌨𑌾𑌃 𑌶𑍁𑌭𑍍𑌰𑍋 𑌹𑍍𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑌃 𑌪𑌰𑌃॥

౨. దివ్యోహ్యమూర్తః పురుషస్సబాహ్యాభ్యన్తరోహ్యజః।
అప్రాణోహ్యమనాశ్శుభ్రోహ్యక్షరాత్పరతః పరః॥

(ப-ம்.) 𑌦𑌿𑌵𑍍𑌯𑌃 - பரமபதவாசியாயும், 𑌅𑌮𑍂𑌰𑍍𑌤𑌃 - கர்மஸம்பந்தத்தாலுண்டான அவயவங்களில்லாதவனாயும், 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 - புருஷசப்தவாச்யனாயும், 𑌸𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌃 - உள்ளும்வெளியும் வ்யாபித்தவனாயும், 𑌅𑌜𑌃 - உத்பத்தியில்லாதவனாயும், 𑌅𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணஸம்பந்தமில்லாதவனாயும், 𑌅𑌮𑌨𑌾𑌃 - மனஸ்ஸில்லாதவனாயும், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌃 - சுத்தனாயுமிருக்கிற, 𑌸𑌃 - அந்த பரமபுருஷன், 𑌅𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍 - அவ்யாக்ருதத்தைக்காட்டிலும், 𑌪𑌰𑌤𑌃 - பரனான ஸமஷ்டிபுருஷனைக்காட்டிலும், 𑌪𑌰𑌃 - பரன்.

இந்தசுலோகத்தில் 'ஹி' மூன்றுக்கும் ப்ரஸித்தியே பொருள்.

𑌶𑌂-𑌭𑌾.—நாமரூபங்களுக்குக் காரணமாய் தன் விகாரங்களில் காட்டில் பரமாயிருக்கிற அவ்யாக்ருத மென்கிற அக்ஷரத்தைக் காட்டில் பரமாய், ஸமஸ்தமான உபாதி பேதங்களும் நீங்கியதாய் ஆகாசம்போலே அமூர்தமாயிருக்கிற அக்ஷரபரப்ரம்ம ஸ்வரூபத்தை பேதசூந்யமென்று சொல்லுவதற்கு தொடங்குகிறது. ப்ரகாச ஸ்வரூபமாய் ஸ்வயம் ஜ்யோதியாய் தனக்குத்தானே காரணமாய் லோகவிலக்ஷணமாய் அவயவசூந்யமாய் பூர்ணமாய் புரிசயனாய் தேஹத்திற்குள்ளும் வெளியும் கலந்திருப்பவனாய் பிறப்பு முதலிய பாவவிகாரங்களில்லாதவனாய், நீர்க்குமிழி முதலியவற்றிற்கு காற்றுப்போலவும், ஆகாய பேதத்திற்கு குட முதலியவைபோலவும் தனக்கு ஜந்ம காரணமில்லாதவனாய், ஜராமரணங்களில்லாதவனாய் க்ஷயமில்லாதவனாய் த்ருவனாய் அபயஸ்வரூபியாய் தேஹமுதலிய உபாதி பேதத்தால் கண்டவர்களுக்கு அவித்யையினால், ஆகாயம் அழுக்கு முதலிய வற்றோடுகூடித் தோற்றுவதுபோல, அனேக தேஹங்களில் ப்ராணன் மனஸ்ஸு இந்திரியம் விஷயம் இவைகளோடு கூடினவனைப்போல் தோற்றினாலும், பரமார்த்தங் கண்டவர்களுக்கு, க்ரியாசக்தி பேதத்தோடு கூடிச் சலிக்கிற ப்ராணவாயு ஸம்பந்தமில்லாதவனாய், ஜ்ஞாநசக்தி பேதத்தோடுகூடி ஸங்கல்பரூபமாயிருக்கும்மனஸ்ஸில்லாதவனாய், இப்படியே அபாநம் முதலிய வாயு ஸம்பதமில்லாதவனாய் கர்மேந்த்ரியம் அதின் விஷயங்கள் புத்தி மநஸ்ஸு, ஜ்ஞாநேந்திரியம் அதின் விஷயங்கள் இவைகளில்லாதவனாய், இப்படியே வேறு சுருதியிலும் சொல்லப்பட்டவனாய், இப்படி உபாதி ஸம்பந்தமில்லாதவனாகையாலே சுத்தனாயிருக்கிற பரமபுருஷன், தன் விகாரங்களுக்குத் தான் காரணமாகையாலே அவைகளுக்குப் பரமாயிருக்கிற அக்ஷரத்தைக் காட்டிலும் பரனாயிருக்கிறான். இவனிடத்திலேயே, ஆகாசமென்கிற வ்யவஹார காரணமான அக்ஷரம் ஒட்டிக்கிடக்கிறது. புருஷன் ப்ரத்யக்ஷத்தில் ப்ராணன் முதலிய வற்றோடு கூடி யிருக்க ப்ராணன் முதலியவையில்லாதவனென்று சொல்லுவதெங்ஙன மெனில் ப்ராணாதிகளுண்டாவதற்கு முன்னமே புருஷனிருக்கிறானாகையால் அப்போது ப்ராணாதி ஸம்பந்தமில்லை யன்றோ; ஒருவனுக்கு, பிள்ளை பிறப்பதற்கு முன் அவனைப் பிள்ளையில்லாதவனென்று சொல்லுகிறார்களன்றோ.

𑌰𑌾-𑌭𑌾.—சுத்தனாகிய பரமபுருஷன் ப்ரக்ருதியில் காட்டில் பரனான ஜீவனைக் காட்டில் பரனென்று பொருள். சங்கரபாஷ்யத்தில் செய்த வ்யாக்யாநம் யுக்தமன்று,

http://acharya.org

த்ருஷ்டாந்தத்திற்குச் சேராமையாலென்று விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. மற்றவை பத உரையில் சொல்லியபடியே கொள்ளப்பட்டு எல்லாவற்றுக்கும் சுருதி ப்ரமாணம் காட்டப்பட்டது.

௩. 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌜𑍍𑌜𑌾𑌯𑌤𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌮𑌨𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 |
𑌖𑌂 𑌵𑌾𑌯𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌾𑌪𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 ||

3. ఏతస్మాజ్జాయతే ప్రాణో మనస్సర్వేంద్రియాణి చ ।
ఖం వాయుర్జ్యోతిరాపః పృథివీ విశ్వస్య ధారిణీ ॥

(ப்ம.) 𑌏𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 - இந்தபுருஷனிடத்திலிருந்து, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணனும், 𑌮𑌨𑌃 - மநஸ்ஸும், 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 𑌚 - எல்லா இந்திரியங்களும், 𑌖𑌂 - ஆகாயமும், 𑌵𑌾𑌯𑍁𑌃 - காற்றும், 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌃 - தேஜஸ்ஸும், 𑌆𑌪𑌃 - ஜலமும், 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 - ஸமஸ்தத்தையும், 𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 - தரிக்கிற, 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 - பூமியும், 𑌜𑌾𑌯𑌤𑍇 - உண்டாகிறது.

𑌶𑌂-𑌸𑌾.—இவைகள் முன்னில்லை யென்பது விளங்க இந்த ப்ராணாதிகளுக்கு ஸ்ருஷ்டி சொல்லப்படுகிறது. அவித்யா விஷயங்களாகையாலே ப்ராணாதிகள் பொய்யாகும். ஸ்வப்நத்தில கண்ட பிள்ளையைக்கொண்டு ஒருவனைப் பிள்ளையுடையவனென்று சொல்வதுபோல இந்த பொய்யான ப்ராணனைக்கொண்டு புருஷனை ப்ராணமுடையவனென்பது சேராது. இப்படியே மற்றுள்ள வற்றிலும் காண்க. பிறப்புக்கு முன்னின்றியே பொய்யாவதுபோல ப்ரளயத்திற்கும் பின்னின்றியும் பொய்யாகின்றன. அவைகளாவன ப்ராணங்களும் பூதங்களு மிந்திரியங்களும்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்தில் பதஉரைக்குமேல்பட விசேஷமில்லை.

௪. 𑌅𑌗𑍍𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌰𑍍𑌧𑌾 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍀 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌦𑌿𑌶𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇 𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌵𑍃
𑌤𑌾𑌶𑍍𑌚 𑌵𑍇𑌦𑌾𑌃 | 𑌵𑌾𑌯𑍁𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑍋 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌸𑍍𑌯 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀
𑌹𑍍𑌯𑍇𑌷 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ||

౪. అగ్నిర్మూర్ధా చక్షుషీ చంద్రసూర్యౌ దిశశ్శ్రోత్రే వాగ్వివృతాశ్చ వేదాః ।
వాయుః ప్రాణో హృదయం విశ్వమస్య పద్భ్యాం పృథివీ హ్యేష సర్వభూతాన్తరాత్మా ॥

(ப்-ம.) 𑌅𑌸𑍍𑌯 - இந்தபுருஷனுக்கு, 𑌮𑍂𑌰𑍍𑌧𑌾 - சிரஸ்ஸானது, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 - ஸ்வர்க்கலோகம், 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍀 - கண்கள், 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 - சந்திரசூரியர்கள், 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑍇 - காதுகள், 𑌦𑌿𑌶𑌃 - திசைகள், 𑌵𑍇𑌦𑌾𑌃 - வேதங்கள், 𑌅𑌸𑍍𑌯𑌵𑌾𑌗𑍍𑌵𑌿𑌵𑍃𑌤𑌾𑌃 - இவனுடைய வாக்கினால் வெளியாக்கப்பட்டவை. 𑌅𑌸𑍍𑌯 - இவனுடைய, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணன், 𑌵𑌾𑌯𑍁𑌃 - காற்று, 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 - ஸமஸ்தமும், 𑌅𑌸𑍍𑌯 - இவனுடைய, 𑌹𑍃𑌦𑌯𑌂 - ஹ்ருதயம், 𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 - கால்கள், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 - பூமியாம், 𑌏𑌷𑌃 - இவன், 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 - எல்லாபூதங்களுக்கு மந்தர்யாமியாயிருக்கிறான்.



http://acharya.org

ஸம்-ஹா.—முன்சொன்ன அக்ஷரபுருஷனையே ஸவிசேஷமாக விஸ்தரித்துச்சொல்லுகிறது. ஸூத்திரபாஷ்யங்களைப்போல, இப்படி கூறுவதினால் ஸுகமாயறிப்படுமென்றே.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமாநுஜபாஷ்யத்தில் விசேஷமில்லை. பதஉரையின் கருத்தேயுளது.

ரு. தஸ்மாத³க்³நி꞉ ஸமிதோ⁴ யஸ்ய ஸூர்ய꞉ ஸோமாத்பர்ஜந்ய ஓஷத⁴ய꞉ ப்ருதி²வ்யாம் । புமாந்ரேத꞉ ஸிஞ்சதி யோஷிதாயாம் ப³ஹ்வீ꞉ ப்ரஜா꞉ புருஷாத்ஸம்ப்ரஸூதா꞉ ॥

౫. తస్మాదగ్నిః సమిధో యస్య సూర్యః సోమాత్పర్జన్య ఓషధయః పృథివ్యామ్ ।
పుమాన్రేతస్సించతి యోషితాయాం బహ్వీః ప్రజాః పురుషాత్సంప్రసూతాః॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, அக்நி꞉ - ஸ்வர்க்கலோகமுண்டாகிறது. யஸ்ய - யந்த ஸ்வர்கலோகமாகிற அக்நிக்கு, ஸூர்ய꞉ - ஸூர்யன், ஸமித꞉ - ஸமித்துக்களோ; ஸோமாத் - அந்தஸ்வர்க்கலோகத்திலுண்டாகிய சந்திரனிடத்திலிருந்து, பர்ஜந்ய꞉ - மேகமுண்டாகிறது, ப்ருதிவ்யாம் - பூமியில், ஓஷதய꞉ - அந்த பர்ஜந்யத்திலிருந்து ஓஷதிகளுண்டாகின்றன, புமாந் - புருஷனானவன், யோஷிதாயாம் - ஸ்த்ரீயினிடத்தில், ரேத꞉ - அந்த ஓஷதிகளாலுண்டாகிய ரேதஸ்ஸை, ஸிஞ்சதி - விடுகிறான், புருஷாத்-புருஷனிடத்தில், பஹ்வீ꞉-அனேகமான, ப்ரஜா꞉-ப்ரஜைகள், ஸம்ப்ரஸூதா꞉ - அந்த ரேதஸ்ஸம்பந்தத்தாலுண்டாகின்றன.

ஸம்-ஹா. ரா-ஹா. பஞ்சாக்நிவித்யையில் சொன்னப்ரகாரம் ஸமஸ்த ஜகத்தும் அந்த புருஷனிடத்திலிருந்து பிறக்கிறது.

சு. தஸ்மாத்³ருச꞉ ஸாம யஜூம்ஷி தீ³க்ஷா யஜ்ஞாஶ்ச ஸர்வே க்ரதவோ த³க்ஷிணாஶ்ச । ஸம்வத்ஸரஶ்ச யஜமாநஶ்ச லோகா꞉ ஸோமோ யத்ர பவதே யத்ர ஸூர்ய꞉ ॥

౬. తస్మాదృచస్సామ యజూంషి దీక్షా యజ్ఞాశ్చ సర్వే క్రతవో దక్షిణాశ్చ ।
సంవత్సరశ్చ యజమానశ్చ లోకాస్సోమో యత్ర పవతే యత్ర సూర్యః॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, ருச꞉ - ருக்குக்களும், ஸாம - ஸாமங்களும், யஜூம்ஷி - யஜுஸ்ஸுக்களும், தீக்ஷா꞉, தீக்ஷைகளும், ஸர்வே யஜ்ஞா꞉ - எல்லாயஜ்ஞங்களும், க்ரதவ꞉-யாகங்களும்-தக்ஷிணா꞉ச - தக்ஷிணைகளும், ஸம்வத்ஸரஶ்ச - ஸம்வத்ஸரரூப காலமும், யஜமாந꞉ச - கர்தாவும், யத்ர - எந்தலோகங்களில், ஸோம꞉ - சந்திரன், பவதே - பரிசுத்தம் பண்ணுகிறானோ; யத்ர - எந்தலோகங்களில், ஸூர்ய꞉ - ஸூரியன், பவதே - பரிசுத்தம் செய்கிறானோ; லோகா꞉ - அந்த லோகங்களு முண்டாகின்றன.

எ. தஸ்மாச்ச தே³வா ப³ஹுதா⁴ ஸம்ப்ரஸூதா꞉ ஸாத்⁴யா மநுஷ்யா꞉ பஶவோ வயாம்ஸி । ப்ராணாபாநௌ வ்ரீஹியவௌ தபஶ்ச ஶ்ரத்³தா⁴ ஸத்யம் ப்³ரஹ்மசர்யம் விதி⁴ஶ்ச ॥

http://acharya.org

౭. తస్మాచ్చ దేవా బహుధా సంప్రసూతాః సాధ్యా మనుష్యాః పశవో వయాంసి।
ప్రాణాపానౌ వ్రీహియవౌ తపశ్చ శ్రద్ధా సత్యం బ్రహ్మచర్యం విధిశ్చ॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த பரமபுருஷனிடத்திலிருந்து, பஹுதா - அனேகப்ரகாரமாக, தேவா: - தேவர்களும், ஸாத்யா: - ஸாத்தியர்களும், மநுஷ்யா: - மநுஷ்யர்களும், பசவ: - பசுக்களும், வயாம்ஸி - பக்ஷிகளும், ப்ராணாபாநௌ - ப்ராணன் அபாநன்முதலியவாயுக்களும், வ்ரீஹியவௌ - தாந்யவிசேஷங்களும், தப: ச - தபஸ்ஸும், ச்ரத்தா - ஆஸ்திக்யபுத்தியும், ஸத்யம் - பொய்சொல்லாமையும், ப்ரஹ்மசர்யம் - மைதுநஞ்செய்யாமையும், விதி: ச - விதியும், ஸம்ப்ரஸூதா: - உண்டாயின.

அ. ஸப்த ப்ராணா: ப்ரபவந்தி தஸ்மாத் ஸப்தார்ச்சிஷ: ஸமித: ஸப்த ஹோமா: । ஸப்த இமே லோகா யேஷு சரந்தி ப்ராணா குஹாசயா நிஹிதா: ஸப்த ஸப்த ॥

౮. సప్త ప్రాణాః ప్రభవన్తి తస్మాత్ సప్తార్చిషః సమిధస్సప్త హోమాః।
సప్త ఇమే లోకా యేషు చరన్తి ప్రాణా గుహాశయా నిహితాస్సప్త సప్త॥

(ப-ம்.) தஸ்மாத் - அந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந்து, ஸப்த - ஏழுவிதமான, ப்ராணா: - இந்திரியங்களும், ஸப்தார்ச்சிஷ: - ஏழக்நிகளும், ஸமித: - ஸமித்துக்களும், ஸப்த ஹோமா: - ஏழுஹோமங்களும், இமே ஸப்த லோகா: - இந்தஏழுலோகங்களும், ப்ரபவந்தி - உண்டாகின்றன. யேஷு - எந்தலோகங்களில், குஹாசயா: - குஹைகளிலிருக்கிற, ப்ராணா: - ப்ராணங்கள், ஸப்த ஸப்த - ஏழேழாய், நிஹிதா: - வைக்கப்பட்டவைகளாய், சரந்தி - ஸஞ்சரிக்கின்றனவோ;

### பதாந்வயார்த்தபேதங்கள்.

ஏழுப்ராணங்களாவன - ஏழிந்திரியங்கள், ஏழிடங்களி லிருக்கின்றமையால் இந்திரியங்களை ஏழென்கிறது. கண்களிரண்டு காதுகளிரண்டு மூக்கிரண்டு வாய் இந்தஏழுஸ்தாநங்களிலும் இந்திரியம் ஸஞ்சரிக்கின்றது. இவைகளுக்கு சீர்ஷண்யங்களென்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்திரியபரமாகவே எல்லாபதங்களையு மந்வயித்து வ்யாக்யாநம் செய்யப்பட்டது சங்கரபாஷ்யத்தில். இராமாநுஜபாஷ்யத்தில் நடுவிலிரண்டுவாக்யம் அக்நிபரமாக வ்யாக்யானம் செய்யப்பட்டது. மேலும் 'ஸப்தஹோமா:' என்கிறவிடத்தில் 'ஸப்தஜிஹ்வா:' என்று பாடம் காட்டப்பட்டது, மற்றவைகளில் விசேஷமில்லை.

கூ. அத: ஸமுத்ரா கிரயச்ச ஸர்வே அஸ்மாத் ஸ்யந்தந்தே ஸிந்தவ: ஸர்வரூபா: । அதச்ச ஸர்வா ஓஷதயோ ரஸச்ச யேநைஷ பூதைஸ் திஷ்டதே ஹ்யந்தராத்மா ॥

౯. అతస్సముద్రాగిరయశ్చ సర్వే అస్మాత్స్యందంతే సింధవస్సర్వరూపాః।
అతశ్చ సర్వా ఓషధయో రసాశ్చ యేనైష భూతైస్తిష్ఠతే హ్యంతరాత్మా॥

http://acharya.org

(ப்-ம்.) அத: - இந்தபுருஷனிடத்திலிருந்து, ஸர்வே - ஸமஸ்தவிதங்களான, ஸமுத்ரா: - கடல்களும், கிரயஶ்ச - மலைகளு முண்டாகின்றன. ஸர்வரூபா: - ஸமஸ்தரூபங்களான, ஸிந்தவ: - நதிகளும், அஸ்மாத் - இந்த புருஷனிடத்திலிருந்து, ஸ்யந்தந்தே - ப்ரவஹிக்கின்றன. ஸர்வா: - ஓஷதய: - எல்லாஓஷதிகளும், ரஸாஶ்ச - ரஸங்களும், அத ஏவ - இந்த அக்ஷரபுருஷனிடத்திலிருந் துண்டாகின்றன, யேந - எந்த காரணத்தால், ஏஷ: - இந்த அக்ஷரபுருஷன், பூதை: - பூதங்களினால் சூழப்பட்டவனாய், அந்தராத்மா - அந்தர்யாமியாய்க்கொண்டு, திஷ்டதே ஹி - இருக்கிறானோ.

ஸ0-ஹா. யாதொருரஸத்தினலே ஸ்தூலபூதங்களினல் அந்தராத்மா, என்கிற லிங்கசரீரம் சூழப்பட்டிருக்கிறதோ அந்தரஸமும் மற்றுமெல்லாம் அந்தபுருஷனிடத்தி லுண்டானவையேயாம்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

யேந, என்பதற்கும், அந்தராத்மா என்பதற்கும் வேறுபொருள் கொண்டபடியால் சங்கரபாஷ்யத்தில் கருத்து பேதப்பட்டது. இராமாநுஜபாஷ்யத்தில் பதஉரையின்படியே கருத்து கொள்ளப்பட்டது.

க0. புருஷ ஏவேதம் விஶ்வம் கர்ம தபோ ப்ரஹ்ம பராம்ருதம் | ஏதத்யோ வேத நிஹிதம் குஹாயாம் ஸோऽவித்யாக்ரந்திம் விகிரதீஹ ஸோம்ய ||

౧౦. పురుష ఏవేదం విశ్వం కర్మ తపో బ్రహ్మ పరామృతమ్ ।
ఏతద్యో వేద నిహితం గుహాయాం సోऽవిద్యాగ్రన్థిం వికిరతీహ సోమ్య ॥

(ப்-ம்.) இதம் விஶ்வம் - இந்தஸமஸ்தமமும், புருஷ ஏவ - அக்ஷரபுருஷனே; கர்ம - இவனுடைய ஸ்ருஷ்டிவ்யாபாரமானது, தப: - ஸங்கல்பரூபமேயாகின்றது. ப்ரஹ்ம பராம்ருதம் - இந்தபுருஷன், ப்ரம்மமென்கிற முக்தபுருஷர்களுக்கு ச்லாக்யமான வம்ருதம்போல் போக்யபூத னுகிறான், ய: - யவன், ஏதத் - இப்படிப்பட்ட அக்ஷரபுருஷனுகிய பரப்ரம்மத்தை, குஹாயாம் - ஹ்ருதயகுஹையில், நிஹிதம் - வாஸம்செய்வதாக, வேத - அறிகிறானே; ஸ: - அவன், ஸோம்ய - ஸோம்யனே, அவித்யாக்ரந்திம் - முடிபோலிருக்கிற அவித்யையை, விகிரதி - போக்குகிறான்.

ஸ0-ஹா. இவ்வாறு புருஷனிடத்திலிருந்து எல்லாம் தோற்றினதாகையால் வ்யவாஹாரத்துக்குரியதேயன்றி ஸத்யமல்ல பொய்யேயாம் புருஷனே ஸ்த்யஸ்வரூபமுடையவன். ஆகையால் இவையெல்லாம் புருஷனே. இந்தபுருஷனுக்கு வேருய் உலகமென்ருென்றில்லே. இப்படி யறியவே எல்லாமறியப்பட்டதாகும். அக்நிஹோத்ர முதலிய கர்மமும்ஜ்ஞாநமும் வேறுபலத்தைத்தரும். எவன் ப்ரம்மமேநானென்றறிகிருனே அவன் அவித்யைநீங்கி மோக்ஷம்பெறுவான்.

ரா-ஹா.. இப்படி இவ்வுலகெல்லாம் புருஷனிடத்தி லுண்டாகிய தாகையாலே புருஷனே எனப்படுகிறது. காரணத்தையறிந்தபோது காரியமெல்லா மறியப்படுமாகை

http://acharya.org

யால் இந்தபுருஷனை யறியவே இந்தபுருஷனிடத்தி லுண்டான உலகமெல்லா மறியப் படுமென்று கருத்து.

பதாந்வயார்த்தபேதங்கள்.

இராமானுஜபாஷ்யத்தில் புருஷஏவேதம் விச்வம்,என்கிறவரையில் கருத்தெழுதப்பட்டது மற்றது பதஉரையில் கூறியபடி காண்க.

இதி த்விதீயமுண்டகே ப்ரதம꞉ கண்ட꞉.

---

அத த்விதீயமுண்டகே த்விதீய꞉ கண்ட꞉.

---

௧. ஆவி꞉ ஸந்நிஹிதம் குஹாசரம் நாம மஹத்பதமத்ரைதத் ஸமர்பிதம் । ஏஜத்ப்ராணந் நிமிஷச்ச யதேதஜ்ஜாநத² ஸதஸத்வரேண்யம் பரம் விஜ்ஞாநாத்யத்³வரிஷ்ட²ம் ப்ரஜாநாம் ॥

౧. ఆవిస్సన్నిహితంగుహాచరంనామమహత్పదమత్రైతత్సమర్పితమ్।
ఏజత్ప్రాణంనిమిషచ్చయదేతజ్జానథసదసద్వరేణ్యంపరంవిజ్ఞానాద్యద్వరిష్ఠంప్రజానామ్॥

(ப-ம்.) ஆவி꞉ - யோகிகளுக்கு ப்ரகாசமாய்விளங்குவதும், குஹாசரம் - ஹ்ருதயகுஹையி லிருக்கின்றதும், ஸந்நிஹிதம் - கிட்டிநிற்பதும், நாம - அறியப்படாதென்று ப்ரஸித்தமானதும், மஹத்பதம் - சிறந்தப்ராப்யமும் பலமுமானது அந்த அக்ஷரபரப்ரம்மமே. அத்ர - இந்த அக்ஷரபரப்ரம்மத்தினிடத்தில், ஏஜத் - உணர்த்தியுடையதும், நிமிஷத் - உறங்குவதுமான, ப்ராணத் - ப்ராணிஸமூஹமானது; யச்ச - யாதொன்றுண்டு, ஏதத் - இதானது, ஸமர்பிதம் - வைக்கப்பட்டிருக்கிறது, ப்ரஜாநாம் - ஜநங்களுக்கு, வரிஷ்டம் - உபாயமாகையாலும் பலமாகையாலும் மிகவும் விரும்பத்தக்கதாயும், விஜ்ஞாநாத் - ஜீவனைக்காட்டிலும், பரம் - வேறுபட்டதாயும், ஸதஸத்வரேண்யம் - ஸ்தூலஸூக்ஷ்மங்களுக்கு ஆதாரமானதும், யத் - யாதொன்றோ; ஏதத் - இந்த அக்ஷரபரப்ரம்மத்தை, ஜாநத - அறிந்துகொள்ளுங்கோள்.

ஸம்-ஹா. அரூபமாகிய அக்ஷரபரப்ரம்மம் எவ்வாறறியப்படுமென்கிற ஸந்தேஹம் தீரச்சொல்லுகிறது. ஸமஸ்தப்ராணிகளுக்கும் ச்ரவணம் மநநம் முதலிய உபாதிதருமங்களால் ஹ்ருதயத்தில் விளங்கும். ஆகையால் குஹையிலிருப்பதென்று சொல்லப்படுகிறது. எல்லாவற்றிலும் பெரிதானது. எல்லாவற்றாலு மடையப்படுகிறது. பசு பக்ஷி மநுஷ்யர்முதலியவை எல்லாம் இங்குதங்கி நிலைபெறுகிறது, ஸ்தூலசூக்ஷ்மஸ்வரூப மாகியது.நித்யாம்ருதஸ்வரூபமாகையா லனைவராலு மாதரிக்கத்தக்கது. லௌகிகஜ்ஞாநத்தாலறியப்படாதது. எல்லாவற்றிலும் சிறந்தது. இப்படிப்பட்ட ப்ரம்மத்தை சிஷ்யர்களே தெரிந்துகொள்ளுங்கோள்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையின்படியே இராமாநுஜபாஷ்யத்தின் கருத்து.

http://acharya.org

உ. 𑌯𑌦𑌰𑍍𑌚𑌿𑌮𑌦𑍍𑌯𑌦𑌣𑍁𑌭𑍍𑌯𑍋𑌽𑌣𑍁 𑌚 𑌯𑌸𑍍𑌮𑌿𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾 𑌲𑍋𑌕𑌿𑌨
𑌶𑍍𑌚 | 𑌤𑌦𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸 𑌪𑍍𑌰𑌾𑌣𑌸𑍍𑌤𑌦𑍁 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃 | 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑌮𑍃𑌤𑌂 𑌤𑌦𑍍𑌵𑍇
𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥

౨. యదర్చిమద్యదణుభ్యోణుచ యస్మిఁల్లోకానిహితాలోకినశ్చ ।
తదేతదక్షరంబ్రహ్మసప్రాణస్తదువాఙ్మనః । తదేతత్సత్యంతదమృతంతద్వేద్ధవ్యంసోమ్యవిద్ధి॥

(ப்ர-ம்.) 𑌸𑍋𑌮𑍍𑌯 - தெளிவுள்ளசிஷ்யனே, 𑌯𑌤𑍍 - எந்த அக்ஷரபரப்ரம்மமானது, 𑌅𑌰𑍍𑌚𑌿𑌮𑌤𑍍 - காந்தியுடையதோ, 𑌅𑌣𑍁𑌭𑍍𑌯𑌃 - அணுவஸ்துக்களிலும், 𑌅𑌣𑍁 - சிறியதோ; 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யந்தப்ரம்மத்தில், 𑌲𑍋𑌕𑌾𑌃 - உலகங்களும், 𑌲𑍋𑌕𑌿𑌨𑌶𑍍𑌚 - உலகத்தோரும், 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 - வைக்கப்பட்டிருக்கிறார்களோ, 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - அப்படிப்பட்ட இந்த அக்ஷரபரப்ரம்மமானது, 𑌸𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - அப்படிப்பட்ட ப்ராணன், 𑌤𑌦𑍁 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃 - அப்படிப்பட்ட வாகிந்திரியமும் மநஸ்ஸும், 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 - அப்படிப்பட்ட ஸத்யம், 𑌤𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 - அது ஆலோசித்தறியத்தக்கது. ஆகையால், அதைநீ, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - நன்கறிந்துகொள்.

ஸ0-ஹா, சூரியசந்திராதிகளும் எந்த காந்தியால் விளங்குகிறார்களோ அப்படிப்பட்ட காந்தியுடையதுஎதுவோ, எது எல்லாவற்றிலும் சிறியதோ எது எல்லாவற்றிலும் பெரிதோ; எந்தப்ரம்மத்தில் பூமிமுதலியலோகங்களும் அவ்வோலோகங்களிலுள்ள ஜநங்களும் இருக்கின்றனவோ பிராணன் மநஸ்ஸு வாக்கு முதலிய எல்லாவற்றுக்கு மதிஷ்டாநமாய் யாதொன்று விளங்காநின்றதோ; அதுவே ஸத்யமான அக்ஷரபரப்ரம்மம். ஆகையாலதை நன்குமநஸ்ஸினால் த்யாநித்துத் தெரிந்துகொள்ளவேணும்.

ரா-ஹா. அப்ராக்ருதமாய் ஜ்யோதிர்மயமான திருமேனி யுடையதாகையாலே காந்தியுடையதென்கிறது. எல்லாவற்றிலு முள்புகுகிற சக்தியுடையதானதால் அணுவிலுமணுவென்று சொல்லப்பட்டது.

௩. 𑌧𑌨𑍁𑌰𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑍌𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌰𑌂 𑌹𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌶𑌿
𑌤𑌂 𑌸𑌂𑌧𑌯𑍀𑌤 | 𑌆𑌯𑌮𑍍𑌯 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌗𑌤𑍇𑌨 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂
𑌸𑍋𑌮𑍍𑌯 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 ॥

3. ధనుర్గృహీత్వౌపనిషదంమహాస్త్రంశరంహ్యుపాసానిశితంసంధయీత ।
ఆయమ్యతద్భావగతేనచేతసాలక్ష్యంతదేవాక్షరంసోమ్యవిద్ధి॥

(ப்-ம்) 𑌸𑍋𑌮𑍍𑌯 - நற்குணமுடையவனே, 𑌔𑌪𑌨𑌿𑌷𑌦𑌂 - உபநிஷத்தில்சொல்லப்பட்ட, 𑌧𑌨𑍁𑌃 - வில்லை, 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 - எடுத்துக்கொண்டு 𑌉𑌪𑌾𑌸𑌾𑌨𑌿𑌶𑌿𑌤𑌂 - உபாஸநத்தினால் கூர்மையடைந்திருக்கிற, 𑌮𑌹𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 - மஹாஸ்திரத்தோடுகூடிய, 𑌶𑌰𑌂 - பாணத்தை, 𑌸𑌂𑌧𑌯𑍀𑌤 - ஸந்தாநம்பண்ணக்கடவன். 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌗𑌤𑍇𑌨 - அந்தப்ரம்மபாவனையோடுகூடிய, 𑌚𑍇𑌤𑌸𑌾 - மனஸ்ஸினால், 𑌆𑌯𑌮𑍍𑌯 - ஆகர்ஷித்து, 𑌤𑌦𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 - அந்த அக்ஷரப்ரம்மமாகிற லக்ஷ்யத்தையே, 𑌵𑌿𑌦𑍍𑌧𑌿 - அறிந்துகொள்.

http://acharya.org

𑌸𑌂-𑌹𑌾. 𑌰𑌾-𑌹𑌾. ப்ரணவமேதநுஸ்ஸென்பது முதலாய விசேஷங்கள் மேல் மந்திரத்தில் விளங்கும். இதரவிஷயங்களில் நெஞ்சை செல்லவொட்டாமல் தடுத்து பரப்ரம்மத்தினிடத்தில் நிலைபெறச்செய்து ப்ரம்மத்தை யறிந்துகொள்ளென்றுகருத்து.

௪. 𑌪𑍍𑌰𑌣𑌵𑍋 𑌧𑌨𑍁𑌃 𑌶𑌰𑍋 𑌹𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 𑌶𑌰𑌵𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑌯𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

౪. ప్రణవోధనుశ్శరోహ్యాత్మాబ్రహ్మతల్లక్ష్యముచ్యతే।
అప్రమత్తేనవేద్ధవ్యంశరవత్తన్మయోభవేత్॥

(ப்-ம்.) 𑌪𑍍𑌰𑌣𑌵𑌃 - ப்ரணவமானது, 𑌧𑌨𑍁𑌃 - தநுஸ்ஸு, 𑌶𑌰𑌃 𑌹𑌿 - பாணமோவென்றால், 𑌆𑌤𑍍𑌮𑌾 - ஜீவாத்மா, 𑌤𑌤𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - அந்தப்ரம்மமானது 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌂 - லக்ஷ்யமாக, 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது. 𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍇𑌨 - அநவதாநமில்லாதவனாலே, 𑌵𑍇𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂 - வேதிக்கத்தக்கது, 𑌶𑌰𑌵𑌤𑍍 - பாணம்போல, 𑌤𑌨𑍍𑌮𑌯𑌃 - அந்தலக்ஷ்யஸ்வரூபமாக, 𑌭𑌵𑍇𑌤𑍍 - ஆகக்கடவன்.

𑌸𑌂-𑌹𑌾. 𑌰𑌾-𑌹𑌾. ஆத்மாவை ப்ரணவத்தினால் ப்ரம்மத்தில் சேர்க்கக்கடவன். ப்ரணவார்த்தத்தை யறியக்கடவன்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஜீவப்ரம்மங்களுக்கு பேதமில்லையென்பது சங்கரமதத்தில் ப்ரணவார்த்தம். ப்ரம்மத்திற்கு ஜீவன் சேஷபூதனென்பது ராமாநுஜமதத்தில் ப்ரணவார்த்தம்.

௫. 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌮𑍋𑌤𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌹 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 । 𑌤𑌮𑍇𑌵𑍈𑌕𑌂 𑌜𑌾𑌨𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑍋 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥𑌾𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃 ॥

౫. యస్మిన్ద్యౌఃపృథివీచాంతరిక్షమోతంమనస్సహప్రాణైశ్చసర్వైః।
తమేవైకంజానథఆత్మానమన్యావాచోవిముఞ్చథామృతస్యైషసేతుః॥

(ப்-ம்.) 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - எந்த அக்ஷரபுருஷனிடத்தில், 𑌦𑍍𑌯𑍌𑌃 - ஸ்வர்க்கலோகமும், 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚 - பூலோகமும், 𑌅𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 - அந்தரிக்ஷலோகமும், 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 - ஸமஸ்தமான, 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 𑌸𑌹 - ப்ராணங்களோடு, 𑌮𑌨𑌃 - மநஸ்ஸும், 𑌓𑌤𑌂 - கோர்க்கப்பட்டிருக்கிறதோ, 𑌤𑌮𑍇𑌵 𑌏𑌕𑌂 - அந்தபரமபுருஷனையே, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - அந்தராத்மாவாக, 𑌜𑌾𑌨𑌥 - அறியுங்கோள், 𑌅𑌨𑍍𑌯𑌾𑌃 - இதரங்களான, 𑌵𑌾𑌚𑌃 - வார்த்தைகளை, 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥 - விடுங்கோள், 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 - மோக்ஷத்திற்கு, 𑌏𑌷𑌃 - இந்த பரமபுருஷன், 𑌸𑍇𑌤𑍁𑌃 - அணையாகிறான்.

𑌸𑌂-𑌹𑌾. இந்த அக்ஷரபரப்ரம்ம ஸ்வரூபத்தை விசதமாக்குவதற்கு அடிக்கடி சொல்லுகிறது.

𑌰𑌾-𑌹𑌾. மோக்ஷமானது ஸம்ஸாரஸாகரத்திற்கு அக்கரையாகையால் அதற்குக் காரணமாகிய பகவானை ஸேதுவென்கிறது. ஸேதுவானது இக்கரையோரை அக்கரை

http://acharya.org

சேர்ப்பதன்றோ; ஆனகயால் மோக்ஷப்ரதனான அவனையே உபாஸியுங்கோள் இதரவிஷயங்களை விடுங்கோள். அவனே ஸர்வாதாரபூதன்.

௬. 𑌅𑌰𑌾 𑌇𑌵 𑌰𑌥𑌨𑌾𑌭𑍌 𑌸𑌂𑌹𑌤𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 𑌸 𑌏𑌷𑍋𑌽𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌰
𑌤𑍇 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 । 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌯𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 𑌵𑌃 𑌪𑌾𑌰𑌾𑌯 𑌤
𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 ॥

౬. అరాఇవరథనాభౌసంహతాయత్రనాడ్యస్సఏషో ऽన్తశ్చరతేబహుధాజాయమానః।
ఓమిత్యేవంధ్యాయథాత్మానంస్వస్తివఃపారాయతమసఃపరస్తాత్॥

(ப-ம்.) 𑌯𑌤𑍍𑌰 - எந்தஹ்ருதயத்தில், 𑌰𑌥𑌨𑌾𑌭𑍌 - ரதநாபியில், 𑌅𑌰𑌾𑌃 𑌇𑌵 - அரங்கள்போல, 𑌨𑌾𑌡𑍍𑌯𑌃 - நாடிகள், 𑌸𑌂𑌹𑌤𑌾𑌃 - சேர்ந்திருக்கின்றனவோ; 𑌅𑌨𑍍𑌤𑌃 - அந்தஹ்ருதயத்தில், 𑌸𑌃 𑌏𑌷𑌃 - அந்த அக்ஷர புருஷன், 𑌬𑌹𑍁𑌧𑌾 - அநேகப்ரகாரமாக, 𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌃 - உண்டாகிறவனாய், 𑌚𑌰𑌤𑍇 - ஸஞ்சரிக்கிறான். 𑌤𑌮𑌸𑌃 - மூலப்ரக்ருதிக்கு, 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 - அப்புறத்தானாகிய 𑌵𑌃 - உங்களுக்கு, 𑌪𑌾𑌰𑌾𑌯 - ப்ராப்யனாயிருக்கிற அவனை யடைவதற்கு, 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 - ஆத்மாவாகிய அவனை; 𑌓𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌏𑌵𑌮𑍍 - ப்ரணவார்த்தங்கொண்டு, 𑌧𑍍𑌯𑌾𑌯𑌥 - த்யாநம்பண்ணுங்கோள். 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿 - அப்படித்யாநம் செய்கிற உங்களுக்கு மங்களமுண்டாகக்கடவது.

௬௦-ஸா. நாடீஸ்தாநமாகிய ஹ்ருதயத்தில் ஸாக்ஷிபூதனாய்க்கொண்டு ஸுகம் துக்கம் முதலிய வற்றோடுகூடி ஜ்ஞாதாவாய் அநேகப்ரகாரமாய் உண்டாகிறான். அந்த ஆத்மாவை ப்ரணவத்தைக்கொண்டு சொல்லியபடி த்யாநியுங்கோள். இப்படிதத்வஜ்ஞாநியான ஆசாரியன் சிஷ்யனுக்கு உபதேசிக்கவேண்டிய விஷயத்தை யுபதேசிக்க, சிஷ்யனும் விரக்தனாய் ப்ரம்மவித்யையில் விருப்பமுடையவனாய் மோக்ஷமார்க்கத்திலிழிய அப்படி இழிந்த சிஷ்யனுக்கு விக்நமின்றி ப்ரம்மப்ராப்தி யுண்டாம்படி அநுக்கிரகம்செய்கிறார். அவித்யைக்கடந்து ப்ரம்மஸ்வரூபத்தைப் பெறுவதற்கு விக்நங்கள் சமிக்கவேணுமென்று ஆசாரியர் ஆசீர்வாதம் செய்கிறார்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

பதஉரையின்படி கருத்து இராமாநுஜபாஷ்யத்தில் கூறப்பட்டது.

௭. 𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌭𑍁𑌵𑌿 ।
𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ॥

౭. యస్సర్వజ్ఞస్సర్వవిద్యస్యైషమహిమాభువి ।
దివ్యేబ్రహ్మపురేహ్యేషవ్యోమన్యాత్మాప్రతిష్ఠితః॥

(ப-ம்.) 𑌯𑌃 - எந்த அக்ஷரபுருஷன், 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃 - எல்லாமறிந்தவனோ; 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 - எல்லாமடைந்தவனோ; 𑌭𑍁𑌵𑌿 - இவ்வுலகத்தில், 𑌏𑌷 𑌮𑌹𑌿𑌮𑌾- இந்தமாஹாத்ம்யமானது, 𑌯𑌸𑍍𑌯 - யவனுடையதோ, 𑌏𑌷𑌃 - இந்த ஆத்மாவான பரமபுருஷன், 𑌦𑌿𑌵𑍍𑌯𑍇 𑌵𑍍𑌯𑍋𑌮𑍍𑌨𑌿 - பரமாகாசத்தில், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍁𑌰𑍇- வைகுண்டநகரத்தில், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 - 𑌹𑌿 - இருப்பவனன்றோ;

http://acharya.org

ஸ0-ஸா. அவித்யைக்குப் பரனாயிருக்கும் பரவித்யாவேத்யனான பரமபுருஷனிருக்குமிடங் கூறுகின்றது. இந்தபரமபுருஷன் ஸர்வஜ்ஞனென்றும் எல்லாமடைந்தவனென்றும் சொல்லப்பட்டது. இன்னமும் அவனுக்கு மஹிமைசொல்லுகிறது. ஸமஸ்த லோகங்களும் இவனுடைய ஆஜ்ஞையிலிருக்கின்றன. சூர்யசந்திரர்கள் இவனுக்கு பயந்து சுழலுகிறார்கள். இவனுடைய ஸங்கல்பத்தால் நதிகளும் ஸமுத்திரங்களும் தங்கள் நிலைமாறாமலிருக்கின்றன. ஸகலஸ்தாவரஜங்கமங்களு மவனிட்டவழக்காயிருக்கின்றன ருதுக்களு மயனங்களும் வருஷங்களும் அவன்கட்டளையைத் தாண்டுகிறதில்லை. அவனிட்ட கட்டளையா லவரவர் ஒவ்வொருவ்யாபாரத்தாலு மவ்வோவ்யாபாரங்களின் பலனைப்பெறுகிறார்கள். இப்படிப்பட்டமாஹாத்ம்யமுடைய பரமபுருஷன், விளங்காநின்ற ஹ்ருதயமத்யத்திலிருக்கிறவனைப்போல் காணப்படுகிறான்.

ஸா-ஸா. மஹாமஹிமையுடைய பரமபுருஷன் பரமபதத்தில் வஸிக்கிறான். அவன் ஸர்வஜ்ஞன் அவாப்தஸமஸ்தகாமன்.

அ. மநோமய: ப்ராணஶரீரநேதா ப்ரதிஷ்டிதோऽந்நே ஹ்ருதயம் ஸந்நிதாய | தத்விஜ்ஞாநேந பரிபஶ்யந்தி தீரா ஆநந்தரூபமம்ருதம் யத்விபாதி ||

౮. మనోమయః ప్రాణశరీరనేతా ప్రతిష్ఠితోఽన్నే హృదయం సన్నిధాయ ।
తద్విజ్ఞానేన పరిపశ్యన్తి ధీరా ఆనన్దరూపమమృతం యద్విభాతి॥

(ப-ம்.) மநோமய: - நெஞ்சினால் காணத்தக்கவனும், ப்ராணஶரீரநேதா - ப்ராணனையும் சரீரத்தையும் அவைகளின் வ்யாபாரத்தில் நடத்துகிறவனுமான பரமாத்மா, அந்நே - சரீரத்தில் ப்ரதிஷ்டித: - இருக்கிறார். ஹ்ருதயம் - நெஞ்சை, ஸந்நிதாய - அவரிடத்தில் சேர்த்து, யத் - யந்தப்ரம்மஸ்வரூபமானது, ஆநந்தரூபம் - ஆநந்தரூபமாயும், அம்ருதம் - அம்ருதஸ்வரூபமாயும், விபாதி - விளங்குகிறதோ, தத் - அந்த ப்ரம்மஸ்வரூபத்தை, விஜ்ஞாநேந - உபாஸநத்தினால், தீரா: - பண்டிதர்கள், பரிபஶ்யந்தி - காண்கிறார்கள்.

ஸ0-ஸா.—மநஸ்ஸின் வ்ருத்திகளினா லறியத்தக்கவனாய் ப்ராண சரீரங்களுக்கு நேதாவா யிருக்கிறவன் உண்ணும் சோற்றின் பரிணமமாகிய ஸ்தூல சரீரத்திலும் ஸூக்ஷ்மமாயிருக்கிற சரீரத்தில் வர்த்திக்கிறான். ஹ்ருதய புண்டரீகத்தில் புத்தியை செலுத்தி உபதேசஜ்ஞானத்தா லாத்மதத்வத்தை யறிந்து ஆநந்தாம்ருத ஸ்வரூபமான அந்த ப்ரம்மத்தை யுபாஸிக்கிறார்கள்.

ஸா-ஸா.—பரிசுத்தமான நெஞ்சினால் பரமாத்மா காணத்தக்கவன். ஜீவனுக்கு ப்ராண சரீரங்களைக் கொடுப்பவன். ப்ராணனை சரீரமாக உடைய ப்ரபு. சரீரத்தில் எவனிருக்கிறானோ அவனிடத்தில் நெஞ்சை செலுத்தி ஆநந்தாம்ருத ஸ்வரூபமான ப்ரம்மத்தை யறிந்து உபாஸநம் செய்கிறார்கள்.

கூ. பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்சித்யந்தே ஸர்வஸம்ஶயா: |
க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ||

౯. భిద్యతే హృదయగ్రన్థిశ్ఛిద్యన్తే సర్వసంశయాః।
క్షీయన్తే చాస్య కర్మాణి తస్మిన్ దృష్టే పరావరే॥



http://acharya.org

(ப்-ம்.) பராவரே - உலகத்திற்கு பெரியோராகிய இந்திரன் முதலி னோரைத் தன்னில் தாழ்ந்தாராக வுடையனாயிருக்கிற, தஸ்மிந் - அந்த பரம புருஷன், த்ருஷ்டே - உபாஸநத்தால் காணப்படுவானாயின், ஹ்ருதயக்ரந்தி: - நெஞ்சிலிருக்கிற அவித்யாதிதோஷங்கள், பித்யதே - நசிக்கின்றன, ஸர்வ ஸம்ஶயா: - ஸகலஸந்தேஹங்களும், சித்யந்தே - கழிந்துபோகின்றன. அஸ்ய - இவனுடைய, கர்மாணி - கருமங்கள், க்ஷீயந்தே - க்ஷயிக்கின்றன.

ஶா௦-ஸா.—இதில் பரமாத்மஜ்ஞாநத்திற்கு பலம் சொல்லுகிறது. புத்தியி லழுந்திக் கிடக்கிற வாஸநாமயமான அவித்யை கழியுங்கிறது. அவித்யை ஸ்வபாவத்தா லாத்மாவை யடைந்ததன்று. கங்கையைப்போலே இடைவிடாமல் வந்துகொண்டிருந்த ஸகல ஸந்தேஹங்களும் நீங்குகின்றன இவ்வாறு ஸம்சயங்கள் நீங்கி யவித்யை கழிந்தவனுக்கு, ஜ்ஞாநம் பிறப்பதற்குமுன் செய்தவையாய் பலங்கொடாத கருமங்களும் அக்காலத்தில் செய்த கருமங்களும் க்ஷயிக்கின்றன. இந்த ஜந்மத்திற்குக் காரணமாகிய கருமமோவெனில் அது பயனைத் தருவதற்குத் தொடங்கியதால் அநுபவித்தே யழிய வேணும். இவையெல்லாம் அந்த ப்ரம்மமே நானென்றறிந்தவனுக் குண்டாகிறபலம்.

ஶ்ர-ஸா.—அந்த ஜ்ஞாநத்திற்கு பலம் சொல்லுகிறது. ஸர்வோத்க்ருஷ்டர்களான ப்ரம்மாதிகள் யவனுக்குத் தண்ணியரோ; யவன் சேதநாசேதநங்களை சரீரமாக உடையவனோ; அந்த பரமபுருஷன் தர்சநஸமாநாகாரமான உபாஸநத்தில் விளங்கினானாயின் அந்த உபாஸகனுக்கு அந்தக்கரணத்தில் ராகத்வேஷாதிகளாகிய முடிகள் அவிழ்ந்து போகின்றன. ஹ்ருதய பதத்திற்கு, அந்தக்கரணத்தையாயினும், ஜீவனையேயாயினும் பொருளாகச் சொல்லலாம். ஆகையால் ஜீவனுக்கு ஸமஸ்தராகத்துவேஷங்களும் நீங்குமென்றுமொருபொருள்சொல்லவமையும். பிரம்மத்தையறிந்தபோது ஸர்வஜ்ஞத்வமுண்டாகிற தானதால் ஸகல ஸம்சயங்களும் நீங்கிப்போகின்றன. ப்ராரப்தகர்மம் தவிர மற்றுள்ள அனேக ஜந்மார்ஜிதங்களான பூர்வகருமங்கள் நசிக்கின்றன. கர்மத்திற்கு நாசமாவது பலங்கொடுக்கிற சக்தி நாசமென்றறிக. பகவான் பாஷ்யகாரர் இவ்வாறுவ்யாக்யானம் செய்திருக்கிறார். இனி இப்படி உபாஸித்தவனுக்கு மரணகாலத்தில் ஸகல கருமங்களும் நசிக்குமென்று சில ச்ருதிகள் சொல்லுகின்றன. பகவான் பாஷ்யகாரரும் அவ்வாறே யருளிச்செய்திருக்கின்றனர். அப்படியிருக்க, இங்கு உபாஸநம் தொடங்கும் போதே ஸகல கருமங்களும் அழியுமென்பது கூடுமோவெனில்; கூடும்; இங்குச் சொன்ன அழிவு இவ்வுபாஸகனுடைய பாபத்திற்கு பலம்கொடுக்கக் கடவேனல்லேன். என்கிற பகவத்ஸங்கல்ப ரூபமாகின்றது. மரணகாலத்தில் இவன் பாபங்களைப் பொறுத்துவிட்டேன், என்கிற பகவத்ஸங்கல்பம். ஆகையால் விரோதமில்லை.

௧௦. ஹிரண்மயே பரே கோஶே விரஜம் ப்ரஹ்ம நிஷ்கலம் |
தச்சுப்ரம் ஜ்யோதிஷாம் ஜ்யோதி: தத்யதாத்மவிதோ விது: ||

౧౦. హిరణ్మయే పరే కోశే విరజం బ్రహ్మ నిష్కలమ్ ।
తచ్ఛుభ్రం జ్యోతిషాం జ్యోతిః తద్యదాత్మవిదో విదుః ॥

(ப்-ம்.) ஹிரண்மயே - ஸ்வயம்ப்ரகாசமாகையாலே ஹிரண்மயமென்னப்படுவதாய், கோஶே - பரமாத்மவாஸஸ்தானமாயிருக்கிற, பரே - பரம பதத்தில், விரஜம் - ஸத்வ ரஜஸ் தமோரூபகுணங்களில்லாததாய், நிஷ்கலம் - அவயவமில்லாததாய், ஶுப்ரம் - சுத்தனாய், ஜ்யோதிஷாம் - ஜயோதிஸ்

http://acharya.org

லோகங்களுக்கும், ஜ்யோதி:-ஜ்யோதிஸ்ஸைக்கொடுக்கத்தக்கதாய், ஆத்மவித: யத்விது: - தத் - ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவராலே யறியப்பட்டதாய், தத் - சுருதிப்ரஸித்தமாயிருக்கிற, ப்ரஹ்ம - பரப்ரம்மமானது விளங்குகின்றது.

ஸம்-ஸா.—கீழ்ச்சொல்லிய மந்திரத்தின் பொருளேயே விரித்துரைக்கின்ற இம் மந்திரமும் மேலிரண்டு மந்திரங்களும். ஆத்மவித்துக்களே ப்ரம்ம ஸ்வரூபத்தை இப் படிப்பட்டதென் றறிவார்கள். மற்றோரறியார்.

ரா-ஸா.—நிர்தோஷமாய் திவ்யமங்கள விக்கிரஹத்தோடு பரமபதத்தில் பரப்ரம்மம் விளங்குகின்றது.

கக. ந தத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ரதாரகம் நேமா வித்யுதோ பாந்தி குதோऽயமக்நி: | தமேவ பாந்தமநுபாதி ஸர்வம் தஸ்ய பாஸா ஸர்வமிதம் விபாதி ||

౧౧. నతత్రసూర్యోభాతినచంద్రతారకంనేమావిద్యుతోభాంతికుతోయమగ్నిః।
తమేవభాంతమనుభాతిసర్వంతస్యభాసాసర్వమిదంవిభాతి॥

(ப-ம்.) தத்ர - அந்தப்ரம்மஸ்வரூபத்தில், ஸூர்ய: - ஸூரியனும், ந பாதி - ப்ரகாசிப்பதில்லை, சந்த்ரதாரகம் - சந்திரனும் நக்ஷத்திரங்களும் ந - ப்ரகாசிப்பதில்லை, இமா: வித்யுத: - இந்த மின்னல்களும், ந பாந்தி - மின்னுகின்றனவில்லை, அயமக்நி: - இந்த அக்நி, குத: - எப்படிப்ரகாசிக்கப்போகிறது, ஸர்வம் - எல்லாம், பாந்தம் - ப்ரகாசிக்கிற, தமேவாநு - அந்தப்ரம்மத்தையநுஸரித்தே, பாந்தி - ப்ரகாசிக்கின்றன. தஸ்ய - அந்த ப்ரம்மத்தினுடைய, பாஸா - காந்தியினால், இதம்ஸர்வம் - இவையெல்லாம், விபாதி - ப்ரகாசிக்கின்றது.

ஸம்-ஸா.—ஸமஸ்த ஜ்யோதிஸ்ஸுக்களினு மிதுவேஜ்யோதிஸ்ஸென்று முன் சொன்ன விஷயத்தை விரிக்கின்றது இம்மந்திரம். ஆத்மாவாகிய ப்ரம்மஸ்வரூப விஷயத்தில், எல்லாவற்றையும் ப்ரகாசிக்கச்செய்கிற சூரியனும் ப்காசிப்பதில்லை. அந்த ப்ரம்மத்தை ப்ரகாசிக்கச்செய்கிறதில்லை. அந்த சூரியனே, அந்தப்ரம்மத்தின் தேஜஸ்ஸி னுல் ஆத்மாவல்லாத ஸமஸ்தத்தையும் ப்ரகாசிக்கச்செய்கிருன். அவனுக்கு சுயமாய் ஒன்றை ப்ரகாசிக்கச்செய்ய சக்தியில்லை. அவ்வாறே சந்திரனும் நக்ஷத்திரங்களும் இந்த மின்னல்களும் ப்ரகாசிக்கச்செய்வதில்லை. ஸூரிய தேஜஸ்ஸுக்கு முன்னடங்கிப்போ கின்ற தேஜஸ்ஸை யுடையவனும் நம்மால் ப்ரத்யக்ஷத்தில் காணப்படுகிற இந்த அக் நிக்கு அந்த ப்ரம்மத்தை ப்ரகாசப்படுத்தும் சக்தியேது. பலவாறுசொல்லி யென்பயன். இந்த ஜகத்து விளங்குவது தனக்குத்தானே விளங்காநின்ற ப்ரம்மஸ்வரூபத்தை யநு ஸரித்தேயன்றி வேறில்லை. தண்ணீர்முதலியவை யொன்றைச் சுடுவது நெருப்பின் ஸம்பந்தாலேயன்றி சுயமாகவன்றே, அவ்வாறேயென்க. இந்த ஸூரியசந்திரர் நக்ஷத் திரம் முதலியவற்றோடு கூடிய இந்த ஜகத்து அந்த ப்ரம்மத்தின் தேஜஸ்ஸாலே ப்ரகா சிக்கின்றது. ஏனென்றால் அந்த ப்ரம்மமேயன்றோ காரியமாய் அவைகளின் காந்தியால் விளங்குகின்றது. ஆகையா லந்த ப்ரம்மம் ஸ்வயம் ஜ்யோதிரூபமென்பது விளங்குகின் றது. தனக்கில்லாதே பிறருக்குத்தான்கொடுப்பது கூடாதன்றோ; மண்குட முதலியவை மற்றொன்றை விளங்கச்செய்யக் கண்டதில்லை. காந்தியுடைய ஸூரியன் முதலாகிய

http://acharya.org

வற்றால் மற்றவை விளங்கக்கண்டோம். ஆனதால், தான் ஸ்வயம் ஜ்யோதியாயிருந்தே மற்றவைகளை ஜ்யோதிரூப மாக்கவேணும்.

ரா-ஹா.—அந்த ப்ரம்ஸ்வரூபத்தை ஜ்யோதிஸ்ஸுக்களுக்கும் ஜ்யோதிஸ்ஸென்றது என்கொண்டென்பதை விரிக்கின்றது. இந்த ஸூரியன் முதலியவை எல்லாவற்றுக்கும் அந்த ப்ரம்மம் ப்ரகாசிக்கும்போது காந்தியில்லை என்று கருத்து. மிகவும் ப்ரகாசரூபமாய் ஸூரியாதிகளும் அவைகளால் ஜகத்து ப்ரகாசிக்கவும் ப்ரத்யக்ஷமாய்க் காணப்படுகையில் அந்த ப்ரம்மஸ்வரூபத்தில் ஸூரியன் ப்ரகாசிப்பதில்லை என்றெங்ஙனம் சொல்லலாமெனில் கூறுகின்றோம். இந்த ஜகத்தை விளங்கச்செய்கிற ஸூரியாதி தேஜஸ்ஸெல்லாம் சுயமாய் வந்ததன்றே. பரமாத்மாவினால் கொடுக்கப்பட்ட அவனுடைய தேஜஸ்ஸே யன்றோ. இவ்விஷயம் கீதையிலும் பகவானாலே சொல்லப்பட்டது. "யதாதித்யகதம் தேஜோஜகத் பாஸயதேகிலம்! யச்சந்த்ரமஸியச்சாக் நௌ தத் தேஜோவித்திமாமகம்" என்கிற சுலோகத்தைக் காண்க. ஸூரிய சந்திராக்நி முதலியவற்றிலுள்ள தேஜஸ்ஸு என்னால் கொடுக்கப்பட்ட என்னுடைய தேஜஸ்ஸு, என்று இதின் பொருள். பகவான் பாஷ்யகாரரும் இவ்வாறே வ்யாக்யாநம் செய்தருளினார். ஸூரியாதிகள் என்னை யாராதித்து என்னிடத்திலிருந்து என்னுடைய தேஜஸ்ஸின் லேசத்தைப்பெற்று விளங்குகிறார்கள். என்று அர்ஜுநனுக்கு பகவானுபதேசிக்கிறாரென்று அவ்விடத்தில் பாஷ்யத்திற்குக் கருத்து. ஆகையா லிவர்களுக்கு சுயமான தேஜஸ் ஸில்லாமையினால் தேஜஸ்ஸில்லாதவர்களென்று சொல்லக் கூடும். ஆகையால் அந்த பரமபுருஷனுடைய காந்தியினாலே எல்லாம் விளங்குகிறது. ப்ரத்யக்ஷத்தில் ஸூரியாதி தேஜஸ்ஸால் ஜகத்து விளங்கினாலு மந்த தேஜஸ்ஸு அவர்களுடைய தன் னுகை யால் பரமபுருஷனுடையதே யாதலால் அந்த பரமபுருஷனுடைய தேஜஸ்ஸாலே எல்லாம் விளங்குகிறது என்று சொல்லக் குறையில்லை. இங்கு சொல்லவேண்டிய விசேஷங்கள் கடவல்லியிலும் சொல்லியிருக்கிறோம். அங்கே கண்டுகொள்க.

கஉ. ப்ரஹ்மைவேதமம்ருதம் புரஸ்தாத்ப்ரஹ்ம பஶ்சாத்ப்ரஹ்ம தக்ஷிணதஶ்சோத்தரேண। அதஶ்சோர்த்வம் ச ப்ரஸ்ருதம் ப்ரஹ்மைவேதம் விஶ்வமிதம் வரிஷ்டம்॥

౧౨. బ్రహ్మైవేదమమృతంపురస్తాద్బ్రహ్మపశ్చాద్బ్రహ్మదక్షిణతశ్చోత్తరేణ।
అధశ్చోర్ధ్వంచప్రసృతంబ్రహ్మైవేదంవిశ్వమిదంవరిష్ఠమ్॥

(ப-ம்) இதம்-இப்படிப்பட்ட, ப்ரஹ்மைவ - பரப்ரம்மமே, அம்ருதம்-மோக்ஷம், புரஸ்தாத் - முன்னும்விளங்குகின்றது, ப்ரஹ்ம - பிரம்மமே, பஶ்சாத் - பின்னும்விளங்குகின்றது, தக்ஷிணத:- வலபுறத்திலும், உத்தரேண - இடபுறத்திலும், அதஶ்ச - கீழும், ஊர்த்வம்ச - மேலும், ப்ரஸ்ருதம் - வ்யாபித்திருக்கின்றது, இதம் விஶ்வம் - இந்தஸமஸ்தமும், ப்ரஹ்ம - ப்ரம்மமே, இதம் - இந்தப்ரம்மமே, வரிஷ்டம் - வரிக்கத்தக்கது.

ஶம்-ஹா.—ப்ரம்மமே ஸத்யம், மற்றவை மித்யை, என்று முன்சொன்ன உபதேசத்தை திருடமாக்கி முடிக்கின்ற திம்மந்திரத்தில். உலகத்தின் தோற்றம் கயிற்றில் தோற்றுகிற பாம்புத் தோற்றம்போலது. ப்ரம்மமேஸத்யமென்று வேதாநுசாஸநமாம்.

ரா-ஹா. எல்லாவிடங்களிலும் வ்யாபித்திருக்கிறவஸ்து வரிக்கத்தக்கின ப்ரம்மமேயாம்.

இதி த்விதீயமுண்டகே த்விதீயகண்ட: இதி த்விதீயமுண்டகம்.

http://acharya.org

ஸ்ரீ:.

𑌅𑌥 𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃.

௧. 𑌦𑍍𑌵𑌾 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 𑌸𑌯𑍁𑌜𑌾 𑌸𑌖𑌾𑌯𑌾 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇।
𑌤𑌯𑍋𑌰𑌨𑍍𑌯𑌃 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 𑌸𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑌶𑍍𑌨𑌨𑍍𑌨𑌨𑍍𑌯𑍋 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿॥

౧. ద్వా సుపర్ణా సయుజా సఖాయా సమానం వృక్షం పరిషస్వజాతే।
తయోరన్యః పిప్పలం స్వాద్వత్త్యనశ్నన్నన్యో అభిచాకశీతి॥

(ப-ம்) 𑌸𑌯𑍁𑌜𑌾 - ஸமானமானகுணமுடையவர்களாய், 𑌸𑌖𑌾𑌯𑌾 - கூடியிருப்பவர்களாய், 𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾 - பக்ஷிகள்போல்வராகிய ஜீவாத்ம பரமாத்மாக்கள், 𑌦𑍍𑌵𑌾 - இருவரும், 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 - வ்ருக்ஷம்போலிருக்கிற ஒருசரீரத்தை, 𑌪𑌰𑌿𑌷𑌸𑍍𑌵𑌜𑌾𑌤𑍇 - அடைந்திருக்கிறார்கள், 𑌤𑌯𑍋𑌃 - அவ்விருவருக்குள், 𑌅𑌨𑍍𑌯𑌃 - பரமாத்மாவைக்காட்டில் வேறுபட்டவனான ஜீவாத்மா, 𑌸𑍍𑌵𑌾𑌦𑍁 - விபாகதசையையடைந்திருக்கிற, 𑌪𑌿𑌪𑍍𑌪𑌲𑌂 - புண்யபாபரூபமாகிய கருமபலத்தை, 𑌅𑌤𑍍𑌤𑌿 - புஜிக்கிறான். 𑌅𑌨𑍍𑌯𑌃 - ஜீவாத்மாவைக் காட்டில் வேறுபட்ட பரமாத்மா, 𑌅𑌨𑌶𑍍𑌨𑌨𑍍 - கர்ம பல ஸம்பந்தமில்லாதவனாய், 𑌅𑌭𑌿𑌚𑌾𑌕𑌶𑍀𑌤𑌿 - ப்ரகாசிக்கிறான்.

ஸ0-ஸா.—இதுவரையில் பரவித்யை சொல்லப்பட்டது. யாதொன்று புருஷபதத்தால் சொல்லப்படுகிற ஸத்யஸ்வரூபமான அக்ஷர பரப்ரம்மத்தை யறிவதற்கு ஸாதநமாகின்றதோ; யதை யறிந்து அவித்யைமுதலிய ஸம்ஸார காரணங்கள் நீங்கி ராகத்வேஷமுதலிமுடிகள் கழியுமோ; அந்த ப்ரம்மத்தை யடைவதற்கு ப்ரணவத்தை வில்லாக்கி என்று துடங்கி யோகமுமுபாயமாகச் சொல்லப்பட்டது. இனி யதற்கு துணைக்காரணங்களாகிய ஸத்யமுதலியவை கூறுவதற்கு இந்த கண்டம் துடங்கப்பட்டது. அதுவுமன்றி தத்வ நிச்சயமும் முக்யமாய் சொல்லப்படுகிறது. கீழில் தத்வநிச்சயம் பண்ணப்பட்டதாயினு மது புலப்படுவது மிகவும் வருத்தமானதினால் இங்குமதைச் சொல்வது புநருக்தி தோஷத்திற் கிடமாகாது. பரமார்த்த வஸ்துவை யறிவித்தற்கு ஸூத்திரமாகிய மந்திரம் முதலில் "த்வாஸுபர்ணா" என்பது. இதற்குப் பொருள் சொல்லுகிறோம். பக்ஷிகளின் ஸாத்ருச்யமிருப்பதால் பக்ஷிகளென்றது. எப்போதும் கூடியிருப்பதால் ஸயுஜௌ என்றது. ஒன்றாய் தோற்றுகிற காரணத்தை யுடையவராகையால் ஸகாயௌ என்றது. இப்படியுள்ள ஜீவாத்ம பரமாத்மாக்கள் வ்ருக்ஷம்போ லழிந்து போகிறபடியால் வ்ருக்ஷமெனப்படுகிற சரீரத்தை தங்களுக்கு ப்ரத்யக்ஷ ஸ்தாநமாக அடைந்திருக்கின்றார்கள். இரண்டு பக்ஷிகள் ஒரு வ்ருக்ஷத்தில் சேருவதுபோலவென்று கருத்து. இந்த வ்ருக்ஷமானது மேல்வேராய் கீழ் கிளைகளாய் க்ஷேத்திரமென்று பெயர் பெற்றதாயிருக்கிறது; ஸமஸ்த ப்ராணிகள் செய்த கருமபலத்திற்கு மிருப்பிடமாயிருக்கிறது இந்த சரீரமே. அந்த சரீரத்தை அவித்யை காமம் கருமம் வாஸனை இவைகளுக்கிடமாகிய லிங்கத்தை உபாதியாக உடைய ஜீவனும் ஈச்வரனும் பக்ஷிகளைப்போ லடைந்திருக்கின்றனர். அவ்வாறு சேர்ந்திருக்கிற இருவருள் ஒருவனாகிய ஜீவன், ஸுகதுக்கங்களை கருமத்திற்குத் தக்கபடி யநுபவிக்கிறான். அது, அவிவேகத்தினாலே வந்த விசித்திரவேதனை, ஸர்வஜ்ஞனாய் ஸத்வத்தை யுபாதியாக உடைய நித்யசுத்தபத்த முக்தஸ்வ

http://acharya.org

பாவனாகிய ஈச்வரன் கருமபலத்தை புசிப்பதில்லை. இந்த ஈச்வரன் ஸத்தாமாத்திரத்தால் ப்ரக்ருதி ஜீவர்களை நித்தியஸாக்ஷியாய்க்கொண்டு ப்ரேரணம் செய்கிறவனாகையால் தான் ஸாக்ஷியாகிறானேயன்றி கருமபலத்தை புசிப்பதில்லை. தான் பார்த்தமாத்திரத்தால் ப்ரேரித்துக்கொண்டு அரசனைப்போல் விளங்குகிறான்.

௱-ஹா.—கீழ்ச்சொல்லியதில் ப்ரம்மத்திற்கு சரீர ஸம்பந்தத்தால் ஸுகதுக்காநுபவம் வரும்போல் தோற்றுகையா லந்த ஸந்தேஹம் நீங்குவதற்கு இந்த மந்திரம் சொல்லப்படுகிறது. சுபாவத்தில் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களால் சமானராய், கூடியிருப்பவராய் பக்ஷிபோலிருக்கிற ஜீவாத்ம பரமாத்மாக்கள் ஒருசரீரத்தி லிருந்தாலும் பரவசனான ஜீவாத்மா துக்காநுபவம் பண்ணுகிறானேயன்றி பரமாத்மாவுக் கில்லை. ஜீவன் வேறு பரமாத்மா வேறாகையால் ஜீவனுடைய துக்கம் ப்ரமாத்மாவுக்கில்லை. இத்தால் ஜீவனே பரமாத்மா என்று அத்வைதிகள் சொல்லுகிறபடி ஸரியல்லவென்று இந்தச் சுருதி காட்டுகிறது. அப்படியாகில் பரமாத்மாவுக்கு துக்காநுபவம் வருகையா லென்க,

௨. ஸமாநே வ்ருக்ஷே புருஷோ நிமக்நோऽநீஶயா ஶோசதி முஹ்யமாந:।
ஜுஷ்டம் யதா பஶ்யத்யந்யமீஶமஸ்ய மஹிமாநமிதி வீதஶோக:॥

౨. సమానేవృక్షేపురుషోనిమగ్నోనీశయాశోచతిముహ్యమానః।
జుష్టంయదాపశ్యత్యన్యమీశమస్యమహిమానమితివీతశోకః॥

(ப்-ம்.) அநீஶயா-போக்யபூதையாயிருக்கிற ப்ரக்ருதியினாலே, முஹ்யமாந: - மோஹத்தையடைந்தவனாய், ஸமாநே - ஒன்றாயிருக்கிற, வ்ருக்ஷே-சரீரத்தில், நிமக்ந: - முழுகினவனாய், ஶோசதி - சோகிக்கிறான். இதி - இந்தப்படி, அந்யம் - வேறானவனாய், ஜுஷ்டம் - தன்னிடத்தில் ப்ரீதியுடையவனாயிருக்கிற. ஈஶம் - பரமாத்மாவையும், அஸ்ய - இந்த பரமாத்மாவினுடைய, மஹிமாநம் - மாஹாத்ம்யத்தையும், யதா - எப்போது, பஶ்யதி - பார்க்கிறானோ, (ததா-அப்போது) வீதஶோக:-சோகமில்லாதவனாகிறான்.

௱0-ஹா —இவ்வாறு ஜீவனுக்கு கர்மபலாநுபவ மாகையால் முன்சொன்னபடி வ்ருக்ஷம்போன்ற ஒருசரீரத்தில் போக்தாவாய்க்கொண்டு அவித்யை, காமம் கருமபலம் ராகம், த்வேஷம்முதலிய பெருஞ்சுமையால் அமுக்கப்பட்டு ஸமுத்திரஜலத்தில் சுரைக்காய்போல முழுகினவனாய் தேஹத்தையே ஆத்மாவாக ப்ரமித்துக்கொண்டு இவனுக்கு நான் பிள்ளை இவனுக்கு நான் பேரன் நானிளைத்தவன் நான் பெருத்தவன் நான் குணமுடையவன் நான் குணமில்லாதவன் நான் ஸுகத்தை யநுபவிக்கிறேன், நான் துக்கத்தை யநுபவிக்கிறேன், என்றிப்படிப்பட்ட ஜ்ஞாநமுடையவனாய் பிறப்பதும் சாவதும் பந்துக்களோடு கூடுவதும் பிரிவதுமாய், எனக்கு சக்தியில்லையே என்பிள்ளை மரித்தானே என் பார்யை மரணமடைந்தாளே இனி நானேன் பிழைத்திருக்கவேணும், என்று தீனனாய் அனேகவித ஸங்கடங்களால் விவேகமின்றி சிந்தையடைகிறவனாய் தபிக்கிறான். இப்படி திர்யக்காயு மனுஷ்யனாயும் பிறந்துபிறந்து ப்ரேதனாகிற அந்த ஜீவன் இவ்வாறு கழிந்துபோன அநேக ஜந்மங்களில் செய்த ஸுக்ருதலேசத்தால் ஒருகருணையுடைய புருஷனால் உபதேசிக்கப்பெற்ற யோகமார்க்கத்தை யுடையனாய் கொல்லாமை, மெய்யுரை, ஸ்த்ரீ ஸம்பந்தமில்லாமை, நிவ்ருத்தி, சமம்தமம் முதலியவற்றோடு கூடி தெளிந்த நெஞ்சையுடையவனாய் யோகிகளில் பலராலும்கண்டு ஸேவிக்கப்படுகிற

http://acharya.org

உபாதிவிலக்ஷணனான ஈச்வரனை யெப்போது காண்கிறானோ பசிதாஹம் சோகம்மோஹம் ஜநநமரணம் இவைகளில்லாத அந்த ஈச்வரனுடைய மகிமையையும் எல்லா ஜகத்திற்கு இவனேயாத்மா அவனே நான்; ஸர்வ ஸமனாய் ஸர்வபூதங்களிலு மிருக்கிற ஈச்வரன் என்னைக்காட்டில் அவித்தையினாலுண்டாகிய உபாதியினால் பரிச்சேதிக்கப்பட்டவனாகையால் வேறுபட்டவனன்று. இந்த ஜகத்தின் மகிமையெல்லாம் பரமேச்வரனாகிய என்னுடைய மகிமை என்பதையும் எப்போது தெரிந்துக்கொள்ளுகிறானோ; அப்போது ஸமஸ்தசோக ஸாகரங்களிலின்றும் விடுபட்டு க்ருதக்ருத்யனாகிறான்.

ரா-ஹா. ப்ரக்ருதி ஸம்பந்தத்தினால் பரமாத்மாவுக்குப் போல் தனக்குமுண்டான ஜ்ஞாநம் ஆநந்தம்முதலியவை மறைந்தவனாய் சரீரத்தில் நான் பெருத்தவன் நானிளைத்தவன் என்று ஆத்மப்ரமத்தைப் பண்ணிக்கொண்டு அந்த சரீரஸம்பந்தத்தால் வருகிற சுகதுக்கங்களை யநுபவிக்கிறான். எக்காலத்திலிந்தஜீவன் இவ்வாறு முழுகிக்கிடக்கிற தன்னைக்காட்டிலும் தனக்கு தாரகனாகையாலும் நியந்தாவாகையாலும் சேஷியாகையாலும் விலக்ஷணனாய் தான்செய்த ஸுக்ருதலவத்தால் தன்னிடத்தில் ப்ரீதிசெய்திருக்கிற பரமாத்மாவையும், ஸமஸ்தஜகத்தையும் நியமிக்கிற அவனுடைய மாகாத்ம்யத்தையும் காண்கிறானோ; அக்காலத்தில் சோகம்விட்டவனாகிறான். என்றுபொருள். சிலர், அநீஶயா - என்பதற்கு ஸாமர்த்யமில்லாமையினாலே, என்று வ்யாக்யாநஞ்செய்து, சேற்றிலழுந்தி யொன்றும்தோற்றாமல் துக்கித்துக்கொண்டிருந்த ஒருபுருஷன் தானேவெளிக்கிளம்ப சக்தியில்லாமையால் தன்னைப்போல் சேற்றில் விழாதவனாய் தன்னிடத்தில் ப்ரீதியோடுகூடிய புருஷனையு மவனுக்குத் தன்னை யெடுக்கத்தக்க சக்தியையும் பார்த்து, இனி நமக்குபயமில்லையென்று சோகத்தைவிடுகிறபடி இத்தால் அநுஸந்திக்கப்படுகிறது; என்றுரைத்தனர். இந்தபக்ஷத்திற்கும் பாஷ்யவிரோதமில்லை.

௩. யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம் கர்தாரமீஶம் புருஷம் ப்ரஹ்மயோநிம் | ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி ||

3. యదాపశ్యఃపశ్యతేరుక్మవర్ణంకర్తారమీశంపురుషంబ్రహ్మయోనిమ్।
తదావిద్వాన్పుణ్యపాపేవిధూయనిరంజనఃపరమంసామ్యముపైతి॥

(ப-ம்.) பஶ்ய: - ஜீவாத்மாவானவன், யதா - எந்தகாலத்தில், ருக்மவர்ணம் - ஸுவர்ணஸ்வரூபமாய் ப்ரகாசிக்கிற அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனாய், ஈஶம் - ஜகத்துக்கு நியாமகனாய், கர்தாரம் - ஜகத்கர்தாவாய், ப்ரஹ்மயோநிம் - ப்ரக்ருதிக்குபாதாநமாயிருக்கிற, புருஷம் - பரம்புருஷனை, பஶ்யதே - ஸாக்ஷாத்க்ரிக்கிறானோ, ததா - அந்தகாலத்தில், வித்வாந் - அந்தப்ரம்மதர்சி, நிரஞ்ஜந: - ப்ரக்ருதிஸம்பந்த மில்லாதவனாய், புண்யபாபே - புண்யத்தையும் பாபத்தையும், விதூய - நிரஸித்து, பரமம்ஸாம்யம் - அத்யந்தஸாம்யத்தை யடைகிறான்.

ரங-ஹா. இந்த மந்திரமும் முன்சொன்ன விஷயத்தையே விஸ்தரித்துச் சொல்லுகிறது. உபாஸகனானவன் எப்போது ஸ்வயம்ஜ்யோதிரூபனாய் ஜகதீசனாய் ஜகத்கர்தாவாயிருக்கிற காரணப்ரம்மமான புருஷனை யபேதமாகப் பார்க்கிறானோ; அவனப்போது ஸகல கருமங்களும் நீங்கி ப்ரம்மத்தோடு பேதமின்றி ஸாம்யத்தை யடைகிறான். அபேதத்தை யடைகிறானென்பதே அத்யந்தஸாம்யத்தை யடைகிறான், என்று சொல்லப்ப

http://acharya.org

டுகிறது. பேதமுண்டாகி லத்யந்த ஸாம்யம் கூடாதன்றே. ஆகையா லபேதத்தை யடைகிறானென்றேபொருள்.

ரா-ஹா. தன்னைக்காட்டில் விலக்ஷணாக பரமாத்மாவை எப்போதறிகிறானோ; அப்போது அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களால் பூர்ணஸாம்யத்தையடைகிறான் ஸாம்யத்தை யடைகிறானென்பதினால் லபேதமில்லையென்று ஸ்பஷ்டமாகின்றது.

ச. ப்ராணோ ஹ்யேஷ யஸ் ஸர்வபூதைர் விபாதி விஜாநந் வித்வாந் பவதே நாதிவாதீ | ஆத்மக்ரீட ஆத்மரதி: க்ரியாவாநேஷ ப்ரஹ்மவிதாம் வரிஷ்ட: ||

౪. ప్రాణోహ్యేషయస్సర్వభూతైర్విభాతివిజానన్విద్వాన్భవతేనాతివాదీ।
ఆత్మక్రీడఆత్మరతిఃక్రియావానేషబ్రహ్మవిదాంవరిష్ఠః॥

(ப-ம்.) ய: - யந்தபரமபுருஷன், ஸர்வபூதை: - ஸமஸ்த பூதங்களாலு மாச்ரயிக்கப்பட்டவனாய், விபாதி - விளங்குகிறானோ; ஏஷ:ஹி - இந்தபரமபுருஷனேவென்றால், ப்ராண: - பரமாத்மா; விஜாநந் - அவனை யறிந்தவனாய், வித்வாந் - உபாஸகனாய்க்கொண்டு, தேந - அந்தபுருஷனாலே, அதிவாதீ - அதிவாதம்பண்ணுகிறவனாக, பவ - ஆகக்கடவாய்.

ஶம்-ஹா. ப்ராணனுக்கும் ப்ராணனாய் பரமாத்மாவாய் பரமேச்வரனாய் ஸமஸ்தபூதங்களிலுமிருப்பவனாய் அனேக ப்ரகாரமாய் விளங்குகிற பரமபுருஷனை நானேயவனென்று எவனறிகிறானோ, எவனிந்த புருஷஸ்வரூபத்தை யடைகிற ப்ரம்மத்தைவிட மற்றொன்றை யறியாமையாலே அதிவாதம் பண்ணானோ; அதாவது இரண்டுவஸ்துவையறிந்தாலன்றோ, அதைவிட இதுசிறந்தது என்று அதிவாதம் செய்யக்கூடும். இவனுக்கு ப்ரம்மந்தவிர மற்றொன்று தோற்றாமையாலே இந்த பொருளைவிட ப்ரம்மம் சிறந்ததென்று அதிவாதம் பண்ணவழியில்லை ; அதிவாதமாவது சிறந்தது என்று ஒருபொருளை ச்லாகிப்பது. புத்திரன் பார்யை முதலியவர்களிடத்தில் க்ரீடையைவிட்டு ப்ரம்மத்தி னிடத்திலே எவன் க்ரீடிக்கிறானோ அப்படியே ப்ரம்மவிஷயத்திலேயே ப்ரீதியுடையவனாகிறானோ; கிரீடையாவது ஆநந்தத்திற்குக் காரணமான காயிகவ்யாபாரம், ரதியாவது - மநஸ்ஸில்பிறக்கிறப்ரீதி. அப்படியே ஜ்ஞாநம் முதலிய மாநஸக்ரியைகளை யுடையவனாகிறானோ; இங்குசிலர் க்ரியை என்பது அக்நிஹோத்திரம் முதலிய கர்மாநுஷ்டாநத்தை என்று வ்யாக்யாநம் செய்யவிரும்புகிறார்கள். அது விருத்தம். கருமாநுஷ்டாநம் செய்பவன் ப்ரம்மத்திலேயே நெஞ்சைச் சேர்ப்பவனாகான். இவ்விரண்டுமொருவனுக்குச்சேருமோ. இருளும் வெளிச்சமும் சேர்ந்தபோதன்றோ ஜ்ஞாநகருமங்களொன்று சேருவது. ஆகையாலவர்சொல்லுவது வீண்ப்ரலாபமேயாம். சுருதிகளினாலுமிதுவிளங்கும். ஆகையால் க்ரியை என்பது ஜ்ஞாநத்தையேயன்றி கருமத்தையல்ல. அப்படிப்பட்டவன் ப்ரம்மத்தை யறிந்தவரில் சிறந்தவனாகிறான்.

ரா-ஹா. மற்றச்சுருதிகளில்போல இங்கும் ப்ராணசப்தம் பரமாத்மாவையே கூறுகின்றது. இந்தபரமாத்மா எல்லாபூதங்களாலு மாச்ரயிக்கப்படுகிறான், இப்படிப்பட்ட பரமபுருஷனை ச்ரவணம் மநநம் இவைகளால் நன்குணர்ந்து அவனை யுபாஸநம் செய்து அந்தபரமபுருஷனைப்பற்றி யதிவாதியாகக்கடவாய், என்று சிஷ்யனுக்கு உபதேசிக்கிறது. தன்னாலுபாஸிக்கப்படுகிற தேவதைக்கு எல்லாதேவதைகளிலும் சிறப்புச்சொல்லுகிறவனை யதிவாதியென்கிறது. எல்லாதேவதைகளிலு முத்தமனான பரமபுருஷனையறிந்துபாஸித்து அந்தபரமபுருஷனுக்குண்டான ஸர்வோத்தமத்வத்தை வாய்படைத்த ப்ரயோஜனம்பெறுவதற்குக் கூறுஎன்று கருத்து இப்படிப்பட்டவன் உத்யாநம்

http://acharya.org

முதலியவிடங்களில் விளையாடுகிறபடிகளைவிட்டு பரப்ரம்மத்தில் க்ரீடிப்பவனாய், கந்தம் புஷ்பம் முதலியவற்றி லாசையைவிட்டு பரமாத்மாவினிடத்தில் ப்ரேமத்தையுடையவனாய், பலோத்தேசமின்றி சகலகருமங்களையும் செய்யக்கடவன். பலோத்தேசமின்றிச் செய்கிற கருமங்களினால் நெஞ்சு சுத்தமாய் ப்ரம்மவித்யையென்கிற ப்ரம்மோபாஸநம் ஸித்திக்கின்றதாகையால் அவச்யம் கர்மாநுஷ்டாநம் செய்யக்கடவன். இவன் ப்ரம்மத்தை யறிந்தவரில் பெரியோனாகிறான்.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில் பவதே, ந, அதிவாதீ, என்று பதம்பிரித்து ந, என்பதை, பவதே, என்கிற பதத்தோடுகூட்டி யுரையுரைக்கப்பட்டது. இராமாநுஜபாஷ்யத்தில், பவ, தேந, அதிவாதீ, என்று பதம்பிரித்து தேந, அதிவாதீ பவ, என்றந்வயித்துக் கருத்துகூறப்பட்டது. கர்மாநுஷ்டாநம் ப்ரம்மஜ்ஞாநிக்குக்கூடாதென்று 'க்ரியா' என்கிறபதத்திற்கு அக்நிஹோத்ராதிகருமம் முக்யப்பொருளாயினும், ஜ்ஞாநமேபொருளென்று சங்கரபாஷ்யத்தில் விவரணம் செய்யப்பட்டது. இந்த கருமாநுஷ்டாநம் ப்ரம்மோபாஸநமாகிற ஜ்ஞாநத்திற்கு அங்கமென்று கருதி 'க்ரியா' என்கிற அந்தபதத்திற்கு கருமாநுஷ்டாநமே பொருளென்று இராமாநுஜபாஷ்யத்தில் கொள்ளப்பட்டது.

௫. 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑌸𑍍𑌤𑌪𑌸𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑍇 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑍋 𑌹𑌿 𑌶𑍁𑌭𑍍𑌰𑍋 𑌯𑌂 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌯𑌤𑌯𑌃 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌾𑌃 ॥

౫. సత్యేన లభ్యస్తపసా హ్యేష ఆత్మా సమ్యగ్జ్ఞానేన బ్రహ్మచర్యేణ నిత్యమ్।
అంతశ్శరీరే జ్యోతిర్మయో హి శుభ్రో యం పశ్యంతి యతయః క్షీణదోషాః॥

(ப-ம்.) 𑌕𑍍𑌷𑍀𑌣𑌦𑍋𑌷𑌾𑌃 - ராகத்வேஷமுதலிய தோஷங்கள்கழிந்தவராகிய, 𑌯𑌤𑌯𑌃 - இந்திரியஜயமுடையயதிகள், 𑌅𑌨𑍍𑌤𑌃𑌶𑌰𑍀𑌰𑍇 - சரீரத்திற்குள், 𑌯𑌂 - எந்தபுருஷனை, 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - காண்கிறார்களோ; 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌯𑌃 𑌹𑌿 - ஜ்யோதிஸ்வரூபனாய், 𑌶𑍁𑌭𑍍𑌰𑌃 - சுத்தனாய், 𑌆𑌤𑍍𑌮𑌾 - அந்தர்யாமியாயிருக்கிற, 𑌏𑌷𑌃 - இந்தபரமபுருஷன், 𑌸𑌤𑍍𑌯𑍇𑌨 - பூதங்களுக்குஹிதமான வார்த்தைகளினாலும், 𑌤𑌪𑌸𑌾 - உள்ளும்புறமுமொத்திருக்கையாகிற தவத்தினாலும், 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨- சாஸ்திரத்தினால்பிறந்த நல்லறிவாலும், 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 - எப்போதும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑍇𑌣 - ஸ்திரீஸம்பந்தத்தை நீக்குகையினாலும், 𑌲𑌭𑍍𑌯𑌃 - அடையத்தக்கவன் அல்லது ஸாக்ஷாத்கரிக்கத்தக்கவன். அல்லது உபாஸிக்கத்தக்கவன்.

𑌶𑌂-𑌭𑌾. 𑌰𑌾-𑌭𑌾. இம்மந்திரத்தில் ஸந்யாஸிக்கு நல்லறிவுக்குத் துணைக்காரணங்களாய ஸத்யம்முதலிய ஸாதநங்கள் விதிக்கப்படுகின்றன. பொய்சொல்லாமையினாலும் ஆர்ஜவத்தாலும், ஆர்ஜவமாவது கபடத்தைவிடுகை. இதையே தபஸ்ஸென்றும் ப்ரமாணம்சொல்லுகிறது. இதுவே ஆத்மசாக்ஷாத்காரத்திற்கு மிகவு முபயோகப்படுகிறது. சாந்திராயணம் முதலியவை யப்படிப்பட்டவையல்லவன்றோ; உள்ளபடி யாத்ம


http://acharya.org

ஸ்வரூபத்தை யறிவதினாலும், மைதுநத்தைவிடுகையாலும் இவ்வாத்மா அடையப்படு வன். எந்தஆத்மா சுத்தனே எவன் சரீரமத்யத்தில் ஹ்ருதய புண்டரீகத்தில் ஜ்யோதிர் மயனாய் விளங்குகிறானோ; யவன், காமக்ரோதம் முதலிய தோஷங்களில்லாதே பரப்ரம் மத்தை யடையவேணுமென்று யத்நம்செய்கிற ஸந்யாஸிகளால் காணப்படுகிறானோ அந்த பரமாத்மா எப்போதும் கீழ்ச்சொல்லிய நியமத்தின்படி யிருக்கிறபுருஷனா லடை யப்படுவான். ஒருக்கால் மெய்சொல்வது மெய்யாகமாட்டாது. இப்படியேமற்றவையும்.

ஸூ. ஸத்யமேவஜயதே நாந்ருதம் ஸத்யேந பந்தா விததோ தேவயாந:।
யேநாக்ரமந்த்ய்ருஷயோ ஹ்யாப்தகாமா யத்ர தத் ஸத்யஸ்ய பரமம் நிதாநம்॥

௬. సత్యమేవజయతేనానృతంసత్యేనపన్థావితతోదేవయానః।
యేనాక్రమంత్యృషయోహ్యాప్తకామాయత్రతత్సత్యస్యపరమంనిధానమ్॥

(ப்-ம்.) ஸத்யமேவ - ஸத்யமே, ஜயதே - ஜயிக்கிறது, அந்ருதம் - பொய்யானது, ந - ஜயிக்கிறதில்லை, தேவயாந:-பந்தா: - அர்ச்சிராதிமார்க மானது, ஸத்யேந - ஸத்யம்சொல்வதினால், விதத: - உண்டாகிறது. யேந - எந்தஅர்ச்சிராதிமார்க்கத்தினால், ஆப்தகாமா: - ஆசாபாசம் விட்டவ ராகிய; ருஷய: - தத்வஜ்ஞாநிகள், யத்ர - எவ்விடத்தில், ஸத்யஸ்ய -ஸத்ய வசநத்திற்கு, பரமம் - நிதாநம் - முக்யபலமாகிய, தத் - அந்தபரமாத்ம தத்வம் ப்ரகாசிக்கிறதோ அந்தஸ்தாநத்தை, ஆக்ரமந்தி-அடைகிறார்களோ;

ஸம-ஹா. ஸத்யத்தை ஸ்துதிக்கிற அர்த்தவாத மிந்தசுலோகம்;மெய்சொல்பவனே ஜயிப்பான். பொய்சொல்லுமவன் ஜயியான். ஒருபுருஷனைப்பிடித்து மெய்யும்பொய்யும் வெற்றியையும் தோல்வியையுமடையுமேயன்றி தனித்தல்ல.உலகத்தில் பொய்யன்தோ ற்பதும் மெய்யன்ஜயிப்பதும் ப்ரத்யக்ஷமாயிருக்கின்றது. ஸத்யம் பலமுடையது. சாஸ் த்ரத்திலும் ஸத்யமேபலமுடையதென்று தெரிகிறது. ஸத்யத்தினலன்றோ தேவயாநமா ர்க்கம் கிடைக்கின்றது. எந்த மார்க்கமே புருஷார்த்தமாகிய ப்ரம்மத்தை ஸந்யாஸிகளடைவதற்கு ஹேதுவாயிருக்கின்றதோ;

ரா-ஹா. அர்ச்சிராதிமார்க்கத்தினால் பரமபதத்தையடைவதற்கு ஸத்யமே முக்ய காரணமாயிருக்கிறதென்று ஸத்யத்தைக் கொண்டாடுகிறது. மற்றவை பதஉரையின் படியேகொள்க.

எ. ப்ருஹச்ச தத் திவ்யமசிந்த்யரூபம் ஸூக்ஷ்மாச்ச தத் ஸூக்ஷ்மதரம் விபாதி।
தூராத் ஸுதூரே ததிஹாந்திகே ச பச்யத்ஸ்விஹைவ நிஹிதம் குஹாயாம்॥

௭. బృహచ్చతద్దివ్యమచిన్త్యరూపంసూక్ష్మాచ్చతత్సూక్ష్మతరంవిభాతి।
దూరాత్సుదూరేతదిహాంతికేచపశ్యత్స్విహైవనిహితంగుహాయామ్॥

(ப்-ம்.) தத் - அந்தப்ரம்மமானது, ப்ருஹத் - பெரியது, திவ்யம்- ப்ரகாசிப்பது, அசிந்த்யரூபம் - சிந்திக்கமுடியாதரூபத்தையுடையது, ஸூக்ஷ்மாத் - ஸூக்ஷ்மவஸ்துவைக் காட்டிலும், தத் - அந்தப்ரம்மமானது, ஸூக்ஷ்மதரம் - மிகவும் ஸூக்ஷ்மமாய், விபாதி-விளங்குகின்றது. தத் அந்தப்ரம்மமானது, தூராத் - தூரத்திலும், ஸுதூரே - மிகவும்தூரத்தி

http://acharya.org

யிருக்கின்றது. தத் - அந்தப்ரம்மமானது, இஹைவ - இங்குஸமீபத்திலுமிருக்கின்றது. பஶ்யத்ஸு - ஜ்ஞாநிகளுக்காயின், இஹ குஹாயாம் ஏவ - இந்தஹ்ருதயகுஹையிலேயே, நிஹிதம் - வைக்கப்பட்டிருக்கிறது.

ஸம்-ஹா. எங்கும் வ்யாபித்திருப்பதால் பெரிதாய், ஸ்வயம் ப்ரகாசமாய் அது பற்றியே இந்திரியங்களுக்குப் புலப்படாததாய் ஆகையாலே இவ்வாறென்று சிந்திக்க முடியாததாய் ஸூக்ஷ்மமாகிய ஆகாயத்திலும் ஸர்வகாரணமாகையாலே நிரதிசய ஸூக்ஷ்மமாய், நாநாரூபமாய் ஸூரியசந்திரரூபமாய் விளங்குகின்றதாய், அஜ்ஞராலடையப் படாமையா லவர்களுக்கு மிகவும் தூரத்திலிருப்பதாய், ஜ்ஞாநிகளுக்கு அடையக் கூடியதாகையா லவர்களுக்கு ஸமீபத்திலிருப்பதாய், இங்குஹ்ருதயத்தில் காண்கிறவர்களுக்கு அவ்விடத்திலே யிருப்பதாய் அவித்யையினு லனைவராலும் காணப்படாததா யிருக்கிறது பரப்ரம்மம்.

ரா-ஹா. அர்ச்சிராதிமார்க்கத்தா லடையக்கூடிய ப்ரம்மத்தின் விசேஷங்களைச் சொல்லுகிறது. அது ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் பெரியது. பரமாகாசத்திலிருப்பது. வாக்குக்கும் மநஸ்ஸுக்கு மெட்டாததாய் ப்ரகாசமாய் விளங்குகிற திருமேனியையுடையது. எல்லா அசேதநங்களுக்குள்ளும் புகுகிற ஸூக்ஷ்மமுடைய ஜீவாத்மாவிலும் அந்த ஜீவாத்மாவுக்குள்ளும் புகுகிறபடியால் மிகச் சூக்ஷ்மமானது. அது ப்ரக்ருதி மண்டலத்திற் கப்புறத்திலிருக்கிற பரமபதத்திருப்பதால் மிகவும் தூரத்திலிருப்பது. இந்த ப்ரக்ருதிக்குள் ஸூர்யமண்டலத்திற் குள்ளிருப்பதால் ஸமீபத்திலிருப்பது. அந்தக்கரணத்திலும் ப்ரகாசிப்பது யோகிகளுக்கு.

௮. ந சக்ஷுஷா க்ருஹ்யதே நாபி வாசா நாந்யைர்தேவைஸ்தபஸா கர்மணா வா | ஜ்ஞாநப்ரஸாதேந விஶுத்தஸத்த்வஸ்ததஸ்து தம் பஶ்யதே நிஷ்கலம் த்யாயமாந: ||

౮. నచక్షుషాగృహ్యతేనాపివాచానాన్యైర్దేవైస్తపసాకర్మణావా।
జ్ఞానప్రసాదేనవిశుద్ధసత్త్వస్తతస్తుతంపశ్యతేనిష్కలంధ్యాయమానః॥

(ப்-ம்.) (இந்தபரமபுருஷன்,) சக்ஷுஷா - கண்களினால், ந க்ருஹ்யதே - காணப்படுகிறதில்லை. வாசா - வாக்கினால், ந அபி -சொல்லப்படுவதுமில்லை. அந்யை: தேவை: - மற்ற இந்திரியங்களினாலும், ந - கிரக்கப்படுவதில்லை. தபஸா - தபஸ்ஸினாலாவது, கர்மணா வா - கருமத்தினாலாவது (அடையப்படுமவனல்லன்) ஜ்ஞாநப்ரஸாதேந-பரமாத்மாநுக்கிரகத்தினால், விஶுத்தஸத்த்வ: - அந்தக்கரணசுத்தி யுண்டாகிறது. தத: - பின்பு, த்யாயமாந: - த்யாநம்செய்யாநின்றுகொண்டு, நிஷ்கலம் - அவயவங்க ளில்லாதவனாயிருக்கிற, தம் - அந்த பரமபுருஷனை, பஶ்யதே - காண்கிறான்.

ஸம்-ஹா. இன்னமுமந்த பரமாத்மாவை ஸாக்ஷாத்கரிக்குமிடம் சொல்லப்படுகிறது: ரூபமில்லாமையால் கண்ணால் பார்க்கப்படாது. சொல்லப்படாமையால் வாக்குக்கு விஷயமல்ல. மற்றவைகளுக்கும் ஸாக்ஷாத்கார சக்தியில்லை. தபஸ்ஸும் கருமாநுஷ்டாநமும் மற்ற பலங்களுக்கு ஸாதநமாகையால் சிறந்ததாய் மற்ற பலங்களைக் கொடுக்குமாயினும் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணங்களல்ல. ஜ்ஞாநமே யதற்கு

http://acharya.org

ஸாதநமானது. எல்லா ப்ராணிகளுக்கு மிந்த ஜ்ஞாநமுண்டாயினும் ராகம் த்வேஷம் முதலியவற்றால் பாஹ்யவிஷயங்களை க்ரஹித்துக்கொண்டு சலங்கி யசுத்தமாயிருப்பதால் ஆத்மஸ்வரூபம் அதிஸமீபத்தில் நித்யமாயிருந்தாலு மதைக்காட்ட சக்தியில்லாததாயிருக்கின்றது. கண்ணாடியானது அழுக்கடைந்திருக்குமாயின் அது ஸூக்ஷமவஸ்துக்களைக் காட்டாதன்றோ; கலங்கிய தண்ணீரும் கலக்கம்தெளிந்த பின்னன்றோ பொருளைக் காட்டுவது. அப்படிபோலவே இந்த ஜ்ஞாநமும் இந்திரியத்திற்கும். பொருள்விஷயத்திலுண்டான ராகம் த்வேஷமுதலிய அழுக்கினால் விடுபட்டு எப்போது, ஸ்வச்சமாய் விளங்குமோ; அப்போது தெளிந்திருப்பதால் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகின்றது. ஆகையால் அவ்வாறு தெளிந்த ஜ்ஞாநமுடையவர் த்யாநம்செய்து நிரவயவனான பரமாத்மாவைப் பார்க்கிறார்கள் அப்படி தெளியாதவர் காண்பதில்லை.

பதாந்வயார்த்தபேதங்கள்.

ஜ்ஞாநசப்தம் பரமாத்மபரமாக இராமாநுஜபாஷ்யத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டது. ஆகவே பரமாத்மாநுக்கிரகத்தினால் தெளிந்த சிந்தையர் அவனைக் காண்கிறார்கள் என்று பொருளுரைக்கப்பட்டது.

௯. 𑌏𑌷𑍋𑌽𑌣𑍁𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍋 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌸𑌂𑌵𑌿𑌵𑍇𑌶 । 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌤𑌂 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌂 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 𑌵𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 ॥

౯. ఏషోఽణురాత్మా చేతసా వేదితవ్యో యస్మిన్ప్రాణః పంచధా సంవివేశ ।
ప్రాణైశ్చిత్తం సర్వమోతం ప్రజానాం యస్మిన్విశుద్ధే విభవత్యేష ఆత్మా ॥

(ப-ம்.) 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யாதொரு பரமாத்மாவினிடத்தில், 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾-அஞ்சுப் ரகாரமாயிருக்கிற, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌃 - ப்ராணவாயுவானது, 𑌸𑌂𑌵𑌿𑌵𑍇𑌶 - நிலைபெற்றிருக்கின்றதோ; 𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃 - இந்திரியங்களோடு, 𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 - மநஸ்ஸும், 𑌪𑍍𑌰𑌜𑌾𑌨𑌾𑌮𑍍 - ப்ரஜைகளினுடைய, 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍 - ஸமஸ்தமும், 𑌓𑌤𑌮𑍍 - வைக்கப்பட்டிருக்கிறதோ; 𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - யாதொரு பரமாத்மாவானவன், 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍇 - அநுக்ரஹமுடையவனால், 𑌏𑌷𑌃 𑌆𑌤𑍍𑌮𑌾 - இந்த ஜீவாத்மா, 𑌵𑌿𑌭𑌵𑌤𑌿 - முக்திபெறுகிறானோ; அப்படிப்பட்டவனாய், 𑌅𑌣𑍁𑌃 - அறியக்கூடாதவனாயிருக்கிற, 𑌏𑌷𑌃 - இந்த பரமபுருஷன், 𑌚𑍇𑌤𑌸𑌾-பரிசுத்தமநஸ்ஸினாலே, 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑌃 - அறியத்தக்கவன்.

௫௦-ஹா. பஞ்சப்ராணங்களுடைய சரீரத்தில் ஸகலேந்திரியங்களிலும் ப்ரஜைகளுக்கு முக்யமான சித்தம்முதலிய பேதங்களுடைய மநஸ்ஸினாலே பரமாத்மா அறியப்படுவன். எந்தமநஸ்ஸு சுத்தமானால் இந்த பரமாத்மாதானே விளங்குகிறானே.

௫௧-ஹா. எந்த பரமாத்மாநுக்ரஹத்தினா லிந்த ஜீவாத்மா முக்தனாகிறானே; அந்த பரமாத்மாநுக்ரஹத்தினால் அறியக்கூடாதவனா யிருந்தாலும் சுத்தமான மநஸ்ஸையுடையவனா யிருக்கிற இந்த ஜீவாத்மாவினாலே யறியப்படுகிறான்.

௧௦. 𑌯𑌂 𑌯𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌤𑌿 𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌃 𑌕𑌾𑌮𑌯𑌤𑍇 𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 । 𑌤𑌂 𑌤𑌂 𑌲𑍋𑌕𑌂 𑌜𑌯𑌤𑍇 𑌤𑌾𑌂𑌶𑍍𑌚 𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌂 𑌹𑍍𑌯𑌰𑍍𑌚𑌯𑍇𑌦𑍍𑌭𑍂𑌤𑌿𑌕𑌾𑌮𑌃 ॥

http://acharya.org

౧౦. యం యం లోకం మనసా సంవిభాతి విశుద్ధసత్త్వః కామయతే యాంశ్చ కామాన్ ।
తం తం లోకం జయతే తాంశ్చ కామాన్ తస్మాదాత్మజ్ఞం హ్యర్చయేద్భూతికామః ॥

(ப-ம்.) விசுத்தஸத்த்வ: - ஆத்ம ஸ்வரூபத்தை யறிந்தவன், யம்யம்லோகம் - எந்தஎந்த லோகத்தை, மநஸா - மநஸ்ஸினால், ஸம்விபாதி - ஸங்கல்பிக்கிறானோ, யாம்ச்ச காமாந் - எந்த இஷ்டங்களை, காமயதே - விரும்புகிறானோ; தம்தம்லோகம் - அந்தந்த லோகங்களையும், தாம்ச்ச காமாந் - அந்த இஷ்டங்களையும், ஜயதே - ஜயிக்கிறான், தஸ்மாத்-ஆகையால், பூதிகாம: - ஸம்பத்தை விரும்பினவன், ஆத்மஜ்ஞம் ஹி - ஆத்மஸ்வரூபத்தை யறிந்தவனை, அர்ச்சயேத் - பூஜிக்கக்கடவன்.

ஸ-ஹா. கீழ்ச்சொல்லியபடி ஸர்வாந்தராத்மாவாகிய பரமாத்மாவை தானேயென்றறிந்தவன், மநஸ்ஸினால் எந்தலோகங்களை ஸங்கல்பித்தாலும் எந்தலோகங்களை விரும்பினாலும் அதைஎல்லாம் பெறுகிறான். ஸர்வத்திற்கு மாத்மாவாகையால் ஸர்வத்தையு மடைந்தவனாகிறானன்றோ; ஆகையால் தனக்காயினும் பிறர்க்காயினும் எந்த இஷ்டத்தை விரும்பினாலு மந்த இஷ்டத்தைத் தானும்பெற்று பிறரும் பெறும்படி செய்யவல்லவன். ஆகையால் மங்களத்தை யாசைப்பட்டவன் அந்த ஜ்ஞாநியை சுச்ருஷைகளினால் பூஜிக்கக்கடவன்.

ரா-ஹா. தனக்கும் தன் பக்தருக்கும் நினைத்த இஷ்டங்களை யநுபவிக்கவும் தரவும் வல்லவனாகிறானாகையால் ஜ்ஞாநி, ஸம்பத்தை விரும்பிய புருஷனால் இவன் நம்முடைய சுச்ருஷை முதலியவற்றால் அநுக்ரகித்து நமக்குவேண்டிய வரங்களைத் தருவனென்று பக்தியுடன் பூஜிக்கத்தக்கவன்.

இதி த்ருதீயமுண்டகே ப்ரதமகண்ட:.

அத த்ருதீயமுண்டகே த்விதீயகண்ட:.

க. ஸவேதைதத்பரமம்ப்ரஹ்மதாம யத்ர விச்வம்நிஹிதம்பாதிசுப்ரம் | உபாஸதேபுருஷம்யேஹ்யகாமாஸ்தே சுக்ரமேதததிவர்த்தந்தி தீரா: ||

౧. స వేదైతత్పరమం బ్రహ్మధామ యత్ర విశ్వం నిహితం భాతి శుభ్రమ్ ।
ఉపాసతే పురుషం యే హ్యకామాస్తే శుక్రమేతదతివర్తన్తి ధీరాః ॥

(ப-ம்.) யத்ர - எந்த ப்ரம்மத்தினிடத்தில், நிஹிதம் - வைக்கப்பட்டிருக்கிற, விச்வம் - ஸமஸ்தமும், சுப்ரம் - ப்ரகாசமாய், பாதி - விளங்குகின்றதோ; ஏதத்பரமம்ப்ரஹ்ம - இப்படிப்பட்ட பரப்ரம்மஸ்வரூபமாயிருக்கிற, தாம - உத்தம ப்ராப்யத்தை, ஸ: - அந்த பக்தன், வேத - அறிந்தவன், ஆகையால், புருஷம் - அந்தபக்தனானபுருஷனை, அகாமா: - வேறு பலத்தில் விருப்பமில்லாதவர்களாய், யே - எந்த முமுக்ஷுக்கள், உபாஸதே - உபாஸிக்கிறார்களோ, தே தீரா: - அந்தமுமுக்ஷுக்கள், ஏதத் சுக்ரம் - இந்த சரமதாதுவை, அதிவர்த்தந்தி - அதிக்ரமிக்கிறார்கள்.

http://acharya.org

ஸம்-ஸா. ரா-ஸா. பக்தன் ப்ரம்மத்தை யறிந்தவனுகையால் அவனைப் பூசிப்பவர் அவனடைகிற பரமபதத்தை யடைகிருர்கள். ஆகையால் ப்ரம்மவித்தைப் பூசிப்பது மோக்ஷத்தை யடைவதற்குக் காரணம்.

௨. காமாந்ய꞉ காமயதே மந்யமாந꞉ ஸ காமபிர்ஜாயதே தத்ர தத்ர ।
பர்யாப்தகாமஸ்ய க்ருதாத்மநஸ்து இஹைவ ஸர்வே ப்ரவிலீயந்தி காமா꞉ ॥

2. కామాన్యః కామయతే మన్యమానః స కామభిర్జాయతే తత్ర తత్ర।
పర్యాప్తకామస్య కృతాత్మనస్తు ఇహైవ సర్వే ప్రవిలీయంతి కామాః ॥

(ப்-ம.) ய꞉ - எவன், காமாந் - காமங்களை, மந்யமாந꞉ - போக்யமாயெண்ணிக்கொண்டு, காமயதே - விரும்புகிருனே; ஸ꞉ - அவன், தத்ர தத்ர - அந்தந்த விடங்களில், காமபி꞉ - காமங்களினுல், ஜாயதே - பிறக்கிருன் பர்யாப்தகாமஸ்ய - ப்ரம்மத்தினிடத்தில்காமத்தையுடைய, க்ருதாத்மந꞉ து - ஆத்மவித்துக்கு, இஹைவ - இவ்விடத்திலேயே, ஸர்வே காமா꞉ - எல்லாக்காமங்களும், ப்ரவிலீயந்தி - ஒழிந்துபோகின்றன.

ஸம்-ஸா. முமுக்ஷுவுக்கு காமம் நீங்குவது முக்யமென்று சொல்லுகிறது. எவன் இவ்வுலகத்திலும சுவர்க்காதி லோகாந்தரங்களிலும் இஷ்டங்களை விரும்புகிருனே; அவைகளில் குணத்தைக் கிரகித்துக்கொண்டு அவைகளிலே சிந்தை வைக்கிருனே; அவன், அந்தந்த தேசங்களை யடைவிக்கிற கருமங்களில் புருஷனுக்கு ப்ரவ்ருத்தியை யுண்டாக்குகிற காமங்களோடு அந்தந்த தேசங்களிலுண்டாகிருன். யவன் பரமார்த்த தத்வத்தை யறிந்ததினுல் ஆத்மஸ்வரூபத்தைவேண்டி யடையப்பட்டவைகளில் போல ஆசைநீங்கி அவித்யை கழிந்த பரஸ்வரூபத்தைப்பெறுகிருனே; அவனுக்கு இந்த சரீரமிருக்கும்போதே ஸகல காமங்களிலு மாசைகழிந்து போகையால் ஜந்மாந்தரமில்லை. அப்படிப்பட்ட ஆத்ம ஸ்வரூப ஜ்ஞாநத்தால் ஜந்மாந்தரகாரணங் கழிந்துபோகையால் ஜந்மாந்தர காரணங்களான ஆசைகளு முண்டாகிறதில்லை என்று கருத்து.

ரா-ஸா. தேவமநுஷ்யாதி சரீரங்களை போக்யமாக எண்ணி யாசைப்படுகிறவன் அந்த காரணத்தா லவ்வாறே தேவஜாதியாகவும் மநுஷ்யஜாதியாகவும் பிறக்கிருன். ஆத்ம ஸ்வரூபத்தையறிந்து ப்ரம்மத்தை விரும்புகிறவனுக்கு ஸகல காமங்களு மழிந்து போகையால் ஜந்மாந்தரமில்லை.

௩. நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥

3. నాయమాత్మా ప్రవచనేన లభ్యో న మేధయా న బహునా శ్రుతేన ।
యమేవైష వృణుతే తేన లభ్యస్తస్యైష ఆత్మా వివృణుతే తనూం స్వామ్ ॥

(ப்-ம்.) அயம் - இந்த, ஆத்மா - பரமாத்மாவானவன், ப்ரவசநேந - மநநத்தினுலும், மேதயா - நிதித்யாஸநத்தாலும், பஹுநா - அதிகமான, ச்ருதேந - ச்ரவணத்தினுலும், ந லப்ய꞉ - அடையக்கூடியவனன்று. ஏஷ꞉ - இந்தபரமாத்மா, யமேவ - எவனை, வ்ருணுதே - வரிக்கிருனே;

𑌤𑍇𑌨 - அந்தபுருஷனால், 𑌲𑌭𑍍𑌯𑌃 - அடையத்தக்கவன். 𑌤𑌸𑍍𑌯 - அந்த புருஷனுக்கு, 𑌏𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 - இந்த பரமாத்மா, 𑌸𑍍𑌵𑌾𑌂 𑌤𑌨𑍂𑌂 - ஸ்வஸ்வரூபத்தை, 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇 - காட்டுகிறான்.

ஸ0-ஹா. ஸகல லாபங்களிலு மாத்மலாபம் சிறந்ததாயினும் கீழ்சொல்லப்பட்ட அந்த ஆத்ம ஸ்வரூபலாபம் புருஷார்த்தமாயினு மந்த ஆத்ம ஸ்வரூபத்தை யடைவதற்கு ப்ரவசநம்முதலிய பல ஸாதநங்கள் வேண்டுமோ; என்கிற ஸந்தேஹம் நீங்கச் சொல்லுகிறது. இவ்வாத்மா வேதசாஸத்ரங்களை விசேஷமாயோதி ப்ரவசநம் செய்கையாலும், கிரந்தங்களி னர்த்தங்களை தரித்துக்கொண்டிருக்கிற மேதையினாலும், அதிகமான சிரவணத்தாலும் அடையக் கூடியவனன்று. எப்போது மடையப்பட்ட ஸ்வபாவத்தை யுடையவனாகையால், அவனை யாசைப்பட்டுப் பெற விரும்பினமாத்திரத்தாலேயே யடையப்படுவான். அவனுக்கு அவித்யை நீங்கியபடியால் வெளிச்சத்தில் வஸ்துக்கள் தந்தம் ஸ்வரூபத்தைக் காட்டுவதுபோல ஜ்ஞாந ஸ்வரூபத்தில் ப்ரம்மாபேத ஸ்வரூபத்தை இந்த ஆத்மா காட்டுகிறது.

𑌭𑌾-ஹா. கேவலம் ச்ரவணம், மநநம், நிதித்யாஸநம், இவைகளா லிந்த பரமாத்மா அடையப்படமாட்டான், இந்த பரமாத்மா எந்த புருஷனை விரும்புகிறானோ அவனாலே யடையப்படுவான், அப்படி தன்னால் வரிக்கப்படுகிற, புருஷனுக்கு தன்னுடைய கல்யாணகுணங்களோடுகூடிய ஸ்வரூபத்தை பரமாத்மாகாட்டுகிறான். பரமாத்மாவினிடத்தில் மிகவும் விருப்பமுடையவனாய் ச்ரவணம் முதலியவை செய்தால் பரமாத்மாநுக்ரக முண்டாமேயன்றி வெறும் ச்ரவணாதிகள் பயனற்றவையாமென்று கருத்து. பரமாத்மா இந்த புருஷனை விரும்பும்போது தன்னிடத்தி லிந்த புருஷனுக்குள்ள அன்பே காரணம். தன்னிடத்தி லன்புடையோனைத் தான் விரும்புவது ப்ரஸித்தமேயன்றோ. ஆனதினால் பரமாத்மா, தன்னிடத்தி லன்பிலாதானைத் தான் விரும்பான். ஆக, ப்ரீதியோடுகூடி பரமாத்மாவை யுபாஸிக்கிறவன் அந்த பரமாத்மாவின் ப்ரீதிக்கிலக்காய் பரமபதத்தை யடைந்து பரிபூர்ணபர ப்ரம்மாநுபவத்தைப் பெறுவனென்றவாறு.

பதார்த்வயார்த்தபேதங்கள்.

சங்கரபாஷ்யத்தில், தேந, என்பதற்கு, பரமாத்மாவை வரிப்பதினாலென்று பொருளுரைக்கப்பட்டது. அப்போது 'யம், என்றதற்கு பரமாத்மாவை, என்று பொருள் கொண்டமையால், யச்சப்தத்திற்கும், தச்சப்தத்திற்கும் பொருள் பேதப்படுகிறது. அது 'யத்ததோர் நித்யஸம்பந்தஃ, என்கிற ந்யாயத்திற்கு விரோதமானதாகிலும், ஜீவாத்ம பரமாத்மாக்களுக்கு அபேதம் சொல்லும்போது அவ்வாறே பொருள் கொள்ளவேண்டி வருகையாலப்படி வ்யாக்யாநம் செய்யப்பட்டது. ச்ரவணம் மநநம் நிதித்யாஸநம் இவைகளின் ஸ்வரூபம், முன் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றவை பத உரைக் கிணங்க இராமாநுஜபாஷ்யத்தில் காண்க.

௪. 𑌨𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑌲𑌹𑍀𑌨𑍇𑌨 𑌲𑌭𑍍𑌯𑍋 𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌤𑍍𑌤𑌪𑌸𑍋 𑌵𑌾𑌪𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌏𑌤𑍈𑌰𑍁𑌪𑌾𑌯𑍈𑌰𑍍𑌯𑌤𑌤𑍇 𑌯𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌿𑌶𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌧𑌾𑌮 ॥

౪. నాయమాత్మాబలహీనేనలభ్యోనచప్రమాదాత్తపసోవాప్యలింగాత్ ।
ఏతైరుపాయైర్యతతేయస్తువిద్వాంస్తస్యైషఆత్మావిశతేబ్రహ్మధామ॥

http://acharya.org

(ப்-ம்.) நாயமாத்மா - இந்த பரமாத்மாவானவன், பலஹீநேந - பல மில்லாதவனால், ந லப்ய꞉ - அடையக்கூடியவனன்று. ப்ரமாதாத் - அவதான மில்லாமல், ந - அடையக்கூடியவனன்று. அலிங்காத் - லிங்கமில்லாத, தபஸ꞉ - ஆச்ரமத்தினாலும், ந - பெறத்தக்கவனுகான். யஸ்து வித்வாந் - எந்த உபாஸகன், ஏதை꞉ உபாயை꞉ - இந்த உபாயங்களோடு, யததே - யத்நம் செய்கிறானோ ; தஸ்ய - அவனுக்கு, ஏஷ꞉ ஆத்மா ப்ரஹ்மதாம - அந்தர்யாமியாய் ப்ராப்யமாயிருக்கிற இந்த ப்ரம்மஸ்வரூபம், விசதே - லபிக்கிறது.

ஶம்-பா. ஆத்ம ஸ்வரூபத்தை விரும்புகிறதற்கு ஸஹாயங்க ளிவையென்று சொல்லுகிறது. பலமும், அவதாநமும், தபஸ்ஸும், லிங்கமும் அதற்கு ஸாதநங்கள். இவை இல்லாதவனு லாத்மஸ்வரூப மடையப்படாது. பலமாவது ஆத்மநிஷ்டையினால் வந்த ஸாமர்த்த்யம். அவதாநமாவது பசுபுத்திரன் முதலியவற்றி லாசையில்லாமை. தபஸ்ஸாவது - ஜ்ஞாநம். லிங்கமாவது ஸந்யாஸம்.

ரா-பா. பலமாவது - தைந்யமில்லாமை, தைந்யமாவது - காலதேசங்கள் அநுகூலப்படாமையால் வந்த மநக்கலக்கம். அவதாநமாவது செய்யவேண்டிய விஷயங்களில் ஏமாறாமை. லிங்கமாவது அந்தந்த ஆச்ரமங்களுக்கு வேண்டிய அடையாளங்கள். தபஸ்ஸாவது - ஸந்யாஸாச்ரமம். ஆயினும், இவ்விடத்தில் எல்லா ஆச்ரமங்களையும் குறிக்கின்றது. எல்லா ஆச்ரமஸ்தரும் ப்ரம்மவித்யையி லதிகாரமுடையவரென்று சொல்லப்படுகையா லென்றறிக. இதில் ஸந்யாஸாச்ரமத்திற் கடையாளங்கள் சிகை, யஜ்ஞோபவீதம் கமண்டலு ஜலபவித்ரம் முதலியவை. இப்படி எல்லா ஆச்ரமங்களுக்கு மறிக. ஆக இதற்குத் திரண்டபொருளாவது பலம் அவதாநம், லிங்கத்தோடு கூடிய ஆச்ரமம் இவைகள் ப்ரம்ம ப்ராப்திக்கு ஸஹாயங்கள். இவை இன்றி ப்ரம்மத்தை யடையான். அவ்வோ ஆச்ரமங்களுக்கு விதித்த அடையாளங்களும், முக்யமானவை.

பதாந்வயார்த்தபேதங்கள்.

சங்கர ராமாநுஜ பாஷ்யங்களுக்குள்ள பதார்த்தபேதம் கருத்தில்பேதம் இவைகள் ஸ்புடமாயிருக்கின்றன.

ரு. ஸம்ப்ராப்யைநம்ருஷயோ ஜ்ஞாநத்ருப்தா꞉ க்ருதாத்மாநோ வீதராகா꞉ ப்ரசாந்தா꞉ । தே ஸர்வகம் ஸர்வத꞉ ப்ராப்ய தீரா யுக்தாத்மாந꞉ ஸர்வமேவாவிசந்தி ॥

౫. సంప్రాప్యైనమృషయో జ్ఞానతృప్తాః కృతాత్మానో వీతరాగాః ప్రశాన్తాః।
తే సర్వగం సర్వతః ప్రాప్య ధీరా యుక్తాత్మానః సర్వమేవావిశన్తి॥

(ப்-ம்) ருஷய꞉ - தத்வத்தை யறிந்தவர்கள், ஏநம் - இந்த பரமாத்மாவை, ஸம்ப்ராப்ய - அநுபவித்து, ஜ்ஞாநத்ருப்தா꞉ - அநுபவத்தாலே த்ருப்தி யடைந்தவர்களாய், க்ருதாத்மாந꞉ - ஸத்தைபெற்றவர்களாய், வீதராகா꞉ - விஷயங்களிலாசை நீங்கியவர்களாய், ப்ரசாந்தா꞉ - சாந்தகுண முடையவர்களாய், (யே - எவர்கள், ஸந்தி - இருக்கிறார்களோ;) தே - அவர்கள்,

http://acharya.org

𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌗𑌂 - எல்லாவஸ்துக்களிலு மெங்கும் நிறைந்திருக்கிற பரமாத்மாவை, 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 - பரமபதத்தில் ஸேவிக்கப்பெற்று, 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 - ஸ்வரூபாவிர்ப்பாவம்பெற்றவர்களாய், 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 - எல்லாசுகங்களையும், 𑌆𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 - அடைகிறார்கள்.

ஸ௦-ஹா. உபாதி நீங்கிய ப்ரம்ம ஸ்வரூபத்தை யறிந்தவர், இதர விஷயங்களில் நசையற்றவராய் குடமுடைந்தபின் குடத்தால் வரைந்து கொள்ளப்பட்டிருந்த ஆகாசம் உபாதிநீங்கி யாகாசமே யாவதுபோல தேஹோபாதி நீங்கி பரமாத்மாவே யாகின்றார்கள். இது ஜீவனுக்கும் ப்ரம்மத்துக்கும் அபேதத்தை யறிந்ததற்குப் பயனாகும். இவ்வாறே ப்ரம்மத்தை யறிந்தவர் ப்ரம்மஸ்தானத்தை யடைகிறார்கள்.

ரூ·ஹா. தத்வத்தை யறிந்தவர் ஜீவதசையிலேயே த்யானமாஹாத்ம்யத்தால் பரமாத்மாவை யநுபவித்து அவ்வநுபவத்தால் மகிழ்ந்த நெஞ்சினையுடையராய், ஸத்தைபெற்று விஷயங்களி லாசைநீங்கி, இந்த்ரிய ஜயம்பெற்றவராகி உள்ளும் வெளியுமெல்லா வஸ்துக்களிலும் பூர்ணனான பரமாத்மாவை பரமபதத்தில் ஸேவிக்கப்பெற்று அபஹதபாப்மத்வம் முதலிய குணங்கள் வெளியாகி தருமபூதஜ்ஞானத்தால் எல்லாவற்றையு மநுபவிக்கிறார்கள்.

௬. 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌦𑍍𑌯𑌤𑌯𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 | 𑌤𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇 ||

౬. వేదాంతవిజ్ఞానసునిశ్చితార్థాస్సన్న్యాసయోగాద్యతయశ్శుద్ధసత్వాః।
తే బ్రహ్మలోకేషుపరాన్తకాలే పరామృతాః పరిముచ్యంతి సర్వే॥

(ப-ம்.) 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍁𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 - வேதாந்தங்களை நன்குணர்ந்தமையால் தத்வார்த்தங்களை நிச்சயித்தவராய், 𑌸𑌂𑌨𑍍𑌯𑌾𑌸𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 - காம்யகருமங்களை விட்டபடியால், 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌃 - தெளிந்தநெஞ்சையுடையராய், 𑌯𑌤𑌯𑌃 - இந்திரியங்களை ஜயித்தவராயிருக்கிற, 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 - அந்த எல்லாஉபாஸகர்களும், 𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌲𑍇 - கடைசியாய் சரீரம்போகுங்காலத்தில், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 - ப்ரம்மலோகங்களில், 𑌪𑌰𑌾𑌮𑍃𑌤𑌾𑌃 - ப்ரம்மத்தையடைகிறவர்களாய், 𑌪𑌰𑌿𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 - விடுபடுகிறார்கள்.

ஸ௦-ஹா. வேதாந்தப்பொருளை நன்குணர்ந்தவராய், (வேதாந்தப்பொருளாவது - ப்ரம்ம மறியத்தக்கது, என்பதாம்.) இந்த நிச்சயம் பிறந்தவராய், கருமங்களெல்லாவற்றையும் விடுகையாகிற யோகத்தால் நெஞ்சு தெளிந்தவராய், கேவலப்ரம்ம நிஷ்டராய், யத்நம் செய்கிறவர்களாயிருக்கிற ஜ்ஞாநிகள், (ஸம்ஸாரிகள் மரணமடையுங் காலத்திற்கு அபராந்தமென்று பெயர். முமுக்ஷுக்கள் ஸம்ஸாரஸம் பந்தமற்று மரணத்தையடையுங் காலத்திற்கு பராந்தமென்று பெயர்.) பராந்த காலமென்கிற மரணகாலத்தில்,ப்ரம்மமாகிற உலகங்களில், (ப்ரம்ம மொன்றேயாயினும் உபாஸகர் பலராகையால், அநேகம் போல் காணப்படுதலால் பன்மையாலுரைக்கப்பட்டது. ப்ரம்மஸ்வரூபத்தி லென்று பொருள்) அந்த ப்ரம்மத்திலே மரண தர்மமில்லாத ப்ரம்மாத்ம பாவத்தை யடைந்தவராய் கலந்து,ஜீவதசையிலேயே ப்ரம்மமாகியவர்களாய்,தீபம் போலவும் கடாகாசம் போலவும் நிர்வாணமடைந்து மாயா ஸம்பந்த முதலியவற்றால் விடுபடுகிறார்கள். வேறொரு



http://acharya.org

தேசத்தை யடைகிறதில்லை. சுருதி ஸ்மிருதிகளில் தேசப்ராப்தி ஸம்ஸார பலமே யென்று சொல்லுகையால் முக்தியாகியது தேசப்ராப்தி யாகாது. ஸமஸ்தஸ்வரூப மான ப்ரம்மத்தில், தேசபரிச்சேதங் கிடையாது. ப்ரம்மம் தேசபரிச்சேத முளதாயின் மற்றவையைப்போ லநித்யமும் மற்றொன்றைப்பற்றியதுமாய் நித்ய ஸுகஸ்வரூபமாகா தன்றோ. ஆனதால் ப்ரம்ம ப்ராப்தியாவது தேசத்தைச் சேருவதல்லவென்பது யுக்தம்.

ரா.ஹா.—இந்திரியஜயம் பெற்றவர்களாய் காம்ய கருமங்களைவிட்டவராய் அந்தக் கரணசுத்தி யுடையவராய், ப்ரம்மநிஷ்டர்களாயிருக்கிற எல்லா உபாஸகரும், சரீராவ ஸாந காலத்தில் ப்ரம்மாநுக்ரஹத்தினால், ஸம்ஸாரம் நீங்கி முக்தராகிறார்கள்

பதாந்வயார்த்த பேதங்கள்.

இராமாநுஜ பாஷ்யத்தில் ப்ரம்மலோகேஷு, என்று ஒரு பாடமும், ப்ரம்மலோகேது, என்றொரு பாடமும் காட்டப்பட்டது. பகவானுக்கு அனேக லோகங்களுண்டாகையால், 'லோகேஷு' என்கிற பாடமும் ஸரி யானதேயாம். 'லோகேது' என்கிறபாடததில் ப்ராப்யமான ப்ரம்மத்தில் என்று, பொருள் கொள்ளப்பட்டது. மற்றவை இதற்கிசைய யோஜிக்கப் பட்டது.

௭. 𑌗𑌤𑌾𑌃 𑌕𑌲𑌾𑌃 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌦𑍇𑌵𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍇𑌵 𑌤𑌾𑌸𑍁 । 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌶𑍍𑌚 𑌆𑌤𑍍𑌮𑌾 𑌪𑌰𑍇𑌽𑌵𑍍𑌯𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵 𑌏𑌕𑍀𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 ॥

౭. గతాఃకలాఃపంచదశప్రతిష్ఠాదేవాశ్చసర్వేప్రతిదేవతాసు ।
కర్మాణివిజ్ఞానమయశ్చఆత్మాపరేవ్యయేసర్వఏకీభవంతి॥

(ப்-ம்.) 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 - பதினைந்தாயிருக்கிற, 𑌕𑌲𑌾𑌃 - ப்ராணாதிகலைகள், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 - காரணஸம்பந்தத்தை, 𑌗𑌤𑌾𑌃 - அடைகிறதுகள். 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑌾𑌃 - எல்லா இந்திரியங்களும், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍇𑌵𑌤𑌾𑌸𑍁 - அதிஷ்டாநதேவதைகளான ஸூர்யாதி தேவதைக ளிடத்தில் ஸம்பந்தத்தை யடைகின்றன, 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 - கருமங்களும், 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌯𑌃 - ஜ்ஞாநஸ்வரூபியான, 𑌆𑌤𑍍𑌮𑌾 - ஆத்மாவும், 𑌸𑌰𑍍𑌵𑍇 - எல்லாம், 𑌅𑌵𑍍𑌯𑌯𑍇 - அழிவில்லாத, 𑌪𑌰𑍇 - பரமாத்மாவில், 𑌏𑌕𑍀𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 - ஒன்றாய்விடுகிறதுகள்.

ஸ0-ஹா. அவித்யை முதலிய ஸம்ஸாரபந்தம் நீங்குவது மோக்ஷமென்று ப்ரம்ம வாதிகள் சொல்லுகிறார்கள். காரியமாமா யிருப்பது மோக்ஷமாகாது. ஆகையால் இவன் மோக்ஷமடையும்போது, இவனுடைய சரீரத்தில் காரணமாய்க் கலந்திருந்த கலைகளென் கிற ப்ராணன் முதலியவை பதினைந்தும், தந்தம் காரணங்களை யடைகின்றன. இந்தகலை களின் வகை ப்ரச்நோப நிஷத்து விளக்கிற்று. தேஹத்தில் கண்முதலிய விடங்ளிலி ருந்த இந்திரியங்கள் ஸூரியன் முதலிய தேவதைகளைச் சேருகின்றன. பலனைத் தரு வதற்குத் தொடங்கிய கருமங்கள் அநுபவித்தே யொழிக்கத்தக்கவை யாகையாலவை நீங்க, மற்ற கருமங்களும், அவித்யையினால் செய்யப்பட்ட புத்தி முதலிய உபாதிகளை யாத்மாக வெண்ணிக் கொண்டு ஜலம் முதலியவற்றில் ஸூர்ய ப்ரதிபிம்பம் போலிந்த சரீரங்களில் ப்ரவேசித்திருக்கிற ஆத்மாவும், கருமங்களுக்கு இவ்வாத்மா முக்தி தசை யில் ஸுகதுக்க ரூபமான பலனை யநுபவிக்கும்படி செய்ய வல்லமை யில்லாமையால், உபாதி நீங்கினபோது, பரமாய், அழிவில்லாததாய், விகாரமில்லாததாய், வ்யாபியாய், ஜந்ம ஜராமரண முதலாகிய துன்பமில்லாததாய், அபயமாய் அபூர்வமாய், சிறந்ததாய்

http://acharya.org

உள்வெளி பேதமில்லாததாய், சிவமாய் சாந்தமாயிருக்கிற ப்ரமமத்தில் ஒன்றாய்க் கலந்து போகின்றன. தண்ணீர் சோர்ந்தபோது ஸூரிய பிம்பம் போலவும், குடமுடைந்த போது கண்டாகாசம்போலவு மெல்லா மொன்றாய் விடுகின்றன.

ரா-ஹா. முக்தனாகிற ஜீவனுக்கு உபகாரமாக ப்ரச்நோபநிஷத்தில் சொல்லப் பட்ட ப்ராணன் முதல் நாமம் வரையிலுள்ள பதினாறு கலைகளில் கருமம் தவிர்ந்த பதி னைந்தும் தந்தம் காரணங்களில் ஒட்டிப் போகின்றன. வாக்கு முதலிய இந்திரியங்கள் அதிஷ்டாந தேவதைகளாகிய ஸூரியன் முதலியவற்றில், சேருகின்றன. இவ்வளவே யொழிய லயிப்பதில்லை. இந்திரியங்கள் கல்பாந்தம்வரையி லிருப்பவையன்றோ. இது வ்யாஸ ஸூத்திரத்தினால் செவ்வையாய் விளங்கும். இவனுக்கு பயனைக் கொடாதவை யாய், இவன் ப்ரத்யக்ஷம்போல பாவிக்கிற உபாசனையைத் தொடங்கும்போது, நான் பொறுப்பேன், என்று பகவான் சங்கல்பித்தவையான, கருமங்களும், இவ்வாத்மாவும் எல்லாவற்றிற்கும் பரமான பரப்ரம்மத்தில் ஒன்றாய் விடுகின்றன. இவற்றுள், கருமம் ப்ரம்மத்தி லொன்றாகையாவது இக்கருமம் பரமாத்மாவின் கோபமே யாகையால், இந்த கோபாவஸ்தை மாறி தருமபூதஜ்ஞாநத்தில் லயிப்பதேயாம். ஜீவன், ப்ரம்மத்தி லொ ன்றாகையாவது நாமரூபமுதலியவற்றால் வருகிற ஆகார பேதம் கழிவது. ஆக, இவ னுக்கு கருமங்கள் நசிக்கின்றமையால், முக்தாத்மாவுக்கு கலைகளென்கிற ப்ராணாதிகள் உபகரணங்களாவதில்லை யென்று கருத்து.

௮. 𑌯𑌥𑌾 𑌨𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑌿𑌹𑌾𑌯 ।
𑌤𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑍍 ॥

౮. యథానద్యస్స్యన్దమానాస్సముద్రేஅస్తంగచ్ఛంతినామరూపేవిహాయ ।
తథావిద్వాన్నామరూపాద్విముక్తఃపరాత్పరంపురుషముపైతిదివ్యమ్॥

(ப்-ம்.) 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃 - ப்ரவஹியாநின்ற, 𑌨𑌦𑍍𑌯𑌃 - நதிகள், 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇 - ஸமுத்திரத்தில், 𑌯𑌥𑌾 - எவ்வாறு, 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 - நாமரூபங்களை, 𑌵𑌿𑌹𑌾𑌯 - விட்டு, 𑌅𑌸𑍍𑌤𑌂𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 - ஐக்யத்தை யடைகின்றனவோ; 𑌤𑌥𑌾 - அவ்வாறே, 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 - உபாஸகன், 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌤𑍍-நாமரூபங்களால், 𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃- விடப்பட்டவனாய், 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂𑌦𑌿𑌵𑍍𑌯𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌂𑌉𑌪𑍈𑌤𑌿 - பராத்பரனாய் விளங்குகிற பரமபுருஷனை, யடைகிறான்.

ஸம்-ஹா. அவித்யை கழிந்து ப்ரம்மத்தோடு ஐக்யம் பெறுவதில் நதிகள் த்ருஷ்டா ந்தம்.

ரா-ஹா—முக்தஜீவன் பரப்ரம்மத்தோடு ஐக்யமடைகிறா னென்றதினால்வந்த ஸந் தேஹம் கழியுண்ணும்படி த்ருஷ்டாந்தத்துடன்; விஸ்தரிக்கிறது. எவ்வாறு கங்கை, யமுனை, ஸரஸ்வதி, முதலிய ஆறுகள், தாம் பிறக்கு மிடங்களினின்றும், ப்ரவஹி த்து, கங்கை கங்கை என்கிற பெயரையும் வெளுத்த ரூபத்தையும், யமுனை, யமுனை என்கிற பெயரையும், கறுப்பு ரூபத்தையும், ஸரஸ்வதி, ஸரஸ்வதி என்கிற பெயரையும், சிவந்த ரூபத்தையும் இவ்வாறு மற்றுள்ளவாறுகள் அவைகளுக்குள்ள பெயரையும் ரூபத் தையும்விட்டு, ஸமுத்திரத்தி லொன்றாய்க் கலந்து போகின்றனவோ; அவ்வாறே வித்வா னாகிய உபாஸகன், பேதத்தைக் காட்டித்தருகிற நாமத்தையும் ரூபத்தையும் மற்ற உபா திகளையும், விட்டு, பரமபுருஷனை யடைகிறான். இத்தால் ஆற்று நீருக்கும் கடல் நீருக் கும், வாஸ்தவத்தில் பேதமுண்டானாலும் கடலில் கலந்தபின் அவ்வேறுபாட்டைக்

http://acharya.org

காட்டுகிற ரூபம் (அதாவது நிறம்) அழிவதால் பேருமழிந்து, ஒன்றுபோல் தோற்றுவது போல, பரமாத்மாவுக்கு மிந்த ஜீவாத்மாவுக்கும் பேதத்தைக் காட்டுகிற ரூபநாமங்கள் முக்தி காலத்தி லழிகின்றமையால் ஒன்றுபோல் பேதமின்றித் தோன்றுவதொழிய பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கும் வாஸ்தவத்தில் ஐக்கியமில்லை அபேதமில்லை. இப்படியே முன்னமே முக்தராயிருக்கிற ஆத்மாக்களோடும் அபேதமில்லை. பரமாத்மாவேயென லாம் படிஸமாநமா யிருக்கையே முக்தி என்று வெளியாக்கப்பட்டது. ஆனதால் கடவல்லி உபநிஷத்திலும்; மஹா ஜலத்தில் கலந்த நீர் அதுபோலவே யாவதுபோல், என்று சாம்யஞ் சொல்லப்பட்டதே யன்றி அபேத மோதப்படவில்லை. இங்கு மதாந்தரத்தில் அநேகாவயங்களுக்கும் ஐக்யமுண்டாவதுபோல ஜீவ பரமாத் மைக்யம் சொல்லலாமே யெனில் அது தகாது. நிர்க்குணவித்யையாக சங்கரமதத்தி லொப்புக்கொள்ளப்பட்ட ப்ரஜாபதிவித்யையில், ஜீவப்ரம்மங்களுக்கு பேதத்தையும் ஸத்யகாமத்வம், ஸத்யசங்கல்பத்வம், முதலிய குணங்களையும் சொல்லுகின்றமையாலும், "உத்தராச்சேதா விர்பூதஸ்ரூபஸ்து" என்கிற ஸூத்திரத்தில் முக்தியி லந்த குணங்களை யடைவது அந்த வித்யைக் குபலமென்னு சங்கர பாஷ்யத்தி லொப்புக்கொள்ளுகின்றமையாலும், முக்தியில் பேத சூந்யமான ப்ரம்மத்தோடு ஐக்யமென்று சொல்லுவது பொருத்தமற்றதேயாம். இதுகள் ஸ்வரூப மாத்திரம் என்று சொல்லுவது கூடாதென்பது பல யுக்திகளாலும், தகாதென்று ஸ்பஷ்டமாய் விளங்குகின்றது. ஆனதால் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கு மபேதமுரைப்பது அசங்கதமாம்.

௯. 𑌸𑌯𑍋𑌹𑌵𑍈𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍇𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌭𑌵𑌤𑌿𑌨𑌾𑌸𑍍𑌯𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌕𑍁𑌲𑍇𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌰𑌤𑌿𑌶𑍋𑌕𑌂𑌤𑌰𑌤𑌿𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂𑌗𑍁𑌹𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌭𑍍𑌯𑍋𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌮𑍃𑌤𑍋𑌭𑌵𑌤𑌿 ॥

౯. సయోహవైతత్పరమంబ్రహ్మవేదబ్రహ్మైవభవతినాస్యాబ్రహ్మవిత్కులేభవతి।
తరతిశోకంతరతిపాప్మానంగుహాగ్రంథిభ్యోవిముక్తోమృతోభవతి॥

(ப-ம்.) 𑌯𑌃 𑌹𑌵𑍈 - யவனொருவன், 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍇𑌦 - அந்த பரப்ரம்மத்தை யறிகிறானோ; 𑌸𑌃 - அவன், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌭𑌵𑌤𑌿 - ப்ரம்மமே யாகிறான், 𑌅𑌸𑍍𑌯𑌕𑍁𑌲𑍇 - இவன்வம்சத்தில், 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌤𑍍𑌨𑌭𑌵𑌤𑌿 - ப்ரம்ம தத்வத்தை யறியாதவன் பிறப்பதில்லை. 𑌶𑍋𑌕𑌂𑌤𑌰𑌤𑌿 - சோகமற்றவனாகிறான், 𑌪𑌾𑌪𑍍𑌮𑌾𑌨𑌂𑌤𑌰𑌤𑌿 - பாபமற்றவனாகிறான், 𑌗𑍁𑌹𑌾𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌭𑍍𑌯𑍋𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃, ராகத்வேஷங்கள் நீங்கியவனாய், 𑌅𑌮𑍃𑌤𑌃 - போக்யனாய், 𑌭𑌵𑌤𑌿 - ஆகிறான்.

௯0-ஹா. நல்ல காரியத்திற்கு அனேக விக்நங்கள் வருவது இயல்பாதலால் இந்த வித்வானு மொருக்கால் சில கெடுதிகளா லங்கதியை யடைவானோ என்கிற சம்சயம் தீர்த்து இவனுக்கு அவித்யை யொழியவேறு விக்நமில்லாமையால் அது தத்வஜ்ஞானத்தால் கழிந்தபடியால் ஆத்மா, தானே யாகையால் இதற்கு தேவதைகளாலும் விக்நம் செய்ய முடியாது என்கிறது. விசேஷம் முன்னமே யுரைக்கப்பட்டது.

௯-ஹா. ப்ரம்மத்தை யறிந்து த்யானித்து நிச்சல ஸ்ம்ருதி பெற்று ப்ரத்யக்ஷம் போலான பக்தியைச் செய்தவன், தப்பாமல் ப்ரம்மம்போலவே யாகிறான். இவனுக்கு குணாஷ்டக முதிக்கிறது. மற்றவை ஸ்பஷ்டமானதால் விரிக்கப்படவில்லை.

http://acharya.org

௧௦. 𑌤𑌦𑍇𑌤𑌦𑍃𑌚𑌾𑌭𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤 𑌏𑌕𑌰𑍍𑌷𑌿𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 । 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑍈𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌦𑍇𑌤 𑌶𑌿𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌦𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍁 𑌚𑍀𑌰𑍍𑌣𑌮𑍍॥

౧౦. తదేతదృచాభ్యుక్తం క్రియావన్తః శ్రోత్రియా బ్రహ్మనిష్ఠాః స్వయం జుహ్వత ఏకర్షిం శ్రద్ధయన్తః । తేషామేవైతాం బ్రహ్మవిద్యాం వదేత శిరోవ్రతం విధివద్యైస్తు చీర్ణమ్॥

(ப-ம்.) 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 - இந்தப்ரம்மவித்யாஸம்பந்தவிதியானது, 𑌋𑌚𑌾 - இருக்கினால், 𑌅𑌭𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 - சொல்லப்பட்டது. 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌵𑌨𑍍𑌤𑌃 - கருமாநுஷ்டாநபரர்களாயும், 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 - வேதாத்யயனம் செய்தவர்களாயும், 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 - பரமாத்மநிஷ்டை யுடையவர்களாயும், 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌨𑍍𑌤𑌃 - சிரத்தையுடையவர்களாயும், 𑌏𑌕𑌰𑍍𑌷𑌿𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌜𑍁𑌹𑍍𑌵𑌤𑍇 - அக்நிஹோத்ரிகளாயும், 𑌶𑌿𑌰𑍋𑌵𑍍𑌰𑌤𑌂 𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍 𑌯𑍈𑌃 𑌤𑍁 𑌚𑍀𑌰𑍍𑌣𑌂 - சாஸ்திரப்படி வேதவ்ரதத்தை யநுஷ்டித்தவர்களாயு மிருக்கிற, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌏𑌵 - அவர்களுக்கே, 𑌏𑌤𑌾𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌵𑌦𑍇𑌤 - இந்தப்ரம்மவித்யையை யுபதேசிக்கக்கடவன்.

ஶ௦-ஹா. இதற்கு பரம்பரை லக்ஷணம் கூறி முடிக்கிறது. ப்ரம்மஜ்ஞாநத்தில் விருப்பமுடையவர்களாயிருக்கிறவர்களுக்கு இது உபதேசிக்கத்தக்கது.

ரா-ா. பஞ்சமஹாயஜ்ஞம் முதலியவை செய்கிறவர்கள் வேதத்தை யோதினவர்களுமிதற்குத்தக்கவர்கள்.

பதாந்வயார்த்த பேதங்கள்.

பதஉரையைப்போலவே இரண்டு பாஷ்யங்களுக்கும்கருத்து. விசேஷங்களில்லை. மற்ற விசாரங்கள் ஸூத்திர பாஷ்யத்தில் காண்க.

கக. 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌮𑍃𑌷𑌿𑌰𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃 𑌪𑍁𑌰𑍋𑌵𑌾𑌚 𑌨𑍈𑌤𑌦𑌚𑍀𑌰𑍍𑌣𑌵𑍍𑌰𑌤𑍋𑌽𑌧𑍀𑌤𑍇 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑍋 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃॥

౧౧. తదేతత్సత్యమృషిరఙ్గిరాః పురోవాచ నైతదచీర్ణ-
వ్రతోఽధీతే నమః పరమఋషిభ్యో నమః పరమఋషిభ్యః॥

(ப-ம்.) 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌂 - அப்படிப்பட்ட இந்த அக்ஷரப்ரம்மஸத்யஸ்வரூபத்தை, 𑌅𑌙𑍍𑌗𑌿𑌰𑌾𑌃 𑌋𑌷𑌿𑌃 -அங்கிரஸ்ஸென்கிற ருஷியானவர், 𑌪𑍁𑌰𑌾 𑌉𑌵𑌾𑌚 - முதலிலுபதேசித்தார். 𑌅𑌚𑍀𑌰𑍍𑌣𑌵𑍍𑌰𑌤𑌃 - சிரோவ்ரதம் செய்யாதவர், 𑌏𑌤𑌤𑍍 - இதை, 𑌨 𑌅𑌧𑍀𑌤𑍇 - அத்யயநம்பண்ணக்கூடாது. 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 𑌨𑌮𑌃 𑌪𑌰𑌮𑌋𑌷𑌿𑌭𑍍𑌯𑌃 𑌨𑌮𑌃 - ஆசார்யபரம்பரையில் சேர்ந்தமகர்ஷிக்கு நமஸ்காரங்கள்.

ஶ௦-ஹா. இந்த அக்ஷர ஸ்வரூபத்தை அங்கிரஸ்ஸூயென்கிற ருஷியானவர் விதிப்படிவந்து கிட்டின சௌநகருக் குபதேசித்தார். ஆகையால் இப்படியே முமுக்ஷுவாய் விதிப்படி வந்துகிட்டின சிஷ்யனுக் குபதேசிக்கக்கடவன். இந்த உபநிஷத்தை சிரோவ்ரதமென்கிற விதியைச் செய்யாதார் அதயநம் செய்யக்கூடாது. அந்த ஸம்ஸ்காரம் பல

http://acharya.org

த்தைத்தருவதி லநுகூலமானது. இந்த ப்ரம்மவித்யைமுடிந்தது. இது எந்த ப்ரம்மா துடங்கி பரம்பரையாய் வந்ததோ அப்படியா சார்ய பரம்பரையில் சேர்ந்த அந்த ப்ரம்மா முதலுள்ள அனைவருக்கும் அநேக நமஸ்காரம். அவர்களேயன்றோ ப்ரம்மஸா க்ஷாத்காரம் பெற்றூர்கள். ஆதரத்தா லிரட்டித்துச் செல்லுகிறது. அன்றியே முண்ட கோபநிஷத்து முடிந்ததென் றறிவித்தலு மொரு பயன்.

ஙா-ஹா. அத்யாபநம் என்பது ஓதிவித்தல் அத்யயநம் ஓதல். முன் மந்திரத்தில் அத்யாபநம் சிரோவ்ரதம் செய்யாதவனுக்குத் தகாது அவனுக்குச் சொல்லக்கூடாது; என்று கூறப்பட்டது. இந்த மந்திரத்தில் சிரோவ்ரதம் செய்யாதவன், இதை அத்யயநம் செய்யக்கூடாதென்று சொல்லுகிறது என்று பேதமறிக.

பதாந்வயார்த்த பேதங்கள்.

புரோவாச என்று சங்கர பாஷ்யததில் பாடம். ப்ரோவாசஎன்று இராமாநுஜ பாஷ்யத்தில் பாடம், மற்ற கருத்தில் பேதமில்லை.

ஙா-ஹா. இம்முண்டகோபநிஷத்து முழுதும் நாராயணனையே கூறுகிறதென்று வ்யாச சூத்திரங்களில் ஒன்பது சூத்திரங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது ஆகையால் இது முழுதும் நாராயணனையே பேசுகிறது.

𑌇𑌤𑌿 𑌤𑍃𑌤𑍀𑌯𑌮𑍁𑌣𑍍𑌡𑌕𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃 𑌖𑌣𑍍𑌡𑌃.

முண்டகோபநிஷத் முற்றும்.

𑌹𑌰𑌿𑌃 𑌓𑌮𑍍.

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌮𑌾𑌣𑍍𑌡𑍂𑌕𑍍𑌯𑍋𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌪𑍍𑌰𑌥𑌮𑌖𑌣𑍍𑌡𑌃.

க. 𑌓𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌕𑍍𑌷𑌰𑌮𑌿𑌦𑌂𑌸𑌰𑍍𑌵𑌂𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂𑌭𑍂𑌤𑌂𑌭𑌵𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌦𑌿𑌤𑌿𑌸𑌰𑍍𑌵𑌮𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌏𑌵 । 𑌯𑌚𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂𑌤𑌦𑌪𑍍𑌯𑍋𑌙𑍍𑌕𑌾𑌰𑌏𑌵॥ க॥

౧. ఓమిత్యేతదక్షరమిదం సర్వంతస్యోపవ్యాఖ్యానంభూతంభవద్ భవిష్యదితిసర్వమోంకారఏవయచ్చాన్యత్ త్రికాలాతీతంతదప్యోంకారఏవ॥ ౧॥

(ப-ம்.) 𑌇𑌦𑌂 - இந்த, 𑌸𑌰𑍍𑌵𑌂 - யெல்லாவுலகமும், 𑌓𑌮𑌿𑌤𑌿 - ஓமென்று சொல்லப்படுகிற, 𑌏𑌤𑌤𑍍 - இந்த, 𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 - எழுத்து. 𑌤𑌸𑍍𑌯 - அந்தயெழுத்திற்கு, 𑌉𑌪𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌂 - விரிவானபொருள், (𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 - சொல்லப்படுகிறது.) 𑌭𑍂𑌤𑌂 - சென்றது, 𑌭𑌵𑌤𑍍 - நிகழ்கிறது, 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍 - வருவது 𑌇𑌤𑌿 - என்கிற, 𑌸𑌰𑍍𑌵𑌂 - எல்லாவுலகமும், 𑌓𑌂𑌕𑌾𑌰𑌏𑌵 - ஓமென்கிற எழுத்தாலே, 𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌲𑌾𑌤𑍀𑌤𑌂 - மேற்கூறிய மூன்று காலங்களிலு மடங்காத, 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 - வேறாகிய, 𑌯𑌤𑍍 - யாதொருவஸ்துவிருக்கிறதோ, 𑌤𑌦𑌪𑌿 - அந்தவஸ்துவும், 𑌓𑌂𑌕𑌾𑌰𑌏𑌵 - ஓமென்னும் எழுத்துதான்.

ஸம்-ஹா. இவ்வுபநிஷத்து ப்ரணவத்யாநவிதிகூறுகின்றது. ஸகலவஸ்துக்களையும் சொல்லும் வார்த்தைகளுக்கு ஓங்காரமே காரணமாகையாலும் யெல்லாப்பொருள்களுக்கும்ப்ரம்மமே இடமாகையாலும்பொருள்களும்பெயரும் ஒன்றாகையாலும் ஓங்காரத்தின் பொருளும் பிரம்மமாகையாலும் ஓங்காரமே யெல்லாப்பொருள்களும் என்று சொல்லப்படுகிறது. 'இவ்வாறே' எல்லாப்பொருளு மோங்காரமே, இவைமுதலிய வேதங்களைக் கண்டுகொள்வது.

பா-ஹா. இந்த மாண்டூக்யத்தி லோங்காரோபாஸநத்தை விதிக்கின்றது. நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட ப்ரணவத்தை நான்குபாதங்களோடு கூடின ப்ரம்மமாக தியானிக்கச்சொல்வதற்கு இந்தப் பிரகரணம் ஆரம்பிக்கப்படுகின்றது. ப்ரணவத்தில்நின்றும் உண்டான வ்யாஹ்ருதிகளில்நின்றும் உண்டாகிய வேதங்களைக்கொண்டு இப்புவனங்கள் படைக்கப்பட்டதாதலால் இவ்வுலகங்களை ஓங்காரமென்று சொல்லுகிறது. அப்ப்ரணவத்தை தியாநிக்கவேண்டியவிதிகள் விரிவாய்சொல்லப்படுகின்றன. இவ்வுலகங்கள் ஓம் என்றுசொல்லப்பட்ட அக்ஷரமே என்று, அதின்விரிவுகள்சொல்லப்படுகின்றன. மூன்று காலங்களிலும் வேறுபாடில்லாததும் மேற்கூறியகாலங்களில் அடங்காமலிருப்பதும் மேற்கூறிய ப்ரணவமே.

உ. 𑌸𑌰𑍍𑌵𑌂𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍋𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌾𑌤𑍍॥ உ॥

౨. సర్వం హ్యేతత్ బ్రహ్మాయమాత్మాబ్రహ్మసోయమాత్మాచతుష్పాత్॥ ౨॥

http://acharya.org

த்தைத்தருவதி லநுகூலமானது. இந்த ப்ரம்மவித்யைமுடிந்தது. இது எந்த ப்ரம்மா
துடங்கி பரம்பரையாய் வந்ததோ அப்படியா சார்ய பரம்பரையில் சேர்ந்த அந்த
ப்ரம்மா முதலுள்ள அனைவருக்கும் அநேக நமஸ்காரம். அவர்களேயன்றோ ப்ரம்மஸா
க்ஷாத்காரம் பெற்றூர்கள். ஆதரத்தா லிரட்டித்துச் செல்லுகிறது. அன்றியே முண்ட
கோபநிஷத்து முடிந்ததென் றறிவித்தலு மொரு பயன்.

ரா-ஹா. அத்யாபநம் என்பது ஓதிவித்தல் அத்யயநம் ஓதல். முன் மந்திரத்தில்
அத்யாபநம் சிரோவ்ரதம் செய்யாதவனுக்குத் தகாது அவனுக்குச் சொல்லக்கூடாது;
என்று கூறப்பட்டது. இந்த மந்திரத்தில் சிரோவ்ரதம் செய்யாதவன், இதை அத்யயநம்
செய்யக்கூடாதென்று சொல்லுகிறது என்று பேதமறிக.

பதாந்வயார்த்த பேதங்கள்.

புரோவாச என்று சங்கர பாஷ்யததில் பாடம். ப்ரோவாசஎன்று இரா
மாநுஜ பாஷ்யத்தில் பாடம், மற்ற கருத்தில் பேதமில்லை.

ரா-ஹா. இம்முண்டகோபநிஷத்து முழுதும் நாராயணனையே கூறுகிறதென்று
வ்யாச சூத்திரங்களில் ஒன்பது சூத்திரங்களால் வெளியிடப்பட்டிருக்கிறது ஆகையால்
இது முழுதும் நாராயணனையே பேசுகிறது.

இதி த்ருதீயமுண்டகே த்விதீய: கண்ட:.

முண்டகோபநிஷத் முற்றும்.